RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

மலர்:- 30, 01 செப்டம்பர் 2023 இதழ்:- 16

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது? குற்றவாளிகள் பொறுப்புக் கூற வேண்டும் - ஐ.நா.பிரதிநிதி!



வலிந்து காணாமலாக்கப்படுதல் குறித்த பாரம்பரியத்திற்கு தீர்வை காண்பது வெறுமனே நீதியுடன் தொடர்புபட்ட விடயம் மாத்திரமில்லை முன்னேற்றம் பேண்தகு அபிவிருத்தி போன்ற பாதையை இலங்கை உருவாக்குவதற்கும் மிகவும் அவசியமானது என ஐக்கியநாடுகளின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ரூ பிரான்ஸ் தெரிவித்துள்ளார் அறிக்கையொன்றில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. உலகம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை குறிக்கும் நிகழ்வுகளில் ஈடுபட்டுள்ள அதே வேளை இந்த ஈவிரக்கமற்ற குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் (3ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்திற்கு வெளியில் வந்து கதையுங்கள்! சரத்வீரசேகராவின் கருத்துக்கு சட்டத்தரணிகள் சவால்!



பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர பாராளுமன்றுக்குள் இருந்து கொண்டு கதைக்காமல் தைரியமிருந்தால் வெளியில் வந்து கதைக்குமாறு வவுனியா சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர தெரிவித்த கருத்துக்களுக்கு கண்டனம் தெரிவித்து வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஒரு மணி நேர பணிப் புறக்கணிப்பும் ஆர்ப்பாட்டமும் 25 ஆகஸ்ட் 2023 வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.(7ம் பக்கம் பார்க்க)

## தமிழர் தெருவிழா 2023 :- திரண்ட தமிழர்கள்



கடந்த ஆகஸ்ட் 26,27 திகதிகளில் இடம் பெற்ற தமிழர் தெருவிழாவில் இவ்வாண்டு வழமைக்கு மாறாக பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். சிறப்பான நேர்த்தியான நிகழ்வினை செய்து முடித்த பேரவைத்தலைவர் சிவன் இளங்கோ நிர்வாகிகள், நிறைவேற்றுப் பணிப்பாளர் டன்ரன் மற்றும் தொண்டர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள்! வாழ்த்துக்கள்!

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக
உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL
THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX
ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*




## Siva Kandiah
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com


Team SIVA
WILL BRING THE BEST RESULTS!


## Piravien Siva
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com





20 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Simcoe St N & Conlin Rd



**Oshawa** $314,900
Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University

### Tecumesh Rd E & Hall Ave


**Windsor** $349,000
Bedrooms: 3+3 Washrooms: 4
Perfect For Investors

### Markham & Eglinton


**Scarborough** $529,900
Bedrooms: 2 Washrooms: 2
Location!! Location!! Location!

### Dundas/Hurontario St


**Mississauga** $599,000
Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building

### Bramalea Rd & Queen St



**Brampton** $590,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Finished Basement

### Lawrence & Morningside


**Scarborough** $629,900
Bedrooms: 3 Washrooms: 1
Townhouse W/Large living area

### York St / Bremmer Blvd


**Toronto** $610,000
Bedrooms: 1+1 Washrooms: 1
Easy Access To Union Station

### Markham Rd & Denison


**Markham** $635,999
Bedrooms: 1+1 Washrooms: 1
Low Maintenance Fees.

### Taunton & Ritson


**Oshawa** $699,000
Bedrooms: 3+1 Washrooms: 3
Upgraded floors throughout the home

### Main St. E & Russell St.


**Southgate** $999,000
Bedrooms: 4 Washrooms: 3
3063 Sq Ft Bright & Spacious Home

### Meadowvale & 401


**Scarborough** $995,000
Bedrooms: 3+2 Washrooms: 2
Brand New Entertainment Enclosure

### Brimley Rd / St. Clair Ave


**Scarborough** $1,224,900
Bedrooms: 3+1 Washrooms: 4
All Renovated Washrooms

### Meadowvale / 401


**Scarborough** $1,799,995
Bedrooms: 4+3 Washrooms: 5
Extensively Renovated

### Bayview & Major Mac


**Richmond Hill** $1,499,900
Bedrooms: 3+1 Washrooms: 4
Lots Of Upgrades!

### 9th Line/14th Ave


**Markham** $1,799,000
Bedrooms: 4+1 Washrooms: 4
Newly Renovated Luxury Home

### Commercial/Retail



**Grey Highlands** $7,200,000
Dollarama And Tim Hortons.
Newly Built Tim Hortons Building

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது? குற்றவாளிகள் பொறுப்புக் கூற வேண்டும் - ஐ.நா.பிரதிநிதி!



பாதிக்கப்பட்டவர்கள் உயிர்பிழைத்தவர்கள் குடும்பத்தவர்களுக்கு மிகவும் அவசியமான விடயம். இதன் மூலம் மாத்திரமே காயங்களை ஆற்றும் நடவடிக்கை ஆரம்பமாக முடியும். நல்லிணக்க செயற்பாடுகள் ஆரம்பமாக முடியும்.

முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதே வேளை இந்த ஈவிரக்கமற்ற குற்றங் களால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் அன்புக்குரியவர்கள் எப்படி உள்ளனர் அவர்களுக்கு என்ன நடந்தது என் பதை அறியமுடியாத வேதனையை அனுபவித்தவர்கள் குறித்து எங்கள் சிந்தனைகள் திரும்புகின்றன.

இந்த தினம் இலங்கையில் ஆழமான பிரதிபலிப்புகளை கொண்டுள்ளது இங்கு பல வருடங்களாக பல குடும்ப ங்களும் சமூகங்களும் நிச்சயமற்ற தன்மை மற்றும் துயரத்தை எதிர் கொண்டுள்ளதுடன் பதில்கள் அற்ற கேள்விகளின் நிழல்களில் வாழ நிர்ப்ப ந்திக்கப்பட்டுள்ளனர்.

வலிந்து காணாமலாக்கப்படல் என்பது நாட்டின் வரலாற்றின் துயர்படிந்த கறையை விட்டுச் சென்றுள்ளது. நிச்சயமற்ற நிலையில் வாழும் ஆயிரக் கணக்கானவர்களின் வாழ்க்கையை தீர்மானிக்கின்றது. அவர்களின் அன்பு க்குரியவர்கள் இல்லாத நிச்சயமாக இல்லை என கருதமுடியாத நிலை காணப்படுகின்றது. கடந்த தசாப்த த்தில் சிறிதளவு முன்னேற்றம் கூட ஏற்படாத நிலையில் தங்கள் அன்புக் குரியவர்களின் நிலையை அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதை அறிவ தற்கு இலங்கையின் குடும்பங்கள் பெரும் நெருக்கடிகளை சந்திக்கின்ற னர். பதில்களுக்கான அவர்களின் தளர்ச்சியற்ற நீடித்த தேடல்கள் அவர் கள் மேலும் பழிவாங்கப்படும், அச்சுறு த்தப்படும் களங்கப்படுத்தப்படும் சமூகத் திலிருந்து ஒதுக்கி வைக்கப் படும் நிலையை உருவாக்கியுள்ளது.

சமீப வருடங்களில் இலங்கை பலவந்த மாக காணாமல்போதலின் பாரம்பரிய த்தை முடிவிற்கு கொண்டு வருவதற் காக சில முக்கியமான நடவடிக்கை களை எடுத்துள்ளது. 2015 இல் ஐசிபிபிஈடி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட் டது காணாமல் போனோர் அலுவலக த்தை ஏற்படுத்தியது இவை மைல் கற்களாகும்.

காணாமல் போனவர்கள் குறித்து காணாமல் போனவர்கள் அலுவலகம் பெற்றுக் கொண்டுள்ள வெளியிட்டுள்ள முறைப்பாடுகள் நீதியை வழங்குவது தொடர்பில் எற்பட்டுள்ள முன்னேற்றங் களிற்கான எங்களின் அளவுகோல்களாக காணப்படுகின்றன. எனினும் உண்மை நீதி மற்றும் இழப்பீடு போன்றவற்றிற் கான பாதிக்கப் பட்டோரின் உரிமை தொடர்பில் இன்னமும் அதிகளவு செயற்பாடுகள் அவசியமாக உள்ளன. உண்மையை நிலை நாட்டுவது

ஐக்கியநாடுகள் வலிந்து காணாமலாக் கப்படுதலினால் பாதிக்கப்பட்டவர்கள் குடும்பத்தவர்களுக்கு தொடர்ந்தும் தனது ஆதரவை வெளியிடுவதுடன் உண்மை நீதி நல்லிணக்கத்திற்காக வலிந்து காணாமல்ஆக்கப்பட்டோரின் உறவுகள் மேற்கொண்டுள்ள போராட் டங்களிற்கும் தனது ஆதரவை வெளி யிடுகின்றது.

# இரா.சம்பந்தர் இல்லத்தில் முக்கிய சந்திப்பு!



தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுக்கொள்வதில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடும் வகிபாக மும் மேலும் வலுப்படுத்தப்பட வேண் டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க்-அன்ட்ரூ பிரெஞ்சுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

இச்சந்திப்பின் போது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் இரு தரப்பு ஒத்துழைப்புக்களை வலுப்படுத்தி எவ்வாறு ஒன்றிணைந்து செயல்பட முடியும் என்பது பற்றி எதிர் வரும் காலங்களில் விரிவாகப் பேசலாம் என்றும் குறிப்பிட்டார்.

சிறுபான்மையின மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள், பௌத்த சிங்கள மய மாக்கம் என்பன உள்ளடங்கலாக தமிழ் மக்கள் முகங்கொடுத்துவரும் பிரச் சனைகள் தொடர்பிலும் இதன் போது மார்க் அன்ட்ரூ பிரெஞ்சிடம் எடுத் துரைக்கப்பட்டது. இலங்கை தொடர் பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டு ஒரு தசாப்த காலம் கடந்துள்ள நிலையில், அதனை அடிப்படையாகக் கொண்டு முன்னேற்றகரமான நடவடி க்கைகள் எதனையும் இலங்கை அரசா ங்கம் மேற்கொள்ளவில்லை என்று சுட்டிக் காட்டிய சம்பந்தன் தரப்பினர், இவ்விடயத்தில் இலங்கை அரசாங்கத் தின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினர். இச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்துகொண்டார்.


## கனடா வாழ் துன்னாலை கரவை மக்கள் மன்றத்தின் "ஞானதீபம்" 2023 கலைவிழா

கனடா வாழ் துன்னாலை கரவை மக்கள் மன்றம் நடாத்தும் 21வது ஆண்டு ஞானதீபம் 2023 பல்சுவை கலைவிழா எதிர்வரும் செப்டம்பர் 09, 2023 சனிக்கிழமை, மாலை 5.00 மணிக்கு

**Thamilisai Kala Mandram**
**1120 Tapscott Road Unit #3**
**Scarborough Ontario M1X 1S9** இல் அமைந்துள்ள மண்டபத்தில் நடைபெற உள்ளது.

தொடர்புகட்கு: வேல் விவேகானந்தன் 416-418-0477
மு. கருணைநாதன் 647-703-4674

அன்புடன்
மு. கருணைநாதன்
தலைவர்
துன்னாலை—கரவை மக்கள் மன்றம், கனடா

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# திருகோணமலை நிலாவெளி, பெரியகுளம் பகுதி விகாரையின் நிர்மாணப் பணிக்கான அனுமதியை மீண்டும் நிறுத்திய ஆளுநர்!

திருகோணமலை நிலாவெளி, பெரிய குளம் பகுதியில் நிர்மாணிக்கப்பட விருந்த விகாரையின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு கோரி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக பிக்குகள் 28 ஆகஸ்ட் 2023 திங்கட் கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

குறித்த விகாரை நிர்மாணிப்பதால் காணப்படும் பிரச்சினை குறித்து ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்ட பிக்குகளுக்கு அரச அதிபர் அலுவலகத்தில் வைத்து ஆளுநரால் விளக்கம் அளிக்கப்பட்டு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் பிரதேச செயலகத்தில், திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் இடம் பெற்றுக் கொண்டிருந்த நிலையில், ஆர்ப்பாட்ட காரர்களால் இக்கூட்டம் இடைநிறுத்தப்பட்டது.

திருகோணமலை அனைத்து இன மக்களும் வாழும் ஒரு பிரதேசமாகும் . பிக்குகளின் செயற்பாடுகள் போல் ஏனைய இனத்தவரும் இவ்வாறான தொரு செயற்பாடுகளை முன்னெடுப்பார் களானால் அதற்கு நீங்களே ஒரு முன்னு தாரணமாக செயற்படுவீர்கள் என தெரி வித்தார்.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பிரதேச செயலா ளரால் வழங்கப்பட்ட கடிதத்தை மீளப் பெற்றாலும், பிரதேச சபையின் அனுமதி யின்றி எந்த ஒரு கட்டுமானப்பணிகளும் முன்னெடுக்க முடியாது எனவும் தெரி வித்துள்ளார்.

### பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை இலுப்பைக்குளம்



பகுதியில் அமைக்கப்பட்ட பொரலுகந்த ரஜமகா விகாரைக்கு தடை விதித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பௌத்த பிக்குகள் மற்றும் சில பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு முன்னால் ஏ6 பிரதான வீதியை வழிமறித்து கிழக்கு ஆளுநருக்கு எதிரான கோசங்களை எழுப்பியவாறும், பதாதைகளை ஏந்திய வாறும் காலை தொடக்கம் மதியம் வரை இடம் பெற்றது.

குறித்த பகுதியில் விகாரை அமைப்ப தற்கு எதிராக தமிழ் மக்களினால் முன்வைத்த கோரிக்கையை பரிசீலித்த கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் ஜனாதிபதியினால் அப்பகுதியில் அமைக் கப்பட்ட விகாரையின் கட்டுமானங்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. இந்நிலை யிலேயே இதற்கு எதிரான ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. காலாகால மாக தமிழ் மக்கள் வாழுகின்ற பகுதி க்குள் விகாரை அமைத்தால் அது இன முறுகலை ஏற்படுத்தும் என்ற வகை யிலும், இன நல்லிணக்கத்தை பாதிக்கும் என்ற வகையிலும் தமிழ் மக்களினால் கோரிக்கை முன்வைக்கப் பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### ரணிலின் முக்கிய உத்தரவு!

திருகோணமலை மாவட்டத்தில் புதிய மத வழிபாட்டுத் தலங்களை எதிர்கால த்தில் நிர்மாணிக்கும் போது, கிழக்கு மாகாண ஆளுநர், மாவட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரி களுடன் கலந்தாலோசிக்குமாறு ஜனாதி பதி ரணில் விக்ரமசிங்க பணித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டம் திரு கோணமலை விமானப்படை தளத்தில் நடைபெற்றது.இதன் போதே அவர் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

# கனடா வாழ் இணுவில் மக்களின் வருடாந்த ஒன்றுகூடல் அழைப்பு

கனடா வாழ் இணுவில் மக்களின் வருடாந்த ஒன்றுகூடல் அழைப்பு

காலம்- 03-09-2023 (ஞாயிற்றுக்கிழமை)

இடம்- மில்லீக்கன் பூங்கா - பிரிவு டீ நேரம்- காலை 10.00 மணி

கனடா வாழ் இணுவில் மக்கள் அனைவரையும் இவ்வொன்று கூடல் நிகழ்விற்கு வருகை தந்து சிறப்பிற்குமாறு அன்போடு அழைக்கிறோம். சகல வயதினருக்குமான விளையாட்டுப் போட்டிகள் வழமைபோல களிப்பூட்டும் வகையிலே இடம் பெறவுள்ளது.

தொடர்புகளுக்கு: சாந்தி சர்வானந்தா 647-200-2177 மு.கிருபாகரன் 416-430-0422 ப.கஜஜெயன் 416-732-5898






ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதேவேளை நாளாந்தம் வழமை போன்று பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருவதுடன் அம்பாளின் திருப்பணிக்கு உங்களால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# பிரபாகரனின் மகிமையைக் கொச்சைப்படுத்த வேண்டாம்! ஸ்ரீலங்கா பாதுகாப்புச் செயலர் கமால் குணரத்ன!



தனது துப்பாக்கியில் இறுதித் தோட்டா முடியும் வரைக்கும் போரிட்டுக் குடும்பத்துடன் மடிந்தவர் தான் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன். இந்நிலையில் அவரையும், அவரது குடும்பத்தையும் வைத்துப் பிழைப்பு நடத்துகின்றார்கள் புலம்பெயர் தமிழர்கள் என பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

பிரபாகரனோ அல்லது அவரின் குடும்பத்தில் எவருமோ இன்று உயிருடன் இல்லை. இறுதிப் போரில் பங்கெடுத்த படைத் தளபதிகளில் ஒருவன் என்ற ரீதியில் இந்த உண்மையை மீண்டுமொரு தடவை கூறுகின்றேன்.

இறுதி யுத்தத்தில் இறுதி வரைக்கும் போரிட்டு தன் குடும்பத்துடன் சாவடைந்தவர் தான் பிரபாகரன். அவர் பயங்கரவாத அமைப்பின் தலைவர். ஆனால், அவர் தனது கொள்கையில் இறுதி வரைக்கும் மாறாமல் நின்ற ஒரு தலைவர். அவருக்கென சில மகிமைகள் உண்டு. அந்த மகிமைகளைக் கொச்சைப்படுத்த வேண்டாம் என்று புலம்பெயர் தமிழர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். பிரபாகரனின் மனைவியின் சகோதரி என்று கூறப்படும் பெண் ஒருவரால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள காணொளி வலுக் கட்டாயமாக ஒரு தரப்பால் எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

# பிரபாகரன் குடும்பத்தை வைத்து அரசியல் செய்யாதீர்கள் முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலை வரின் குடும்பத்தை வைத்து அரசியல் செய்யாதீர்கள் என முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவரின் மனைவி மதிவதனி மற்றும் மகள் துவாரகா ஆகியோர் உயிருடன் இருப்பதாகவும் அவர்களை தான் நேரில் சந்தித்ததாகவும் வெளிநாடொன்றில் வசிக்கும் மதிவதனியின் சகோதரி ஒருவர் சமூக வலைத்தளங்களில் காணொளி ஒன்றை அண்மையில் வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே முன்னாள் இரா ணுவத் தளபதியான சரத் பொன்சேகா மேற்கண்டவாறு கூறியுள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில், இறுதிப் போரில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனும், அவரின் மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளும் உயிரிழந்து விட்டனர். இது அனைவரும் அறிந்த உண்மை. இந்நிலையில், விடுதலைப் புலிகளின் தலைவர் உயிருடன் இருக்கின்றார் என்று ஒரு குழுவினரும், அவருடைய மனைவி மற்றும் மகள் உயிருடன் இருக்கின்ற னர் என்று இன்னொரு குழுவினரும் தமது சுயலாப அரசியலுக்காகப் பிரசாரம் செய்து வருகின்றனர். புலம்பெயர் தமிழர்களே இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களிடம் நாம் விநயமாகக் கேட்டுக் கொள்வது என்னவெனில், போர்க் களத்தில் ஒழுக்கத்தோடும் நேர்மையான கட்டுப்பாட்டோடும் நேருக்கு நேர் நின்று போராடிய ஒரு அமைப்பின் தலைவரை உங்கள் சுயலாபத்திற்காக அவரது குடும்பத்தை வைத்து அரசியல் செய்வதை உடனடியாக நிறுத்துங்கள் என கேட்டு கொண்டுள்ளார்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பற்றிக் கருத்துக் கூறும் போது அவருக்கு ஒரு நோக்கம் இருந்தது, பாதை இருந்தது, ஒழுக்கம் இருந்தது. பிரபாகரன் எடுத்த பாதை தவறானது ஆனால் அவரது ஒழுக்கமும் செயற்பாடுகளில் இறுக்கமான கட்டுப்பாடும் இருந்தன. அவர் தேவையான போது தாக்குதல்களை மேற்கொள்வார், தேவையற்ற போது தவிர்த்துக் கொள்வார் என்றார்.

# யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணிகள் பணிப் புறக்கணிப்பு!



பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக தெரிவித்த கருத்தினைக் கண்டித்து யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றங்களின் சட்டத்தரணிகள் கடந்த 25 ஆகஸ்ட் 2023 வெள்ளிக்கிழமை பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 22 ஆம் திகதியன்று முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர அவதூறு பரப்பும் வகையிலும் நீதித்துறை சுதந்திரத்தை கேள்விக்குட்படுத்தும் வகையிலும் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையை கண்டித்தும் எதிர்ப்பு தெரிவித்தும் முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்து அடையாள கண்டன போராட்டம் ஒன்றை நடத்த அழைப்பு விடுத்திருந்தது.

இந்த அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் ஏனைய கிளைச் சங்கங்களும் தத்தமது நீதிமன்றங்களில் குறித்த அடையாள கண்டன போராட்டத்தினை மேற்கொண்டன.இதனால் போராட்டம் இடம் பெற்ற நேரத்தில் யாழ் மாவட்ட நீதிமன்ற செயற்பாடுகள் பாதிக்கப்பட்டது.

யாழ்ப்பாண நீதிமன்றம் முன்பாக ஒன்று கூடிய சட்டத்தரணிகள் அமைதியாக போராட்டத்தில் ஈடுபட்டனர். அதே போன்று சாவகச்சேரி நீதிமன்றம் முன்பாக ஒன்று கூடிய சட்டத்தரணிகள் பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இவ்வாறாக பருத்திதுறை ,மல்லாகம், ஊர்காவற்துறை தீதிமன்றங்களின் சட்டத்தரணிகளும் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கத் தூதுவரின் கருத்து

13ஆவது திருத்தச் சட்டத்தை கோரும் உங்களின் நிலைப்பாடு சரியானது, யாழ்ப்பாணத்தில் தமிழ் கட்சிகளின் தலைவர்களை சந்தித்த போது அமெரிக்க தூதுவர் ஜீலி சங் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

இதன் மூலம், அண்மைக் காலத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் விடயங்கள் நகர்வதற்கான சாத்தியப்பாடுகள் இல்லையென்பதை மறைமுகமாக அவர் சுட்டிக் காட்டியிருக்கின்றார். இந்தக்கருத்து ஆச்சரியமானதல்ல.

இதனைப் பலரும் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தனர். ஈழநாடும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இதனை சுட்டிக்காட்டியிருக்கின்றது. ஆனால் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள் என்போர் இந்த விடயத்தின் ஆழத்தை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. விடயங்களை தந்திரோபாயமாக நகர்த்த முற்படவில்லை.

இதன் காரணமாக, இப்போது இராஜதந்திரிகளே 13இற்கு அப்பால் செல்வதிலுள்ள சிக்கல்களை மறைமுகமாக சுட்டிக் காட்டும் நிலைமை உருவாகியிருக்கின்றது. ஆனால், இப்போதும் தமிழ் கட்சிகள் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டில் இல்லை.

இந்திய பிரதமர் மோடிக்கு 13ஆவது திருத்தத்தை வலியுறுத்தி கடிதம் அனுப்பிய போதிலும் கூட, தமிழ் மக்கள் மத்தியில் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் முன்னுக்கு பின்னர் முரணான கருத்துகளையே முன்வைத்து வருகின்றனர்.

குறிப்பாக இலங்கை தமிழரசு கட்சி சமஷ்டி கோரிக்கையில் உறுதியாக இருப்பதான கருத்தொன்றை வெளிப்படுத்தி வருகின்றது. இந்தக் கருத்து அதிகம் தேர்தல் அரசியலை இலக்கு வைக்கும் நோக்கம் கொண்டது.

ஆனால் நடைமுறையில், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயமே சிக்கலான ஒன்றாக இருக்கின்றது. இந்த நிலையில் எந்த அடிப்படையில் அதனை தாண்டிச் செல்வது? அதற்கான அரசியல் சூ ழல் இருக்கின்றதா? இந்தக் கேள்விகளுக்கு எவரிடமும் பதில் இல்லை.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் 13ஆவது திருத்தத்தை வலியுறுத்துவதை அமெரிக்க தூதுவர் வரவேற்றிருக்கின்றார். அமெரிக்கா அரசியல் தீர்வு விடயத்தில் வெளிப்படையான நிலைப்பாடுகளை இதுவரையில் வெளியிட்டதில்லை. இந்தியா ஒன்று தான் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான தீர்வை வலியுறுத்தி வருகின்றது.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் இலங்கைக்குள் அனைத்து மக்களின் ஆதரவுடன் தான் அரசியல் தீர்வை காணமுடியும். எவ்வாறான அரசியல் தீர்வு நாட்டுக்கு பொருத்தமானது என்பதை நாட்டிலுள்ள அனைத்துத் தரப்புகளும் இணைந்தே தீர்மானிக்க முடியும். இதில், அமெரிக்கா எதேச்சாதிகாரமாக தலையீடு செய்ய முடியாது. இதுவே, அமெரிக்காவின் நிலைப்பாடாக இருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் அரசமைப்பிலுள்ள விடயங்களை அமுல்படுத்தும் கோரிக்கை முன்னரை விடவும் வலுவாக முன்வைக்கப்படுகின்றது. ஆனால் தர்க்க ரீதியாக இது சரியாக இருந்தாலும் நடைமுறையில் அனைத்து தரப்புகளினதும் ஆதரவுடன் அரசியல் தீர்வை காணுதல் என்னும் நிலைப்பாடு சிக்கலான ஒன்றாகவே இருக்கின்றது.

வெளித்தலையீடுகளின்றி இலங்கையின் சிங்கள ஆளும் வர்க்கம் அவ்வாறானதொரு தீர்வுக்கு செல்லும் அதற்கான ஆர்வத்தை கொண்டிருக்கின்றது என்பதற்கு இதுவரை சான்றுகள் இல்லை. தமிழ் மக்களுடன் அதிகாரத்தைப்பகிரும் விடயத்தில் தொடர்ந்தும் இனவாத மனோநிலையிலேயே செயல்பட்டு வருகின்றது.

இந்தப் பின்புலத்தில் தான் அரசமைப்பில் இருக்கின்ற விடயங்களை அமுல்படுத்துவதற்குக் கூட, வெளியாரின் தலையீடுகள் தேவைப்படுகின்றன. இந்த அடிப்படையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயத்தில் வெற்றிபெற வேண்டுமாயின் அதிலும் இந்திய மற்றும் அமெரிக்க தலையீடுகள் தேவைப்படுகின்றன. காத்திரமான தலையீடுகள் இல்லையென்றால் 13ஆவது திருத்தச்சட்டத்தின் அமுலாக்கம் கூட சந்தேகமான ஒன்று தான்.

# சிறப்புரிமை என்ற பெயரால் நீதித்துறையை அவமதித்தல் சபாநாயகரைச் சந்திக்க சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானம்!



பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள சிறப்புரிமைகளின் அடிப்படையில் நீதிபதிகள், சட்டத்தரணிகள் மீது முன்வைக்கப்படும் தொடர்ச்சியான விமர்சனங்கள் நீதித்துறையின் கௌரவத்தினை குறைமதிப்பீடு செய்வதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதியை தனிப்பட்ட முறையிலும், அவருடைய தீர்ப்பினையும், பாராளுமன்றத்தில் சரத் வீரசேகர கடுமையாக விமர்சனம் செய்திருக்கும் நிலையில், வடக்கு, கிழக்கு சட்டத்தரணிகள் கடந்த 25 ஆகஸ்ட் 2023 வெள்ளிக் கிழமை கண்டனப் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தார்கள்.

அத்தோடு குறித்த விடயம் சம்பந்தமாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் கவனத்துக்கும் கொண்டு செல்லப் பட்டுள்ளதாக அறிவித்திருந்தார்கள். இந்நிலையில், குறித்த விவகாரம் சம்பந்தமாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

அண்மைய காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு காணப்படுகின்ற சிறப்புரிமைகளின் அடிப்படையில் நீதிபதிகள், சட்டத்தரணிகள் ஆகியோர் தொடர்பில் பாராளுமன்றத்துக்குள் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அத்துடன் நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள் தொடர்பிலும் சில விமர்சனங்கள் பாராளுமன்ற சபைக்குள்ளிருந்து வெளியிடப்படுகின்றன. அந்த வகையில், இறுதியாக பாராளுமன்ற உறுப்பினரால் நீதிபதி ஒருவர் விமர்சிக்கப்பட்டுள்ளார். இந்த விடயங்கள் அனைத்தையும் கவனத்தில் எடுத்துள்ள நாம் இவ்விடயங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்கான குழுவொன்றை நியமித்துள்ளோம்.

அக்குழுவின் அவதானங்கள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் அடுத்த கட்டமாக இறுக்கமான நடவடிக்கைகள் சிலவற்றை முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

அதே போன்று, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவையும் நேரில் சந்தித்து இந்த விடயங்கள் சம்பந்தமான எமது கரிசனைகளை வெளிப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம். விரைவில் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றார்.

# புதிய அரசியல் அணி சேருகைகள்!

(19ம் பக்கத் தொடர்ச்சி) வாய்ப்பானதே தவிர ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு உதவப் போவதில்லை. 13வது திருத்தத்தை சரியான முறையில் கையாளத் தவறியதன் விளைவை அவரே இறுதியில் அனுபவிக்க வேண்டியும் வரலாம். ஐக்கிய தேசிய கட்சியும் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியும் அமைக்க முயற்சிக்கும் கூட்டணிகள் ராஜபக்சாக்களிடமிருந்து பிரிந்த அரசியல் அணிகளையும் வரும் நாட்களில் பிரிந்து வரக்கூடியவை என்று எதிர்பார்க்கப்படும் அணிகளையும் குறி வைப்பவையாகவே இருக்கின்றன. தங்களை மேலும் பலவீனப்படுத்தக்கூடிய இந்த முயற்சிகளை ராஜபக்சாக்கள் எவ்வாறு கையாளப்போகிறார்கள் என்பது முக்கியமான கேள்வி.

ராஜபக்சாக்களை பொறுத்தவரை பேரினவாத அணிதிரட்டல் என்பது அவர்களுக்கு கைவந்தகலை. மீண்டெழுவதற்கு அவர்களுக்கு இருக்கக்கூடிய ஒரே வழிமுறை திரும்பவும் பேரினவாத அணி திரட்டலே. இலங்கையில் பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்த ஒரு வாய்ப்புத் தாருங்கள் என்று அவர்கள் கேட்டால் மக்கள் ஒரு போதும் நம்பப்போவதில்லை.

ஆனால் தவறான ஆட்சிமுறையையும் ஊழலையும் மூடிமறைக்க இனி மேலும் பேரினவாத அணிதிரட்டலுக்கு அனுமதிக்கக்கூடாது என்பது ராஜபக்சாக்களின் அரசியல் மூலமாக நாடும் மக்களும் அனுபவிக்க நேர்ந்த துன்பங்கள் மூலமாக கற்றுக் கொண்ட முக்கியமான படிப்பினையாகும். இது எந்தளவுக்கு சிங்கள மக்களின் அரசியல் சிந்தனைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அடுத்த ஒரு தேர்தல் மாத்திரமே வெளிக்காட்டும்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# பாராளுமன்றத்திற்கு வெளியில் வந்து கதையுங்கள்! சரத்வீரசேகராவின் கருத்துக்கு சட்டத்தரணிகள் சவால்!



பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர பாராளுமன்றுக்குள் இருந்து கொண்டு கதைக்காமல் தைரியமிருந்தால் வெளியில் வந்து கதைக்குமாறு வவுனியா சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர தெரிவித்த கருத்துக்களுக்கு கண்டனம் தெரிவித்து வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஒருமணி நேர பணிப் புறக்கணிப்பும் ஆர்ப்பாட்டமும் 25 ஆகஸ்ட் 2023 வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது கருத்து தெரிவித்த போதே வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் அன்ரன் புனிதநாயகம் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் நிலுவையில் உள்ள குருந்தூர் மலை தொடர்பான வழக்கினை விசாரித்து வரும் நீதிபதியை பாதிக்கும் வகையிலான கருத்தினை பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர தெரிவித்திருந்தார்.இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். அத்துடன் அவர் பாராளுமன்ற வரப்பிரசாதத்தை பயன்படுத்தியே இவ்வாறு கதைக்கிறார். முடிந்தால் அவர் வெளியில் வந்து இவ்வாறு கதைக்க வேண்டும்.

அவரது உரை தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தலைவருக்கு முகவுரையிடப்பட்டு, ஜனாதிபதி மற்றும் நீதிஅமைச்சர் நீதிச்சேவைகள் ஆணைக்குழு ஆகியவற்றிற்கு அதன் பிரதிகளை அனுப்ப இருக்கின்றோம். இந்த கடிதமானது வடக்கு கிழக்கில் அமைந்துள்ள அனைத்து சட்டத்தரணிகள் சங்கம் சார்பிலும் அனுப்பப்படவுள்ளது. என்றார். ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் நீதியான சட்டவாட்சி நடைமுறைப்படுத்தப்படுவதை தடுக்காதே, அரசியல் வாதிகளே நீதிபதிகளை சுதந்திரமாக செயற்படவிடுங்கள்,நீதிபதிக்கு மரியாதை குடுங்கள், நீதி துறையில் அரசியல் தலையிடு ஏன்போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.



## முல்லைத்தீவு

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவின் கருத்தினை கண்டித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் முன்பாக நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்து அடையாள கண்டன போராட்டம் ஒன்று சட்டத்தரணிகளால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்து அடையாள கண்டனப் போராட்டமானது இடம் பெற்றிருந்தது. குறித்த போராட்டத்தில் கௌரவ நீதிபதிகளின் கடமையில் தலையிடாதே, சுயாதீனமான நீதித்துறையின் செயற்பாட்டை உறுதி செய்யுங்கள், நீதித்துறையின் சுதந்திரத்திற்கு களங்கத்தை ஏற்படுத்தாதே, பாராளுமன்ற சிறப்புரிமையை துஷ்பிரயோகம் செய்யாதே கௌரவ நீதிபதிகளின் கட்டளைகளுக்கு மதிப்பளி போன்ற பல்வேறு வாசகங்கள் தாங்கிய பதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.



## மன்னார்

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர பாராளுமன்றத்தில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு எதிராக பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தியதை கண்டித்து முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் கடந்த வெள்ளிக் கிழமை பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். அவர்களின் பணிப்பகிஸ்கரிப்புக்கு ஆதரவு தெரிவித்து மன்னார் நீதிமன்ற சட்டத்தரணிகள் அடையாள பணிப்பகிஸ்கரிப் பை முன்னெடுத்தனர்.

குறித்த பணிப் பகிஸ்கரிப்பிற்கு பிறகு எந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் தனது சிறப்புரிமையை பயன்படுத்தி நீதித்துறையை அவமதிக்கும் விதத்தில் அல்லது விமர்சிக்கும் விதத்தில் நடந்து கொள்ளக் கூடாது என்ற கோரிக்கையை முன் வைத்தனர். மேலும் இவ்வாறான அவதூறு ஏற்படுத்தும் கருத்துக்கள் இடம் பெற்றால் அதனை ஹன்சாட்டில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளை சபாநாயகர் முன்னெடுக்க வேண்டும் என மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் கோரிக்கையை முன் வைத்தனர்.



## சாவகச்சேரி

யாழ்ப்பாணம் சாவகச்சேரி நீதிமன்ற சட்டத்தரணிகள் கடந்த வெள்ளிக்கிழமை காலையில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது கறுப்புத் துணிகளால் வாய்களை மூடியவாறு சட்டத்தரணிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் வழக்கு விசாரணைகள் 1.30 மணித்தியாலங்கள் தாமதமாகவே ஆரம்பமாகின.




## கிளிநொச்சி

கிளிநொச்சியில் சரத் வீரசேகரவின் கருத்துக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்து நீதிமன்ற சட்டத்தரணிகள் அடையாள கண்டனப் போராட்டம் ஒன்றை நடத்த முன்னெடுத்திருந்தனர். குறித்த போராட்டமானது காலை 9.30 மணி முதல் 10.30 மணிவரை கிளிநொச்சிநீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்து முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# ஏன் ஜனாதிபதி ரணில் அமைதியாக இருக்கின்றார்?

மட்டக்களப்பில் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் ஆராய்வதற்காக சென்ற தமிழ் செயல்பாட்டாளர்களை பிக்குவின் தலைமையிலான அணியொன்று, மூன்று மணித்தியாலங்கள் தடுத்து வைத்து அச்சுறுத்தியிருக்கின்றனர். இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களில் கத்தோலிக்க மதகுருமார்களும் ஊடகவியலாளர்களும் அடங்குவர். ஆனால் எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை.

தமிழ் மக்களின் தலைகளை வெட்டி களனிக்கு கொண்டு செல்வேன் என்று ஒரு சிங்கள அரசியல்வாதி கூறுகின்றார். கூறுபவர் அல்ல இங்கு பிரச்சனை ஆனால் அவ்வாறு கூறி விட்டும் எவ்வித சட்ட நடவடிக்கைகளுமின்றி அமைதியாக இருக்கலாமென்று அவர் கருதுவதும் அரசாங்கம் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயங்குவதும் தான் இங்கு பிரச்னைக்குரியது.

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிராக எதனையும் கூறலாம், எதனையும் செய்யலாமென்னும் சிங்கள ஆக்கிரமிப்பு மனோபாவமும் அச்சுறுத்தலும் தான் பிரச்னைக்குரியது. இந்த நிலையில், தென்னாபிரிக்க வகை மாதிரியின் அடிப்படையில், உண்மைகளை கண்டறியும் ஆணைக்குழுவை நியமிக்கப் போவதாக அரசாங்கம் கூறிவருகின்றது.

இந்த நகைச்சுவைக்காக தமிழர்களால் சிரிக்கத் தான் முடியவில்லை. இந்த இடத்தில் தான் ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் சந்தேகிக்க வேண்டியிருக்கின்றது.

ரணில் ஒரு தாராளவாதி. அவர் தமிழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பில் சாதகமான பார்வையை கொண்டிருக்கின்றார் என்றெல்லாம் ஒரு பார்வையுண்டு. ஆனால், அவரின் நடவடிக்கைகளில் அதனை, இதுவரையில் காண முடியவில்லை. ஒரு தாராளவாதியால் எவ்வாறு இவ்வாறான அசிங்கங்களை அனுமதித்துக் கொண்டிருக்க முடியும்?

தமிழர்களின் தலையை வெட்டுவேன் என்று கூறும் ஓர் அரசியல்வாதி வெளியில் சுதந்திரமாக நடமாடும் நாட்டில், எவ்வாறு ரணில் விக்கிரமசிங்க நல்லிணக்கத்தை கட்டியெழுப்பப் போகின்றார்?

ரணில் விக்கிரமசிங்கவும் முன்னைய அரசியல் ஆட்டத்தைத் தான் ஆட முயற்சிக்கின்றாரா? தமிழர்களின் வாக்குகளுக்காக 13ஐ ஆதரிப்பதாக கூறுவது, சிங்களவர்களின் வாக்குகளுக்காக அவர்களின் அனைத்து அத்துமீறல்களையும் அனுமதிப்பது. இது தான் ரணிலின் அணுகுமுறையென்றால் ரணிலுக்கும் ஏனைய சிங்கள அரசியல்வாதிகளுக்கும் என்ன வித்தியாசம் உண்டு?

பௌத்த சிங்கள அடிப்படைவாதிகளை கட்டுப்படுத்தாவிட்டால், இந்த நாட்டில் ஒருபோதும் புதிய அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்தவே முடியாது.

ஏனெனில், சிங்கள பௌத்த பிக்குகளும் அவர்களால் வழிநடத்தப்படும் அமைப்புகளும் தலிபான்களின் இலக்கையே கொண்டிருக்கின்றன. இவர்கள் அடிப்படையில் சிங்கள தலிபான்களாவர்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்த விரும்பினால் இவர்களை கட்டுப்படுத்த வேண்டும். அவர்கள் பலம் கீழிறக்கப்பட வேண்டும். அவர்கள் பலவீனப்படுத்தப்பட வேண்டும்.

இதனை ரணில் விக்கிரமசிங்கவால் செய்ய முடிந்தால் மட்டுமே ரணிலை தமிழ் மக்கள் நம்ப முடியும். தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு அப்பால், இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமென்றால் சிங்கள தலிபான்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க 2049ஆம் ஆண்டில் ஒரு புதிய இலங்கையை கனவு காண்பதாகக் கூறி வருகின்றார். 2049இல் அல்ல கற்காலத்தில் சிந்தித்துக் கொண்டிருக்கும் பௌத்த பிக்குகளை கட்டுப்படுத்த முடியாவிட்டால், 3000 ஆண்டளவில் கூட இலங்கையை கட்டியெழுப்ப முடியாது ரணில் விக்கிரமசிங்க அவர்களே! எனவே, ரணில் விக்கிரமசிங்க தன்னையொரு தாராளவாதியாக முதலில் நிரூபிக்கவேண்டும். அது பேச்சளவில் இருக்கக்கூடாது.

இதனை தமிழ் மக்களின் பிரச்னையாக மட்டும் பார்க்க வேண்டியதில்லை. ஒட்டுமொத்த இலங்கை மக்களின் பிரச்னையாக நோக்கவேண்டும். ஏனெனில், சிங்கள தலிபான்கள் ஒட்டுமொத்த இலங்கைக்கும் ஆபத்தானவர்கள்.

ஈழநாடு மின்னிதழ் eelanadu.ca

# இந்தியாவின் அனுசரணையில் செயற்படுவதே தீர்வுக்கு வழி என்பதை உணர்ந்து செயற்பட்டவர் அமிர்தலிங்கம் -காசி.விக்கினேஸ்வரன்

இந்தியா அனுசரணை இன்றி தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்காது என்பதை தமிழ் மக்களின் தளபதி அமரர் அமிர்தலிங்கம் கருதியதால் இலங்கை இந்தியா ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகளின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஏற்றுக் கொண்டார் என இணைந்த வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரின் செயலாளர் கலாநிதிகா. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா அறக்கட்டளை நிலையத்தில் கடந்த 27 ஆகஸ்ட் 2023 ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற அமிர்தலிங்கத்தின் 96 ஆவது பிறந்த தின நிகழ்வில் நினைவுப் பேருரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அமரர் அமிர்தலிங்கம் தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கிய காலப்பகுதியில் தமிழ் மக்களுக்கான தீர்வை இந்தியாவே பெற்று கொடுக்கும் என மிகவும் ஆணித்தரமாக நம்பினார்.

1987 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 28 ஆம் திகதி இலங்கை இந்தியா ஒப்பந்தம் கைச்சாத்திட இருந்த நிலையில் முதன் நாள் இந்தியாவுக்கு அமிர்தலிங்கம் அழைக்கப்பட்டார்.

இந்தியாவில் அசோகா ஹோட்டலில் தங்கி இருந்த அமிர்தலிங்கத்துடன் இந்தியாவின் வெளியுற உயர் அதிகாரிகள் இலங்கை இந்தியா ஒப்பந்தம் தொடர்பில் தெளிவுபடுத்தினர்.

அவருடன் விடுதலைப் புலிகள் தவிர்த்த 4 போராளி இயக்கங்கள் அழைக்கப்பட்டு இலங்கை இந்தியா ஒப்பந்தம் கைச்சாத்திடுவது தொடர்பில் தெளிவுபடுத்தப் பட்டது. அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் இலங்கை இந்தியா ஒப்பந்தத்தை விரும்பாத நிலையில் இந்தியா அவருக்கு ஒரு பாடத்தை புகட்ட எண்ணியது. அது தொடர்பில் அமிர்தலிங்கத்திற்கும் ஏனைய போராளிகள் இயக்கத்தின் தலைவர்களுக்கும் இந்தியா உயர் மட்டம் விளங்கப்படுத்தியது.

இந்தியா பிரதமர் ராஜீவ் காந்தி யுத்தம் இடம் பெறுகின்ற தமிழர் பிரதேசத்தில் வாழுகின்ற மக்களுக்கு இந்தியா உணவுப் பொதிகள் வழங்கப் போவதாக தகவல் அனுப்பினார். கடல் மார்க்கமாக இருபது படகுகளில் சர்வதேச செயற்கை சங்கத்தின் அனுசரணையுடன் உணவு பொருட்கள் கொண்டு வரப் பட்ட நிலையில் கடற்படை தமிழ் மக்களுக்கு வழங்க மறந்து விட்டது.

இந்நிலையில், ஜே.ஆருக்கு நல்லதொரு பாடம் புகட்ட வேண்டும் என்பதற்காக நான் ஆகாயத்தால் உணவுப் பொருட்கள் வழங்கப் போகிறேன் என ராஜீவ் காந்தி ஜே.ஆருக்கு செய்தி அனுப்பினார். செய்தி அனுப்பி ஒரு மணித்தியாலத்துக்குள் உலங்கு வானூர்திகள் மூலம் தமிழர் பிரதேசங்களுக்கு உணவுப் பொதிகள் ஆகாய மார்க்கமாக வழங்கப் பட்டது .

இந்த எச்சரிக்கை இலங்கை இந்தியா ஒப்பந்தத்தை மறுத்தால் ஆகாய மார்க்கமாக குண்டுகள் வீசப்படும் என்ற செய்தியை இந்தியா இலங்கைக்கு எச்சரிக்கையாக விடுத்தது.

இந்தச் செய்தியால் வேறு வழி இன்றி ஜே.ஆர். ஜெயவர்த்தன இலங்கை இந்தியா ஒப்பந்தத்தை ஏற்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டார்.

இந்நிலையில், விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்க மாட்டோம் என அறிவித்த



நிலையில் அமிர்தலிங்கம் இந்தியாவின் அனுசரணை இல்லாமல் தமிழ் மக்களின் நிலையான அரசியல் தீர்வை பெற முடியாத என்ற நம்பிக்கையுடன் அதனை ஏற்றார். மகாத்மா காந்திக்கு நேரு எவ்வாறு இருந்தாரோ அதேபோல் பெரியவர் தந்தை செல்வாவுக்கு அமிர்தலிங்கம் இருந்தார்

1961 ஆம் ஆண்டு சத்யாக்கிரக போராட்டம் இடம் பெற்றபோது பெரியார் செல்வாவுடன் அமிர்தலிங்கமும் கைது செய்யப்பட்டதுடன் அவர்களுடன் 76 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால் மக்களுக்கு தலைமை தாங்கக்கூடிய தலைமைத்துவம்தூரநோக்கு சிந்தனை போராட்டக் குணம் இந்த இரண்டு தலைவர்களிடமும் வெகுவாக காணப் பட்டது.

இலங்கை இந்தியா ஒப்பந்தத்தை ஏற்றால் விடுதலைப் புலிகள் விரும்ப மாட்டார்கள் எதிர்வரும் தேர்தலில் தோல்வியை சந்திக்க வேண்டும் என அமிர்தலிங்கத்துக்கு நன்கு தெரியும். தான் தோற்றாலும் பரவாயில்லை தமிழ் மக்களுக்கு இந்தியாவின் அனுசரணையின்றி எந்த தீர்வும் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட மாட்டாது என்ற சிந்தனை தூரநோக்குஅவரிடம் அன்றே காணப்பட்டது.

இன்ற சிலர் 13ஐ வேண்டாம் என்கின்றனர். தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கு சமஸ்டி அடிப்படையிலான தீர்வு தான் என கூறுகின்றனர். தமிழ் மக்களுக்கான சமஷ்டி அடிப்படையிலான தீர்வை அடையும் வரை எமது இருப்புக்களை தக்க வைத்துக் கொள்வதற்காக எமக்குக் கிடைத்த பதின்மூன்றாவது திருத்தத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பதின்மூன்றை எதிர்ப்போர் சமஸ்டியை அடைவதற்கான வழிமுறைகளை தெளிவாகவும் நடைமுறை சாத்தியமாக முன் வைப்பதற்கு தயாரில்லை. ஆகவே, அமரர் அமிர்தலிங்கம் தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்காக இந்தியாவை நம்பிய நிலையில் அதனை தற்போதுள்ள தமிழ் தலைவர்களும் ஓரணியல் நின்று அடைவதற்கு முயற்சிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான நீதியரசர் விக்னேஸ்வரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன், ஜெபநேசன் அடிகளார் மற்றும் டான் குழுமத் தலைவர் குகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருமலையில் பௌத்த விகாரை அமைப்பதற்கு ஆதரவாக களத்தில் குதித்த அருட்தந்தை ஜோர்ஜ் தமிழ் நிலத்தையும் தமிழரையும் காப்பற்ற மீட்பர் வருவாரா?



திருகோணமலை பௌத்த விகாரை நிர்மாணிப்பிற்கு ஆதரவாக அருட்தந்தை ஜோர்ஜ் களத்தில் குதித்துள்ளார். 40 வருடங்கள் திருகோணமலையில் வாழ்ந்தவனாகவும், மதத் தலைவராக முப்பது வருடங்கள் திருகோணமலையில் சமாதானத்திற்காக சேவை செய்த தாம் தொடர்ந்தும் இதே போன்று செயற்பட உள்ளதாக அவர் கூறியிருக்கிறார்.

மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர், கிழக்கு ஆளுநர் தடை உத்தரவைப் பிறப்பித்து திருகோணமலை மாவட்டத்திலிருந்த சமாதானத்தை அமைதியை, சமாதானத்தைச் சீர் குலைக்கும் நடவடிக்கைக்கு எமது கடுமை எதிர்ப்பினை வெளியிடுகிறோம்.

திருகோணமலை மாவட்டத்தில் தேரர்கள் உயிர்த் தியாகம் செய்து, யுத்த காலத்தில் பல கஷ்டங்களை அனுபவித்துள்ளனர். அவர்களது உடலில் இன்னும் துப்பாக்கி காயங்கள், தழும்புகள் கூட உள்ளது. இந்த நிலையில் அவர்களுடைய உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க இந்த இடத்தில் ஒன்று சேர்ந்து தேரர்கள் வந்தமை பெரும் மகிழ்ச்சி.

எனக்கும் ஒரு கடமை இருக்கிறது. குருசகந்த ஆர்ப்பாட்டத்தின் போது எமக்குத் தேரர்கள் மாத்திரம் தான் முழு ஆதரவினையும் வழங்கினார்கள்.

அதனால் நான் என்னுடைய ஆதரவை அவர்களுக்கு வழங்குகிறேன். யார் என்ன சொன்னாலும், என்ன நிலையில் இருந்தாலும் எனக்கு என்று கருத்துச் சுதந்திரம் இருக்கிறது என்றார்.

இது இவ்வாறிருக்க புத்தருக்கு நிலத்தாசை ஊட்டும் காவி உடுத்திய மனிதர்களின் ஆர்ப்பாட்ட அட்டகாசம் திருகோணமலை நகரின் ஆளுநர் அலுவலகம் முன்பாக நிகழ்த்தி முடிக்கப்பட்டது.

விகாரை அமைக்க தடைநீக்க வேண்டும் இது தான் காரணம். ஆனால் இவர்கள் விகாரை அமைக்கத் துடிக்கும் பிரதேசம் 100 வீதம் தமிழர்கள் தனித்து வாழும் பகுதி. அதனால் புதிய விகாரை அமைக்க அங்கு வாழும் மக்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள். இதனால், பிரதேச செயலாளர் புதிய விகாரை அமைக்கத்தடை விதித்தார்.

ஆளுநரும் சட்டவிரோதமாக மற்றும் மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும் இடத்தில் விகாரை கட்ட தடை என்றார். ஏன் நாட்டின் நிறைவேற்று அதிகார அதிபரும் சொன்னார் புதிய வழிபாட்டிடங்களை அமைக்க அனுமதியில்லை என்று ஆனால்..

ஒரே ஒரு ஆர்ப்பாட்டம்.. இல்லை இல்லை ரகளை. மாவட்டத்தின் மிக உயர் சபையில் அத்துமீறி நுழைந்து அதிகாரிகளை வெருட்டி, அட்டகாசம் புரிந்து விகாரைக்கு விதிக்கப்பட்ட தடையினை நீக்கிக் கொண்டனர்.

இவை கோபப்படும் நடவடிக்கைகள் அல்ல. அதையும் கடந்து அருவருக்கும் இனவெறிச் செயற்பாடுகள் என்பவை இதுதான். இந்த நாட்டில் தேவையில்லாமல் தமிழர் ஆயுதம் ஏந்தினர் எனக் (22ம் பக்கம் பார்க்க)



# உணர்த்தப்படாத நியாயம்!

- என்.கண்ணன் -

கடந்த புதன்கிழமை (23) யாழ்ப்பாணத்தில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் சிலரை அமெரிக்க தூதுவர் ஜூலி சங் சந்தித்துப் பேசியிருந்தார்.

இதன்போது அவர் இரண்டு முக்கியமான விடயங்கள் குறித்து தமிழ்க்கட்சிகளின் கருத்துக்களை அறிந்து கொள்வதில் ஆர்வத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.



ஒன்று, 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பானது. இன்னொன்று, குருந்தூர்மலை விவகாரம் தொடர்பானது.

இந்த இரண்டு விவகாரங்களும் தான் இப்போது அரசியலில் பேசுபொருள் – அதற்கு அப்பால், பற்றியெரியும் விவகாரங்கள் என்று கூட இதனைக் குறிப்பிடலாம்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டை தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் வலியுறுத்திய போது, அதுவே சரியானது என்று அமெரிக்க தூதுவர் பாராட்டியிருக்கிறார்.

அதாவது, அரசியலமைப்பு மாற்றங்களைச் செய்வது தற்போது சாத்தியமற்றது என்றும், யதார்த்தபூ ர்வமாக சிந்தித்து, 13 ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கத்தை வலியுறுத்துவதே சரியானது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இது 13ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கத்துக்கு அமெரிக்கா ஆதரவளிக்கிறது என்பதை குறிக்கிறதா? அல்லது, யதார்த்தபூர்வமற்ற கொள்கை நிலைப்பாடுகளை வலியுறுத்தாமல், 13ஆவது திருத்தச் சட்டத்துக்குள் நின்று கொள்ளுங்கள் என அமெரிக்கா அறிவுரை கூற முனைகிறதா?

ஏற்கெனவே இந்தியா 13ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கத்தை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது. 13 ஆவது திருத்தச் சட்டம் தான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்ற நிலைப்பாட்டையே அன்று முதல் இன்று வரை இந்தியா கொண்டிருக்கிறது.

தமிழர் தரப்பையும் 13ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கத்தை வலியுறுத்துமாறு இந்தியா பல்வேறு தருணங்களில் அழுத்தங்களைக் கொடுத்ததாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இவ்வாறான நிலையில் அமெரிக்கத் தரப்பும் 13 ஆவது திருத்தம் என்ற வட்டத்துக்குள் தமிழர் தரப்பு நிற்பதையே விரும்புகிறது அல்லது, அந்த வட்டத்துக்குள் தமிழர் தரப்பை கொண்டு செல்வதற்கே முயற்சிக்கிறது.

அரசியலமைப்பு மாற்றத்தின் ஊடாக தீர்வு ஒன்றை எட்டுவதற்கு பாராளுமன்றத்தின் ஆதரவைத் திரட்டுவது சாத்தியமில்லை என்பதை அமெரிக்க தூதுவர் உணர்ந்து கொண்டிருக்கிறார்.

அதனால் தான் அவர், யதார்த்தபூர்வமாக அணுகுமாறும், 13ஐ வலியுறுத்துமாறும் குறிப்பிட்டிருக்கிறார் என்று மாத்திரம் கருதிவிட முடியாது.

அவர்– அதாவது அமெரிக்கா, தற்போதைய அரசாங்கத்தை குழப்புவதற்கு விரும்பவில்லை என்பதும் முக்கியமானதொரு காரணம். ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் பாதுகாக்கப்படுவதை அமெரிக்காவும் விரும்புகிறது. ராஜபக்ஷவினரை விட, ரணில் விக்கிரமசிங்கவை அமெரிக்காவினால் இலகுவாக கையாள முடியும். அமெரிக்காவின் தேவைகள், நலன்களை பாதுகாப்பதற்கு அவரைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

எனவே அமெரிக்கா, அவருக்கு நெருக்கடி கொடுக்க விரும்பாது. நெருக்கடி கொடுக்க கூடிய விடயங்கள், மேலெழுவதை தணிக்க முற்படும். 13 விடயத்திலும் அவ்வாறு தான் அமெரிக்கா செயற்பட முனைகிறதா என்ற சந்தேகங்கள் உள்ளன.

அதேவேளை, 13ஐ வலியுறுத்தும் போது, தமிழர்களின் பிரதான அரசியல் கோரிக்கை– அபிலாஷைகள் குறைமதிப்புக்கு உட்படும் ஆபத்தை அமெரிக்காவோ இந்தியாவோ கவனத்தில் கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஏனென்றால், அவர்களுக்கு இப்போதைய பிரச்சினை தீர வேண்டுமே தவிர, அடுத்தடுத்த கட்டங்களில் தமிழர்களின் அரசியல் அபிலாஷை பலவீனப்படுத்தப்படும் என்பது பற்றி அக்கறை கொள்ளப் போவதில்லை.

அது நீர்த்துப் போவதாலும் அவர்களுக்குப் பாதிப்பு வராது. இப்போதைக்கு 13க்குள் மட்டுப்படுத்தி அரசியல் கொதிநிலையை தணிப்பது அவர்களின் இலக்காக இருக்கலாம். ஆனாலும், 13ஐ நடைமுறைப்படுத்துவது கூட இலகுவானதல்ல என்பதை அமெரிக்க தூதுவர் அறியாதிருப்பது ஆச்சரியம்.

13ஐ நடைமுறைப்படுத்தும் விவகாரத்தை பாராளுமன்றத்துக்குக் கொண்டு சென்ற ரணில் விக்கிரமசிங்க, அதன் ஒப்புதலைக் கோருவது இந்த விவகாரத்தை இன்னும் சிக்கலாக்கியிருக்கிறது.

அவர் இதனை சுமுகமாக கையாள நினைத்திருந்தால், சத்தமில்லாமல் செய்திருக்க முடியும்.

ஆனால், அவர் ஆரவாரத்துடன் செய்யப் போய், இனவாதிகளின் எதிர்ப்பைத் தேடிக் கொண்டிருக்கிறார். இதற்குப் பின்னரும் 13ஐ அவர் நடைமுறைப்படுத்துவார் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

அடுத்து, குருந்தூர்மலை விவகாரம் குறித்து கேட்டறிந்த அமெரிக்க தூதுவர், இந்த விவகாரத்தின் பின்னணியில், இந்தியாவில் இருந்து அண்மையில் வருகை தந்த இந்துத்துவ குழுக்கள் உள்ளனவா என்று விசாரித்திருக்கிறார்.

இது அமெரிக்க தூதுவரின் சந்தேகமா அல்லது அவருக்கு கிடைத்த இரகசியத் தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான முயற்சியா என்ற கேள்வி இருக்கிறது.

அண்மைக் காலத்தில் இந்தியாவின் பாஜக அல்லது அதன் இந்துத்துவ ஆதரவு அரசியல்வாதிகள் இலங்கை விவகாரத்தை கையில் எடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். கச்சதீவை மீட்போம் என பாஜகவின் தமிழகத் தலைவர் அண்ணாமலை பிரசாரம் செய்து வருகிறார். 13ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அண்ணாமலையும், மத்திய அமைச்சர் எல்.முருகனும் யாழ்ப்பாணம் வந்த போது கூறியிருந்தனர்.

அண்மையில், இராமேஸ்வரத்தில் ஒரு கூட்டத்தில் உரையாற்றிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, இலங்கையில் தமிழர்கள் நரவேட்டையாடப்பட்டனர் என்று குறிப்பிட்டிருந்தார்.

அது மட்டுமன்றி, பாஜக, இந்து மக்கள் கட்சி உள்ளிட்ட பல இந்துத்துவ அமைப்புகள் தமிழகத்தில் இப்போது, வடக்கு, கிழக்கில் சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டு பௌத்த கோவில்கள் கட்டப்படுவதாக பிரசாரம் செய்து கொண்டிருக்கின்றனர்.

இவையெல்லாவற்றுக்கும் பின்னால் பாஜகவின் முக்கியமானதொரு திட்டம் இருப்பதாக சந்தேகங்கள் நிலவுகின்றன.

தென் மாநிலங்களில் காலூன்ற முடியாத பாஜக அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், எப்படியாவது தமிழகத்தில் சில தொகுதிகளையேனும் கைப்பற்றி விடவேண்டும் என உறுதி பூண்டிருக்கிறது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தமிழகத்தில் போட்டியிட வைப்பது அந்த திட்டத்தின் பிரதான அம்சமாகும். இராமநாதபுரம் தொகுதி இந்தியப் பிரதமர் மோடி போட்டியிடுவதற்கு சாதகமானது என ஆய்வுகள் செய்யப்பட்டு பாஜக தலைமைக்கு அறிக்கைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

இராமநாதபுரம் தொகுதியில் நரேந்திர மோடி போட்டியிடுவது இன்னமும் உறுதியாகவில்லை என்றாலும் அவர் போட்டியிடுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக கூறப்படுகிறது. இவ்வாறான நிலையில், இந்துத்துவ உணர்வை கிளப்பி விடுவதும், இலங்கை விவகாரத்தில் உணர்வுபூர்வமாக கையாளுவதாக காட்டிக் கொள்வதும், பாஜகவுக்கான வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்யும்.

இந்தப் பின்னணியில் தான், குருந்தூர்மலை விவகாரத்தை பாஜக அல்லது அதற்கு ஆதரவான இந்துத்துவ அமைப்புகள் தூண்டி விடுகின்றனவா என்ற சந்தேகம் அமெரிக்க தூதுவருக்கு ஏற்பட்டிருக்கலாம்.

சிவசேனை போன்ற அமைப்புகளின் பின்னணியில் இந்தியாவின் இந்துத்துவ அமைப்புகள் இருப்பதான சந்தேகங்கள் அதற்கு வலுவூட்டுவதாகவும் அமைந்திருக்கலாம். எவ்வாறாயினும் அத்தகையதொரு தொடர்பு இருப்பதாக தாங்கள் நம்பவில்லை என்று, தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் அமெரிக்க தூதுவரிடம் கூறியிருக்கின்றனர்.

குருந்தூர்மலை விவகாரத்தில் தமிழ்த் தரப்பை தூண்டி விடும் பிற சக்திகள் இருக்கிறதா என்று அமெரிக்கா சந்தேகம் கொள்கிறது என்றால், இந்த விவகாரத்தில் உள்ள நியாயங்களை தமிழ்த் தரப்பு சர்வதேச சமூகத்துக்கு சரியான முறையில் கொண்டு செல்லவில்லை என்று தான் அர்த்தம்.

குருந்தூர்மலைக்கு உரிமை கோருவது மாத்திரமோ, ஐந்து பத்துப் பேர் போராட்டம் நடத்துவது மாத்திரமோ, உரிமையை மீளப் பெற்றுத் தந்து விடாது.

அதன் மீதான தொன்மைத் தொடர்புகளையும், வழிபாட்டு உரிமையையும், சிங்கள பௌத்த மேலாதிக்க அத்துமீறலையும் சரியான முறையில் சர்வதேசத்துக்கு கொண்டு சென்றிருக்க வேண்டும்.

அந்த வகையில் தமிழ் அரசியல் தலைமைகள் சரியாக வேலை செய்யவில்லை என்றே கருத வேண்டும். வெறும் போராட்டங்கள் மாத்திரம் பிரச்சினைகளைத் தீர்க்காது. அந்தப் போராட்டங்களின் பின்னால் உள்ள நியாயங்களை பிற தரப்பினர் உணர்ந்து கொள்ளவும் வேண்டும். அவர்களுக்கு உணர்த்தவும் வேண்டும்.

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும்
கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
12வது ஆண்டு
இன்னிசை மாலை
29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை
தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

19 ஆகஸ்ட் 2023 முதல் 25 ஆகஸ்ட் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 49வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு முருகேசு நடராஜா

யாழ்.மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு நடராஜா அவர்களது 49வது ஆண்டு நினைவு நாள் 25 ஆகஸ்ட் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு முருகேசு நடராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இராஜதுரை ஈஸ்வரபாதம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் அஞ்சல் நிலைய உத்தியோகத்தர் திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 05 செப்டம்பர் 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களது ஆத்மா சாந்தியப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி சிவனடியான்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி சிவனடியான் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 03 செப்டம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி ஆகிய இரண்டு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பரமேஸ்வரி சிவனடியான் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.




# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்





20 ஆகஸ்ட் 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலச்சந்திரன் கோகுலவாணி தம்பதிகளின் செல்வப்புதல்வி அபிராமி பாலச்சந்திரனின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி அபிராமி அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




21 ஆகஸ்ட் 2023 திங்கட்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம் அவர்களது 18வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக. அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




25 ஆகஸ்ட் 2023 வெள்ளிக்கிழமை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு நடராஜா அவர்களது 49வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக. பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




26 ஆகஸ்ட் 2023 சனிக்கிழமை சரசாலை சாவகச்சேரியைச் சேர்ந்த வழக்கறிஞரும் சமூக சேவையாளருமான திரு கதிர்காமசேகரர் கணபதிப்பிள்ளை அவர்களது நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



26 ஆகஸ்ட் 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் மதுரா சதானந்தன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




31 ஆகஸ்ட் 2023 வியாழக்கிழமை கனடாவில் வசுக்கும் திரு திருமதி கீர்த்தன் மயூரிகா தம்பதிகளும் அன்பு மகன் ஈசானும் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com





மேன்மைகொள்சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

# ஜெயதுர்க்கா தேவஸ்தானம் மிசிசாகா

# அருள் மிகு திரு முருகப்பெருமானின் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்



**ஆரம்பம்** 05 - 09 - 2023



**பூர்த்தி** 14 - 09 - 2023

அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய!

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 20ம் நாள் (05-09-2023) அச்சுவினி நட்சத்திரமும். ஸப்தமி திதியும் கூடியுள்ள நன் நாள் செவ்வாய் கிழமை மாலை தொடங்கி ஆவணிமாதம் 29ம் நாள் (14-09-2023) வியாழக்கிழமை அமாவாசை திதியில் பூர்த்தியுறும் வகையில் 1008 சங்காபிஷேகம் நடைபெறும். கந்தன் பக்தர்களாகிய அனைவரும் கலந்துகொண்டு கந்தனின் அருளைப்பெறுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

| 1ம் திருவிழா தொடக்கம் 8ம்திருவிழா வரை | சப்பறத்திருவிழா 12-09-2023 | தேர்த்திருவிழா 13-09-2023 | 1008 சங்காபிஷேகம் 14-09-2023 |
|---|---|---|---|
| மாலை 5.30 ஸ்நபன கும்பாபிஷேகம்<br>மாலை 7.00 மூலமூர்த்திகட்கு பூஜாரம்பம்<br>மாலை 7.30 கலை நிகழ்ச்சி<br>மாலை 8.00 வசந்தமண்டபப் பூஜை<br>தொடர்ந்து முருகன் வள்ளி தெய்வானை வீதியுலா | மாலை5.00 ஸ்நபநாபிஷேகம்<br>மாலை7.00 பூஜாரம்பம்<br>மாலை7.30 கலைநிகழ்வுகள்<br>மாலை8.00 வசந்தமண்டபப்பூஜாரம்பம்<br>தொடர்ந்து முருகன் வள்ளி தெய்வானை வீதியுலா | காலை 7.30 ஸ்நபனாபிஷேகம்<br>காலை 09.00 பூஜாரம்பம்<br>காலை 10.00 வசந்தமண்டபபூசை<br>தொடர்ந்து தேர்வீதியுலா,<br>பச்சையணிந்த திருக்கோலம்<br>1.00 மணிபிராயச்சித்தசாந்தி | 7.00 காலை பூஜை<br>8.00 காலை சங்காபிஷேகம்<br>11.00 காலை பூஜாரம்பம்<br>மாலை வசந்தமண்டபப்பூசை |

**தேர்த்திருவிழா அன்று வாகன தரிப்பிட வசதிகள் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன**

## உற்சவநாட்களும் உபயகாரர்களின் விபரமும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 04-09-2023 | திங்கள்காலை | கணபதிஹோமம் | அலங்காரம்,வாகனம் | பா-விக்கினராஜா |
| 05-09-2023 | செவ்வாய் | 1ம் திருவிழா | ஓம் பிரணவஉபதேசம் | சி-அ-ஜயாத்துரை குடும்பம் திருநெல்வேலி |
| 06-09-2023 | புதன் | 2ம் திருவிழா | திருநடனம் | சிவகுமார்,வனஜா கந்தசாமி குடும்பம் |
| 07-09-2023 | வியாழன் | 3ம் திருவிழா | கார்த்திகை | உதயமூர்த்தி கந்தையா குடும்பம் |
| 08-09-2023 | வெள்ளி | 4ம் திருவிழா | தண்டபாணி | சொர்ணலிங்கம் மகாலிங்கம் குடும்பம் |
| 09-09-2023 | சனி | 5ம் திருவிழா | கைலாசவாகனம் | சந்திரேஸ்வரன் பரமசாமி குடும்பம் |
| 10-09-2023 | ஞாயிறு | 6ம் திருவிழா | மஞ்சம் | சாரங்கன் இராமகிருஸ்ணர் குடும்பம் |
| 11-09-2023 | திங்கள் | 7ம் திருவிழா | வேட்டை | பாஸ்கரன் கணேசானந்தன் |
| 12-09-2023 | செவ்வாய் | 8ம் திருவிழா | சப்பறம் | பிரதீபன் பாபநாசசிவம் கிருட்டிணர் குடும்பம் |
| 13-09-2023 | புதன் காலை | 9ம் திருவிழா | தேர் | விஜயசேகர் விஜயரட்ணம் குடும்பம் |
| 13-09-2023 | புதன் மாலை | இரவுத்திருவிழா | தேரடி | |
| 14-09-2023 | வியாழ காலை | 10ம்திருவிழா | 1008 சங்காபிஷேகம் | அசோக்குமார் வேலாயுதம் |
| 14-09-2023 | வியாழ மாலை | இரவுத்திருவிழா | சுவாமி வீதியுலா | |
| 15-09-2023 | வெள்ளி | காலை | பிராயச்சித்தம் | வல்லிபுரம் கணேசன் |
| 15-09-2023 | வெள்ளி | இரவு | திருக்கல்யாணம் | செந்தில்குமரன் ஆனந்தன் |
| 16-09-2023 | சனி | இரவு | வைரவர்மடை | சிவா சின்னத்தம்பி குடும்பம் |

**கற்பூரச்சட்டி,பால்குடம், காவடி எடுக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்தில் பதிவுசெய்யவும்**

www.jeyadhurgatemple.com 1808 Drew Road, Mississauga, ON.L5S 1J6. 905-612-1856

# என் இனமே! என் சனமே! என்னை உனக்கு தெரிகிறதா?

## தாகமாய் இருக்கின்றோம்! 29 ஒக்டோபர் 2023 ஒன்றாகி வாருங்கள்!

என் இனிய கனடா வாழ் கருணையாளர்களே! திக்குத் திசை தெரியாது போரின் பேரழிவின் போது சிக்கித் தவித்த 86 குழந்தைகளோடு 13 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப் பட்ட அன்பு இல்லம், பாரதி இல்லக் குழந்தைகளுக்கு கடந்த 12 ஆண்டு களாக உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை ஊடாக கனடியத் தமிழ் சமூகம் ஆகிய நீங்கள் வழங்கி வரு கின்ற மகத்தான ஆதரவினால் இன்று 436 குழந்தைகளின் நாளாந்த உணவுத் தேவைகளும் கல்வி மேம்பாடும் சிறப் பாக நடை பெற்று வருகின்றது.



இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமை காரணமாக பாரிய நெருக்கடியை எமது இல்லங் களும் எதிர் நோக்கியுள்ள நிலையில் அவர்களது இடர்களைக் களையவும் கல்வியை மேம்படுத்தவும் எதிர்வரும் 29 ஒக் 2023 ஞாயிற்றக்கிழமை நடை பெற்றவுள்ள நிகழ்வுக்கு வருகை தந்து உங்கள் ஆதரவைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளு கின்றேன். (விபரங்கள் அடுத்தவாரம் வெளிவரும்.)



வெறுமனே களியாட்ட நிகழ்வுகளுக்கும் தனி மனித புகழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பங்களிப்பை நல்காது தேச விடுதலைப் போரின் போது உயிர்த் தியாகம் செய்தவர்களது குழந்தைகளை வாழ வைக்கும் பணியில் இணைந்து கொள்ளுங்கள். நீங்கள் வழங்குகின்ற ஒவ்வொரு டொலர்களும் அந்தக் குழந்தைகளின் வாழ்வுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கும். நாம் வாழும் கனடிய மண்ணிலும் அனைத்துமே விலை யேற்றம் கண்டுள்ளமையால் எமது நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் தேச அபிமானிகள் தங்கள் பெயர் களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தொடர்புகளுக்கு

ஈழநாடு பரமேஸ் 416 841 9600



# வேலணை மண்பெற்ற பெருமகனார் தெய்வத்திரு அம்பலவாணர் செல்லையா அவர்களது வாழ்வும் பணியும்



இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படுகின்ற இலங்கைத்தீவில் ஈழத் தமிழரின் தொன்மையைப் பறை சாற்றி நிற்கும் யாழ்ப்பாணத்திலே பழங்குடிகள் வாழ்ந்ததாகக் கருதப்படும் பல்சிறப்பு மிக்கதும் பண்டைய வணிகத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஊர்காவற்துறைக்கு வர்த்தக மையமாக விளங்கியதுமான கிராமம் வேலணை.

இத்தகைய பெருமை மிக்க ஊரின் கிழக்குப் பகுதியில் கொழும்பார் குடும்பம் என்றழைக்கப்பட்ட புகழ்பெற்ற குடும்பம் ஒன்றில் அம்பலவாணர் பார்வதிப்பிள்ளை தம்பதிகளுக்கு இளைய மகனாக 1908 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ம் திகதி திரு செல்லையா அவர்கள் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை வேலணை பங்களாவடி அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும் பெற்றுக் கொண்டார். பின்னர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் (1926 - 1928) பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுடன் சக மாணவராகப் பயின்றதுடன் அக்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய தமிழறிஞர் பண்டிதர் மகாலிங்கசிவம் அவர்களை ஆசிரியராகப் பெற்ற பெருமைக்குரியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

உள்ளத்தனைய அவரது நெடி துயர்ந்த தோற்றமும் எப்பொழுதும் அவர் அணிந்திருக்கும் தூய்மையான வெள்ளை நிற வேட்டி சால்வையும் நெற்றியில் துலங்கும் வெண்ணீற்றுக் குறியும் சந்தனப் பொட்டும் அழகான கூர் மூக்கும் புன்சிரிப்புடன் கூடிய முகமும் கள்ளங்கபடமற்ற வெள்ளை உள்ளமும் எம் உள்ளத்தில் இப்பொழுதும் அவரது எழிற் தோற்றத்தை நினைவூட்டுவனவாகவுள்ளன.

1928ஆம் ஆண்டு அதிபராகப் பதவியேற்ற இவர் 1968 ஆம் ஆண்டு வரை 40 ஆண்டுகள் அப்பதவியை அலங்கரித்த அணையா விளக்கு இந்தச் செல்லையா எனுஞ் செம்மல் என்றால் அது மிகையல்ல.

குறிப்பாக 1934 இலிருந்து 1968 வரை 34 வருடங்கள் வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் தொடர்ந்து அதிபராகக் கடமையாற்றினார். எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்பது ஆதி காலந் தொட்டுத் தமிழர்களின் கருத்தாகும். இக்கூற்றுத் தமிழ் மக்கள் கல்விக்குக் கொடுத்த முதன்மையையும் மதிப்பையும் நன்கு விளக்குகிறது.

இத்தகைய பெரும்பணியை கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகள் ஆற்றி வந்ததன் காரணமாக அதிபர் செல்லையா அவர்கள் அதிபர் மணி என்றும் பெரிய வாத்தியார் என்றும் அன்பாக அழைக்கப்படலானார். நல்லாசிரியருக்குரிய நற்பண்புகள் நிறைந்த பெரிய வாத்தியார் அவர்கள் யாரையும் கவர்ந்து ஈர்க்கும் ஆற்றல் கொண்டவராக விளங்கினார். இவரது சேவையினால் வேலணை மட்டுமல்லாது முழுத் தீவகமே பயன் பெற்றது என்றால் அது புகழாரமல்ல.

பெரிய வாத்தியார் அவர்கள் குமாரு வாத்தியார் என்றழைக்கப்பட்ட அமிர்தலிங்கம் சின்னத்தங்கம் தம்பதிகளின் மூத்த புதல்வியான இராசம்மா அவர்களை 1937 ஆம் ஆண்டு திருமணம் புரிந்து இல்லறத்தை நல்லறமாக மேற்கொண்டார். 1941ஆம் ஆண்டு சுகயீனங் காரணமாக இராசம்மா அவர்கள் இறந்தமையால் இராசம்மா அவர்களின் விருப்பத்தின் பேரில் அவரது இளைய சகோதரியான மங்கையற்கரசியை 1944 ஆம் ஆண்டு கரம் பிடித்தார். ஆசிரியமணி செல்லையா அவர்களின் பொற்றாலிப் பூங்கொடியில் பூத்த மலர்கள் பதினொன்றாகும். அதில் எழுவர் ஆண்கள் நால்வர் பெண்கள். கமலாதேவி என்ற பெண்ணும் இராதா கிருஷ்ணன் என்ற ஆணும் இறந்து விட்டனர். மற்றையோர் ஈழத்திலும் வெளி நாடுகளிலும் வளமாக வாழ்ந்து வருகின்றனர்.

இவரது மூன்றாவது மகன் மனோகரன் அவர்கள் எனது மனைவியின் குடும்பத்தினருடன் நெருங்கிப் பழகி வருபவர். எண்பதுகளின் இறுதிப் பகுதியில் எனக்கு மனோ அவர்களது அறிமுகங் கிடைத்தது. இன்றுவரை நட்புத் தொடர்வதுடன் எனது வழிகாட்டிகளில் ஒருவராகப் பழகிவருகின்றார். நல்லூர் பிரதேச செயலகத்தில் கணக்காளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பின் குடும்பத்தினருடன் வவுனியாவில் வசித்து வருகின்றார். ஐந்தாவது மகன் வரதராஜன் கணக்காளராகப் பதவிவகிப்பதுடன் கொழும்பில் இயங்கும் வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினராகவும் திகழ்வதனால் இவருடனும் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. பெரிய வாத்தியாருடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கா விட்டாலும் கனியை வைத்து மரத்தை அறியலாம் என்பதற்கிணங்க அவரது பிள்ளைகளின் பண்புகளை வைத்து அவரது குணாதிசயங்களை உணரக் கூடியதாகவுள்ளது.

அதிபர் அவர்களின் பணிகள் பன்முகப்பட்டவை. கல்விப்பணி சமூகப்பணி சமயப் பணி அரசியற்பணி என அவை விரியும். என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற அப்பர் அடிகளின் வழித்தடத்தில் தனது வாழ்வை நகர்த்தி வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய உதாரண புருசர்.

கல்விப் பணியில் தனது தனித்துவ முத்திரையைப் பதித்த இவரது மாணவர்கள் பலர் பிற்காலத்தில் நாங்கள் அதிபர் மணி செல்லையாவின் மாணவர்கள் என்று பெருமையுடன் கூறி வருவதனை இன்றுங் காண்கிறோம்.

குறிப்பாக முன்னாள் பிரதம நீதியரசர் திரு சர்வானந்தா கலாநிதி சிவா கோபால் போன்றோரைக் குறிப்பிடலாம். சைவப் பெரியார் இந்துபோட் இராசரெத்தினம் அவர்களுடன் இணைந்து சைவசமயக் கல்வியை வளர்த்தெடுக்கும் நோக்கில் சமயத் தொண்டயற்றியதுடன் சைவச் சிறார்களின் கல்வி மேம்பாட்டினைச் சீர்செய்யப் பெரிதும் உதவினார்.

1956ஆம் ஆண்டு வேலணைக் கிராம சபையின் இரண்டாம் வட்டார அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டு 1956 தொடக்கம் 1960 வரை வேலணைக் கிராமசபையின் தலைவராக ஏகமனதாகத் தெரிவாகிப் பல்வேறு சமூகப் பணிகளைத் தான் பிறந்த மண்ணுக்கு ஆற்றினார். இவர் தலைவராக இருந்த காலம் வேலணைக் கிராமசபை வரலாற்றில் ஓர் உன்னத காலம் எனலாம். இவர் இணக்கசபைத் தலைவராக இருந்த காலத்தில் வேலணைச் சமூகம் பெரிதும் பயனடைந்தது.

இவர் அரசியற் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். தமிழரசுக் கட்சியில் அதிகப் பற்றுக் கொண்ட இவர் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களான திரு வி. ஏ. கந்தையா திரு வ. நவரெத்தினம் திரு கா. பொ. இரத்தினம் முதலானோருடன் இணைந்து அக் கட்சியை வளர்த்தெடுப்பதில் ஆரம்ப காலகட்டங்களில் பெரும் பங்காற்றியவர் என்பதனை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

தமிழ் மக்களின் விடுதலை பற்றிய உணர்வு இவரது இதய நாதமாக விளங்கியது. 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கொழும்பில் அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்ட தமிழரசுக் கட்சியின் முதலாவது செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட திரு வ. நவரெத்தினம் அவர்களுக்குப் பக்கபலமாகச் செயற்பட்டு 1950 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் முதலாவது கிளையை வேலணையில் நிறுவ முன்னின்று உழைத்த பெருமகன்.

வேலணை மத்திய கல்லூரிக்கு முன்னாலிருந்த ஒரு வயலிலே சிறு கூட்டம் ஒன்று கூடி தமிழரசுக் கட்சியினது முதலாவது கட்சிக்கிளையாக வேலணைத் தமிழரசுக் கட்சி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது வரலாறானது. தமிழரசுக் கட்சியின் முதலாவது கிளையை வேலணையில் அமைத்ததன் மகத்தான பலனை ஆறு வருடம் கழித்துக் காணக் கூடியதாக இருந்தது.

1956ஆம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு வேட்பாளர் தெரிவின் போது வேலணை மண்ணின் இன்னொரு மைந்தனான திரு வி. ஏ. கந்தையா அவர்களைத் தெரிவு செய்து வெற்றி பெறச் செய்தமை வேலணைக் கிளையின் மிகப்பெரிய சாதனையாகும். கட்சியின் இந்த மகத்தான வெற்றிக்கு வழி சமைத்தவர்களில் முதன்மையானவர் பெரிய வாத்தியாரே என்பதனை திரு வ. நவரெத்தினம் அவர்கள் கனடாவிலிருந்து அனுப்பிய தனது இரங்கற் செய்தியில் விரிவாகப் பதிவு செய்துள்ளார்.



தோன்றிற் புகழொடு தோன்றுக என்ற குறளுக்கு இலக்கணமாக வாழ்ந்த பெரிய வாத்தியார் பற்றி வேலணை மத்திய கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் திரு பஞ்சாட்சரம் அவர்கள் (நீர்வேலி) குறிப்பிடுகையில் வேலணையில் தனக்குப் பிடித்த கண்ணியவான்கள் இருவர். அந்த இருவரில் இவரும் ஒருவர் என்றார்.

12-09-2004 இல் இவ்வுலகை நீத்த இத்தகைய பெருந்தகையை நினைவு கூர்வதன் மூலம் அன்னாரது சேவைகளை எமது இளஞ் சமுதாயத்தினரும் அறிந்து கொள்ளச் செய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

நயனொடு நன்றி புரிந்த பயனுடையால்
பண்பு பாராட்டும் உலகு.

**சி. இளஞ்செழியன்**
**பழைய மாணவன் 1975 -1982**
**வேலணை மத்திய கல்லூரி**

# பறிக்கப்படும் மேய்ச்சல் தரைகள்

அண்மைக் காலங்களில் இன முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தும் நிலப் பறிப்பு மற்றும் சிங்கள பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகளில், முன்னணியில் பௌத்த பிக்குகள் காணப்படுகிறார்கள். அப்படியொரு சம்பவம் கடந்த வாரம் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புறத்தில் இடம் பெற்றது.

அங்கே மயிலத்தமடு மாதவனையில் காணப்படும் மேய்ச்சல் தரையை ஆக்கிரமிக்க முற்படும் சிங்கள விவசாயிகளுக்குத் தலைமை தாங்கிய ஒரு தேரர் அங்கு நிலைமைகளை அவதானிக்கச் சென்ற பல்சமய ஒன்றியப் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் அடங்கிய குழுவை நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் முற்றுகையிட்டு வைத்திருக்கிறார்.

மயிலத்தனை மாதவனை மேய்ச்சல் தரை எனப்படுவது மட்டக்களப்பின் எல்லையில் மதுறு ஓயாவின் கிளையாகிய மாந்தரி ஆற்றை எல்லையாகக் கொண்ட ஒரு செழிப்பான மேச்சல் நிலம் ஆகும். இங்கே கிட்டத்தட்ட 25.000ஹெக்டேர் மேச்சல் தரை உண்டு. தமிழ்மக்கள் அதில் பத்தாயிரம் ஹெக்டேரைத் தான் கேட்கிறார்கள். அந்த மேய்ச்சல் தரையை நம்பி சுமார் 996 குடும்பங்கள் உண்டு. கடந்த நூற்றாண்டில் 1977இ லிருந்து அந்த மேய்ச்சல் தரையை தமிழ்ப் பண்ணையாளர்கள் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். எனினும் போர்க்காலங்களில் அது கைவிடப் பட்டிருக்கிறது.

2009 ஆம் ஆண்டு மாவட்டத்தின் அரச அதிபர் அந்த மேய்ச்சல் தரையை தமிழ் பண்ணையாளர்களுக்கு வழங்கியுள்ளார்.

2012ஆம் ஆண்டிலிருந்து சிங்கள விவசாயிகள் அந்த மேய்ச்சல் தரையை ஆக்கிரமிக்கத் தொடங்கினார்கள். எனினும், தமிழ்ப் பண்ணையாளர்கள் வழக்குகளைத் தொடுத்து அதன் மூலம் அந்த ஆக்கிரமிப்பை ஓரளவுக்கு கட்டுப்படுத்த கூடியதாக இருந்திருக்கிறது.

குறிப்பாக ஒஸ்ரின் பெர்னாண்டோ ஆளுநராக இருந்த கால கட்டத்தில் அவர் தமிழ்ப் பண்ணையாளர்களை ஒப்பீட்டளவில் பாதுகாத்திருக்கிறார். ஆனால் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததும் அங்கே ஆக்கிரமிப்பு ஒப்பீட்டளவில் அதிகரித்திருக்கிறது.

குறிப்பாக கோத்தாவின் மூளை என்று கருதப்பட்ட சிந்தனைக் குழாமாகிய வியத்மக அமைப்பைச் சேர்ந்த அனுராதா யகம்பத் கிழக்கின் ஆளுநராக நியமிக்கப்பட்ட பின் மேய்ச்சல் தரையை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டதாக்க பண்ணையாளர்கள் கூறுகிறார்கள்.

எனினும் பண்ணையாளர்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த அரசியல்வாதிகளின் துணையோடு வழக்குகளைத் தொடுத்து வழக்குகளில் தமக்குச் சாதகமான ஆணைகளையும் பெற்றிருக்கிறார்கள். அவ்வாறு 2022 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சிங்கள விவசாயிகள் தொடர்ச்சியாக அவமதித்து வருகிறார்கள். குறிப்பாக கடந்த ஜீன் மாதத்தில் இருந்து ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. மேலும் இப்பொழுது நிலவும் வறட்சியும் கால்நடைகளைப் பாதிக்கின்றது.

இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு முன்பு தலைமை தாங்கிய ஒருவர் நீதிமன்ற நடவடிக்கைகளின் விளைவாகப் பின்வாங்கி விட்டார். இப்பொழுது அங்கு நிலப்பறிப்பு நடவடிக்கைகளுக்கு ஒரு பெண் தலைமை தாங்கி வருவதாக பண்ணையாளர்கள் கூறுகிறார்கள். நடுத்தர வயதைக் கொண்ட அப்பெண் அம்பாறை.தெகிவத்த கண்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும், புதையல் தோண்டுவதற்கும், காட்டை அழிப்பதற்கும் தேவையான கனரக வாகன வளங்களோடு அவர் காணப்படுவதாகவும் தமிழ்ப் பண்ணையாளர்கள்



கூறுகிறார்கள்.சுற்றிவர மின்சார வேலி அமைக்கப்பட்ட பாதுகாப்பான தற்காலிகக் கொட்டிலில் அவர் அங்கே ஏறக்குறைய நிரந்தரமாகத் தங்கியிருக்கிறார். அவருக்குப் பலமான ஆளணிகள் உண்டு. அரச உயர் மட்டத்திலும் அவருக்கு செல்வாக்கு அதிகம். கைபேசி அழைப்பின் மூலம் அவர் அரசு அதிகாரிகளை கையாளக் கூடியவராக காணப்படுவதாக பண்ணையாளர்கள் கூறுகிறார்கள்.

அந்தப் பெண் முன்பு ஆளுநராக இருந்த அனுராதாவுக்கு நெருக்கமானவர் என்றும் தமிழ் பண்ணையாளர்கள் கூறுகிறார்கள். கடந்த வாரம் பல்சமய ஒன்றியப் பிரதிநிதிகளை முற்றுகையிட்டவர்கள் மத்தியில் அப்பெண்ணின் மகன் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த மேய்ச்சல் தரையை ஆக்கிரமித்திருக்கும் சிங்கள விவசாயிகள் ஏழைகள் அல்ல. அவர்களிடம் முச்சக்கர வண்டி, ராக்டர், காடுகளை அழிக்கத் தேவையான கனரக வாகனங்கள் உள்ளிட்ட பெறுமதியான சொத்துக்கள் உண்டு. அவர்களிடம் துப்பாக்கிகளும் உண்டு. தவிர படையினரின் ஆதரவும் மகாவலி அதிகார சபையின் பக்கபலமும் உண்டு. இதுவரையிலும் 2000க்கும் குறையாத மேச்சல்நிலம் அவர்களால் எரித்தழிக்கப் பட்டிருக்கிறது. காட்டையழித்து அதில் அவர்கள் சோளம்.கௌபி போன்ற தானியங்களைப் பயிர் செய்கிறார்கள். தமிழ்ப் பண்ணையாளர்களின் மாடுகள் உள்நாட்டு இனங்களைச் சேர்ந்தவை. அவை உள்நாட்டுத் தானியங்களை விரும்பி உண்ணும். மேச்சல் தரைக்குள் பயிர் செய்தால் என்ன நடக்கும்? மாடுகள் அந்தப் பயிர்களை மேயாமல் உண்ணாவிரதமா இருக்கும்?

இவ்வாறு தமது மேச்சல் தரையை ஆக்கிரமித்திருக்கும் பயிர்களை மாடுகள் மேயும் பொழுது அல்லது மாடுகள் காடுகளுக்குள் செல்லும் பொழுது சிங்கள விவசாயிகள் மாடுகளை சுருக்கு வைத்துப் பிடிக்கிறார்கள். அல்லது கொல்கிறார்கள் என்று பண்ணையாளர்கள் கூறுகிறார்கள். இதுவரையிலும் சுமார் 5000 மாடுகள் அவ்வாறு கொல்லப்பட்டு விட்டன. மேலும் மாடுகளைப் பிடித்து வைத்துக் கொண்டு தமிழ்ப் பண்ணையாளர்களிடம் பல லட்சம் பணத்தை தண்டமாக அறவிடுகிறார்கள்.

ஒருபுறம் மேய்ச்சல் தரை சுருங்கிக் கொண்டு வருகிறது. இன்னொரு புறம் கால்நடைகள் கொல்லப்படுகின்றன. அல்லது காணாமல் போகின்றன. இப்பொழுது வறட்சியும் வாட்டுகின்றது. இவற்றின் விளைவாக அந்த மேய்ச்சல் தரையை நம்பி வாழும் குடும்பங்கள் நிச்சயமற்ற ஓர் எதிர்காலத்தை நோக்கிச் செல்கின்றன. கிழக்கில் ஒரு லீட்டர் பால் கிட்டத்தட்ட 100 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆனால் யாழ்ப்பாணத்தில் இருநூற்று இருபது ரூபாய்.கிழக்கில், குறிப்பாக மயிலத்தனை மாதவனை மேய்ச்சல் தரையில் கிடைக்கும் மாட்டு எருவை மலையகத்தைச் சேர்ந்த விவசாயிகள் தான் அதிகம் பயன்படுத்துகிறார்கள். அந்த மாட்டெரு வியாபாரத்தை ஓர் ஒழுங்குக்குள் கொண்டு வர முடியவில்லை. அதனால் சிங்கள வியாபாரிகள் மாட்டெருவை அறா விலைக்குக் கொள்முதல் செய்வதாக பண்ணையாளர்கள் முறைப்பாடு செய்கிறார்கள். அந்த மேய்ச்சல் தரை சுருங்கிக் கொண்டே போனால் அது கிழக்கின் பொருளாதாரத்தைப் பாதிக்கும். இதுதொடர்பில் கிழக்கில் உள்ள அரசுக்கு விசுவாசமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாய் திறப்பது குறைவு.



கிழக்கில் உள்ள அரசுக்கு விசுவாசமான அரசியல்வாதிகள் வடக்கை விரோதியாகப் பார்க்கின்றார்கள். ஆனால் தமது மேய்ச்சல் தரைகளை ஆக்கிரமிக்கும் தென்னிலங்கைக் கட்சிகளுக்கு விசுவாசமாகவும் பணிவாகவும் காணப்படுகிறார்கள்.

மட்டக்களப்பில் இப்பொழுது ஏழுக்கும் குறையாத கால்நடைப் பண்ணையாளர் சங்கங்கள் உண்டு. இச்சங்கங்களில் மொத்தம் ஆறு லட்சத்திற்கும் குறையாத கால்நடைகள் உண்டு. மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரையில் மட்டும் இரண்டு லட்சத்திலிருந்து நாலு லட்சம் வரையான மாடுகள் உண்டு. ஆனால் இவற்றில் 90 ஆயிரம் மாடுகளுக்குத் தான் காதுப்பட்டி அணிவிக்கப்பட்ட பதிவு உண்டு. காதுப்பட்டி உள்ள மாடுகளுக்குத் தான் அரச திணைக்களங்களில் பதிவு இருக்கும். பதிவு செய்யப்பட்ட கால்நடைகளின் எணிக்கைக்கு ஏற்ப மேய்ச்சல் தரை ஒதுக்கப்படும். இந்த விடயத்தில் தமிழ்ப் பண்ணையாளர்கள் மாடுகளுக்கு உரிய பதிவுகளை மேற்கொள்ளத் தவறி விட்டார்கள் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். மேச்சல் தரையை ஆக்கிரமிப்பது என்பது கிழக்கின் பொருளாதாரத்தை அழிக்கும் ஒரு நடவடிக்கை மட்டு

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**– நிலாந்தன் –**



மல்ல. அதற்குமப்பால் அதற்கு ஒரு பரந்தகன்ற, நீண்டகால நோக்கிலான நிகழ்ச்சி நிரல் ஒன்று உண்டு. அது பல தசாப்த காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தமிழ்மக்களின் மரபு வழித் தாயகம் என்ற கருத்துருவத்தை சிதைப்பதன் மூலம் தமிழ்மக்களின் தேசிய இருப்பை அழிப்பதே அந்த நிகழ்ச்சி நிரல்.

முதலில் அது திட்டமிட்ட குடியேற்றங்களில் இருந்து தொடங்கியது. அதன் விளைவாக இப்பொழுது திருகோணமலை பெருமளவுக்கு சிங்கள பௌத்த மயப்பட்டு விட்டது. கிழக்கில், அம்பாறையின் நிலைமையும் அப்படித்தான்.

இரண்டாவதாக, கிழக்கில் தமிழ்–முஸ்லிம் முரண்பாட்டை ஊக்குவிப்பது. அதில் அவர்கள் கணிசமான அளவுக்கு முன்னேறி விட்டார்கள்.

மூன்றாவதாக வடக்குக் கிழக்கை சட்ட ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பிரிப்பது.

நாலாவதாக அவ்வாறு வடக்குக் கிழக்கைப் பிரித்து கிழக்கைத் தனிமைப்படுத்தி, அங்கே தமிழ்மக்கள் ஒப்பீட்டுளவில் செறிவாகக் காணப்படும் மட்டக்களப்பைத் தனிமைப்படுத்திச் சிதைத்து விடுவது.

இவ்வாறு வடக்குக் கிழக்கைப் பிரித்து தமிழ்மக்களின் தாயக ஒருமைப்பாட்டைச் சிதைக்கும் வேலைத் திட்டத்திற்கு உதவி செய்யும் அரசுக்கு விசுவாசமான கிழக்குமைய அரசியல்வாதிகள் தமது மேய்ச்சல் தரைகள் பறிக்கப்படுவதற்கு எதிராக துலக்கமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியிருந்த ஒரு பின்னணியில், தமிழ்த் தேசிய நிலைபாட்டைக் கொண்ட அரசியல்வாதிகள் அந்த விடயத்தில் ஒப்பீட்டளவில் அதிகம் அக்கறை காட்டுகிறார்கள். ஆனாலும் அவர்கள் பலமாக இல்லை என்பதைத் தான் அண்மைக்கால நிலைமைகள் உணர்த்துகின்றன.

குறிப்பாக செந்தில் தொண்டமான் கிழக்கின் ஆளுநராக நியமிக்கப்பட்ட பின் பண்ணையாளர்கள் மத்தியில் ஏதோ சிறிய அளவிற்கு நம்பிக்கை தோன்றியிருக்கிறது. அண்மையில் செந்தில் தொண்டைமான் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்திருக்கிறார். இச்சந்திப்பின் போது மேய்ச்சல் தரை விடயம் தன்னுடைய ஆளுகைக்கு உட்பட்டது என்பதனால் அதில் தான் நடவடிக்கை எடுக்கப் போவதாகக் கூறியிருக்கிறார். (22ம் பக்கம் பார்க்க)

# 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தல் இந்தியாவின் தேவைகளும் பயன்படுத்துவதில் தமிழர் தரப்பின் ஆற்றலும்

கட்டுரையாளர்:-
கலாநிதி
- கந்தையா சர்வேஸ்வரன் -

13ம் திருத்தத்தை மூழுமையாக நடைமுறைப்படுத்தல் தொடர்பான பல்வேறு பரிமாணங்களையும் கடந்த பல பத்திகளில் எழுதியுள்ளேன். எனினும் இன்னமும் தமிழ்த்தலைமைகள் மக்கள் நலனிலிருந்தும், ராஜதந்திரத்துடனும் சிந்திக்கின்றனவா? அப்படி சிந்திப்போர் அதற்கு உரிய செயல் வடிவம் கொடுக்கிறார்களா? என்ற கேள்வி இன்னமும் மேலோங்கி நிற்கிறது.

சிங்கள பௌத்த மேலதிக்கவாத சக்திகள் 13க்கு எதிராக தூண்டி விடப்பட்டு ஒன்றிணைந்து அல்லது ஒரே திசையில் செயற்படத் தொடங்கி விட்டனர். ஆனால் தமிழ்த்தலைமைகள் அரச ஆசீர்வாதத்துடன் செயற்படும் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளின் பொய்யானதும், பிழையானதும், அதிகாரத்துவமான ஒவ்வோர் செயற்பாட்டுக்கு பிரதிபலிப்பை பலவீனமாக காட்டும் வழக்கத்தையே கொண்டுள்ளனர். மேலாதிக்கவாதிகளில் இத்தகைய அனைத்து நடவடிக்கை கட்கும் தடுப்புச் சுவர் கட்டக் கூடிய தந்திரோபாயங்களை முழுமையாக வகுக்கவும் இல்லை. தந்திரோபாயத்தை செயற்படுத்த வேலைத் திட்டங்களை வருத்து செயற்படவும் இல்லை.

புத்தபிக்குகள் மற்றும் அரச நிறுவனங்களின் வட கிழக்கில் அடாவடித்தனமான சட்டங்களை நீதிமன்றத் தீர்ப்புகளை மதிக்காத செயற்பாடுகள் ஒருபுறம் சிங்கள பௌத்த ஆட்சியாளரின் மேலாதிக்கவாத செயற்பாடுகள் மூலம் தமிழ் மக்களின் நியாயங்களை உலகுக்கு உணர்த்தலாம் என எடுத்துக் கொண்டாலும் அதனை எந்தளவுக்கு தமிழ்த்தரப்பு செயற்படுத்துகிறது?

தமிழ்த் தலைமையின் காத்திரமான செயற்பாடின்மை சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பின் வேகத்தை கூட்டுமே தவிர குறைக்காது. எனவே, 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இந்தியாவின் வகிபாகம் என்ன? தமிழ்த் தலைமையின் வகிபாகம் என்ன? இரண்டும் ஒரு புள்ளியில் சந்திக்கிறதா? அல்லது முரண்டுகிறதா? என்பதிலிருந்தே வட - கிழக்கு மீதான சிங்கள - பௌத்த மேலாதிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான செயற்திட்டம் பற்றி சித்திக்க முடியும்.

இன்றைய நிலைமையில் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்தியா கோருவதற்கான உள்ளக மற்றும் பிராந்திய தேவைகளைக் காணவேண்டும்.

1 உள்ளக அரசியல் நிலையில் வரும் 2024 இல் இந்தியாவிற்கான நாடாளு மன்ற தேர்தலை இந்திய ஆட்சியாளர் எதிர் நோக்கியுள்ளனர் எனவே குறிப்பாக தமிழகத்தில் தமது ஆதரவுத் தளத்தை மேலும் வலிமைப்படுத்த இலங்கைத் தமிழர் தீர்வு விடயத்தை கையாளுதல் அவசியமாகிறது. தமிழ்த்தலைமைகள் இதற்கு ஆதரவளிப்பதும் இந்திய அரசுக்கு இவ் விடயத்தில் பலம் சேர்ப்பதாகும்.

2. பிராந்திய வகையில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இந்தியாவிற்கும் தென்னிலங்கைக்கும் இடையிலான ஓர் பாதுகாப்பு கவசமாக அமைந்துள்ளமையால் வடக்கு கிழக்கை அரசியல், பொருளாதார ரீதியில் பலப்படுத்துவது இந்திய பாதுகாப்பு நலன்களுக்கு அவசியமானது.

3 சர்வதேச அளவில் எழுச்சி பெற்று வரும் சீன ஆதிக்கம் இலங்கையிலும் உறுதியாக கால்பதித்து விட்டது. இது இந்திய பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் அச்சுறுத்தலாகும். எனவே வடக்கு கிழக்கு மாகாணம் பலப்படுத்தப்படுவது சர்வதேச அரசியல் ரீதியிலும் அவசிய மானது.

இலங்கைத் தமிழ்த் தரப்பைப் பொறுத்த வரை இந்திய தென்பகுதி பாதுகாப்பு நலன்களும் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு நலன்களும் பின்னிப் பிணைந்தவை இலங்கைத் தமிழர் ஒட்டுமொத்த பாதுகாப்பும் வட கிழக்கின் சுயாதிபத்தியத்தில் தங்கியுள்ளது. இங்கு இரு தரப்பு நலன்களும் பொதுவானவை. பிரச்சனை என்பது இந்திய இராஜதந்திர அணுமுறையின் வேகத்தை, தாக்கத்தை விட வட கிழக்கை சிங்கள பௌத்த மயமாக்கும் வேலைத்திட்டம் மிக வேகமானது இந்தியாவின் மென்போக்கு, ராஜதந்திர முறைக்கு செயல்வடிவம் பெறுமுன் வட கிழக்கு சிங்கள - பௌத்த ஆதிக்கத்தின் கீழ் வந்து விடும் அபாயத்திலிருந்து தற்காத்துக் கொள்ள வேண்டிய அவசரத்தில்



தமிழ் மக்கள் இருப்பதை இந்தியாவுக்கு உறைக்க உணர்த்த வேண்டிய பொறுப்பில் தமிழ்த்தலைமை இருக்கிறது என்பதை தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கான வேலைத்திட்டங்கள், செயற்திட்டங்களை வகுத்து காத்திரமாகவும் தந்திரமாகவும் செயற்பட வேண்டும். ஆனால் தமிழ் காங்கிரஸ் செயற்பட மாட்டோம் என்கின்றனர். தமிழரசு கட்சி டெல்லி அழைத்தாலும் போக மாட்டோம் என்கின்றனர். மீதமுள்ள ஆறும் மற்றவர்களைப் பார்க்காமல் செயலில் இறங்க வேண்டும்

இந்திய அரசியல்களம் அடுத்த ஆண்டில் நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் 2 மாதங்களில் நடைபெற இருக்கும் மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் தெலுங்கானா, மிசோரம் உட்பட்ட 5 மாநிலத் தேர்தல்கள் என்பதில் பயணித்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் இலங்கைத் தமிழர் விடயத்தை எந்தளவுக்கு அரசியல் தலைவர்கள் முக்கியத்துவம் கொடுப்பார்கள் எத்தளவுக்கு இந்தியாவின் இலங்கை இனமோதல் தீர்வு கொள்கையில் செல்வாக்கு செலுத்த முடியும், இதற்கான வழிமுறைகள் எவை என்பன பற்றி வல்லுனர்களுடன் பேசி செயற்பட வேண்டும்.

மேலும் இந்திய அரசியல் போக்கானது ஆட்சி மாற்றத்திற்கு வழி கோலுவதற்கான வாய்ப்புகளைக் கட்டியம் கூறுவதாகவுமுள்ளது. எனவே ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் புதிய ஆட்சி இலங்கைத் தமிழர் தீர்வு விவகாரத்தை காத்திரமாக கையாள்வதற்கான அடித்தளங்கள் இடப்பட வேண்டும் ஆட்சி மாற்றம் ஏற்படா விட்டாலும் கூட எதிர்க்கட்சி மிக வலுவானதாக இருப்பதற்கான சாத்தியங்கள் உண்டு. எனவே இடப்படும் அடித்தளமானது பயனுள்ளதாகவே அமையும். அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் எவ்வளவு தான் அரசியல் வேலைகளை அந்தந்த நாட்டு ஆட்சியாளருடனோ கட்சிகளுடனோ மேற்கொண்டாலும் இலங்கை இனமோதல் தீர்வு தொடர்பில் இந்திய நிலைப்பாட்டை மேவி எந்தவோர் நாடும் செயற்படாது.

அண்மையில் அமெரிக்காவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் யூ லி சங் கூறிய கருத்துக்கள் இதனை உறுதிப்படுத்துவதாக உள்ளது. அதாவது, இலங்கை இனமோதல் தீர்வு விடயத்தில் நாம் இந்தியாவின் நிலைப்பாட்டை ஆதரித்து நிற்கிறோம் என்ற சார்புபட கூறியிருந்தார்

அதேபோல், சில தினங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தலைவர்கள் சித்தார்த்தன் செல்வம் போன்றவர்களை சந்தித்த போது நீங்கள் 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரும் நிலைப்பாடே சரியானது என அங்கீகரித்ததன் மூலம் இந்திய நிலைப்பாட்டை ஆதரிப்பதை உறுதியாக வெளிப்படுத்துகிறது.

அதாவது, இந்தியாவின் ஊடாகவே அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள் இலங்கை இனமோதல் தீர்வைப் பார்க்கிறார்கள் என்பது தெளிவு. எனவே, இந்திய அரசாங்கத்தை, அரசியல் கட்சிகளை ஊடகங்களை, கருத்துருவாக்குவோரை, சமூக வலைத்தளங்களை எமது தீர்வு நோக்கி அதிக அக்கறை கொள்ள வைக்கும் பன்முக செயற்பாடுகள் அவசியம் இப் பன்முக செயற்பாடுகளுக்கான வேலைத்திட்டங்களும் நிதியும் அவசியம் இவை பற்றி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி அதிகம் சிந்திக்கவும் செயற்படவும் வேண்டும். இவை பற்றிய செயற்திட்டங்களை உருவாக்கவும் செயற்படுத்தவும் அதிக நேரங்களை செலவிட வேண்டும் இவற்றுக்கு சமாந்தரமாக தமிழ்த் தேசியப் பரப்பில் செயற்படும் கட்சிகள் முடிந்தவரை ஒன்று சேர்ந்து வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை இனமோதல் தீர்வை விரைவாக முன் நகர்த்தவள்ள தந்திரோபாயத்தை வகுக்க வேண்டும்.

குறிப்பாக அனைவரும் இணைந்து தமிழ் வேட்பாளர் ஒருவரை களமிறக்க வேண்டும். இந்திய அனுசரணையுடன் ஐநா தலையிட்டு நிரந்தர தீர்வை விரைந்து காண வேண்டும் என்ற கோரிக்கையை இந்தியாவுக்கும் ஐ.நாவுக்கும் முன் வைத்து இதுவே தமிழ் மக்களின் நிலைப்பாடு என்பதற்கான சர்வ ஜன வாக்கெடுப்பாக கருதி மக்கள் வாக்களிக்கக் கோரி தேர்தலை சந்திக்க வேண்டும்.

இத்தகைய முன்னெடுப்பானது, சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களையும் சரி, அவர்களை ஆதரிக்கும் சர்வதேச சக்திகளையும் சரி, தமிழ்த் தலைமையுடன் பேசியாக வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும், அவ்வாறு பேசுகின்ற போது 13ஐ ஆட்சியாளரின் விருப்பத்திற்கேற்ப நடைமுறைப் படுத்தாமல் தமிழ் மக்களின் தேவைக் கேற்ப நடைமுறைப்படுத்துவதை உத்தரவாதப்படுத்த முடியும் வேட்பாளர்களை ஆதரிக்கக் கூடிய நாடுகளும் தமிழ்த் தலைமைகளுடன் பேசுவர் எனவே குறிப்பிட்ட கால வரையறைக்குள் முழுமையாக நடைமுறைப்படுத்துவதையும் அத் தகைய நாடுகளும் உத்தரவாதப் படுத்தும் நிலைமையை ஏற்படுத்த முடியும்

இது மிக திட்டமிட்டு ஒன்றுபட்டு செயற்படுத்த வேண்டிய விடயம். அரச தரப்பு அல்லது ஏனைய வேட்பாளர்கள் தமிழ்த் தரப்பைப் பிரித்து தனித்தனியாக சந்தித்து மாறுபட்ட வாக்குறுதிகளை வழங்கி தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரித்து கைப்பற்ற முயல்வர். இதற்கு தமிழ்த் தலைமைகள் கிஞ்சித்தும் இடம் தரலாகாது. இவ் விடயத்தில் ரணிலுடன் நெருக்கமாக செயற்படும் நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையிவான தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் இந்தியாவுடன் பேசினால் சிங்கள மக்கள் கோவிப்பர் என வெளிப்படையாகக் கூறும் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் தமிழ் மக்களின் நலன்களிலிருந்து ஏனையவர்களுடன் ஒன்றுபட வேண்டும்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் களவுலகில் இருந்து யாதார்த்தத்திற்கு இறங்கி வர வேண்டும். ஒரு பொது வேட்பாளரை நியமிப்பதில் ஏனைய தமிழ்த் தலைமைகளுடன் இணைந்து பெரும்பான்மை முடிவுக்கு கட்டுப்பட்டு செயற்பட முன்வர வேண்டும். தேர்தல் அறிவிக்கும் வரை தூங்கி விட்டு சிங்கள வேட்பாளர்களின் பின்னால் பிரிந்து நின்று வாக்களிக்கும் நிலைக்கு செல்வது மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடுவதாகும்.

இதனை சித்தனைத் தெளிவுள்ள தமிழ் மக்கள் மன்னிக்க மாட்டார்கள் மக்கள் விடுதலை தொடர்பில் சிறந்த சிந்தனையும் காத்திரமான செயற்பாடுகளுமே மக்கள் ஆதரவைப் பெறும் மக்களை அணி திரட்டும் எனவே, பொது தமிழ் வேட்பாளர் பற்றிய பல பரிமாணங்களும் இப்போதே ஆராயப்பட வேண்டும். அதற்கு முதலில் அனைவரும் ஒன்றுபட தயாராக வேண்டும்.

இம்முயற்சியில் ஒற்றுமைக்கு வெளியில் தனியே இருப்போர் மக்களால் தனிமைப் படுத்தப்பட்டு அரசியல் ,ருந்தே ஒதுக்கப் படுவர். பொது வேட்பாளர் பற்றிய முழுமையான ஆய்வு, பொது வேட்பாளர் தெரிவு, தேர்தலின் மையமான கோஷம் இவற்றின் பின்னால் அனைத்து தமிழ் பேசும் வாக்காளர்களையும் அணி திரட்டும் தந்திரோபாயங்களும் வேலைத்திட்டங்கும் இவற்றை செயற்படுத்தும் குழுக்கள் என பூரண ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

தேர்தலுக்கு முன்னால் கால வரையுடனான முழுமையான அமுல்படுத்தலுக்கான உத்தரவாயினும் சரி அது இல்லாவிடின் தேர்தலில் தமிழ் மக்களின் மிகப்பெரும் வாக்கைப் பெறுவதும் சரி தீர்வை நோக்கி நகர்வதற்கான கதவுகளைத் திறக்கும். தமிழ்த் தலைவர்கள் இவற்றைப் புரிந்து கொண்டு விரைந்து செயற்பட வேண்டும் என்பதே தமிழ்த் தலைமைகளிடம் எதிர் பார்ப்பதாகும்.

# யாருக்கு வெற்றி? தோல்வி?

கடந்த மாதம் 29ம் திகதி, இந்தியாவின் கடற்படைக் கப்பல் ஐ.என்.எஸ் கஞ்சர் (Khanjar) திருகோணமலை துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட, குக்குரி வகுப்பு (Khukri-class) ஏவுகணை பொருத்தப்பட்ட கப்பல். அன்று மாலை ஒரு வரவேற்பு விருந்துபசாரமும் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் பங்கு கொள்வதற்கான வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. யூலை 29ம் திகதி, இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்ட திகதி. இவ்வாறானதொரு திகதியில், இந்திய கடற்படைக் கப்பலின் வருகை தற்செயலானதுதான் ஆனால் முக்கியத்துவம் மிக்கது.

1990ம் ஆண்டு, மார்ச் மாதம் 24ம் திகதி ஐ.என்.எஸ் துருப்புக்காவி கப்பல், மகர் (INS troop ship Magar) இணைந் வடக்கு கிழக்கு மாகாண சபைக்காக செயற்பட்டவர்களையும் உள்ளடக்கிய வாறு, இந்திய அமைதிப்படையின் கடைசித் துருப்புக்களுடன், திருகோணமலை துறைமுகத்திலிருந்து வெளியேறியது. அத்துடன் வடக்கு கிழக்கில், நிலை கொண்டிருந்த, 50000 இந்திய அமைதிப் படையின் 32 மாதகால சகாப்தம் முடிவுற்றது.

குறித்த கப்பலை, தமிழ் நாட்டு துறைமுகத்தில் நிறுத்துவதற்கு, அப்போதைய தமிழ் நாட்டு முதலமைச்சர் கருணாநிதி அனுமதிக்கவில்லை. மார்ச் மாதத்தில், வடகிழக்கு மாகாண சபையை கலைத்த, அண்ணாமலை வரதராஜப் பெருமாள், தனிநாட்டுக்கான பிரகடனம் ஒன்றை முன் வைத்திருந்தார். இதனை காரணம் காண்பித்தே, கருணாநிதி, தமிழ் தேசிய இராணுவத்தின் உறுப்பினர்கள், தமிழ் நாட்டுக்கள் நுழைவதற்கான அனுமதியை மறுத்தார்.

இதனைத் தொடர்ந்து, கேரள துறைமுகத்திலும் குறித்த கப்பல், அனுமதிக்கப்படவில்லை. இறுதியாக, ஒடிசா, விசாக பட்டணத்தில் தான் குறித்த கப்பல் நங்கூரமிடப்பட்டது. கடந்த மாதம் யூலை29 இல் திருகோணமலை துறைமுகத்தில் தரித்துநின்ற ஐ.என்.எஸ் கஞ்சர், விசாகபட்டணத்திலிருந்தே அதன் பயணத்தை ஆரம்பித்திருந்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பு, பிரேமதாச அரசாங்கத்துடன் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டதை தொடர்ந்தே, இந்திய படைகள் வடக்கு கிழக்கிலிருந்து முற்றிலுமாக வெளியேற்றப் பட்டது. இந்தியா, வடக்கு கிழக்கில் அதன் செல்வாக்கை இழந்து விட்டதாக, முக்கியமாக, மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை துறைமுகத்தை இழந்து விட்டதாக, அப்போது, நியூயோக்ஸ் டைம்ஸ் பத்திரிகையில் கட்டுரையொன்று வெளியானது. 2023, யூலை, 29ம் திகதி, இந்திய கடற்படை கப்பலின் நிகழ்வில் மகழ்ச்சியாக பேசிக் கொண்டிருக்கும் போது, எனக்கு இந்த விடயங்களே நினைவுக்கு வந்தது. இதனை கப்பலின் கேப்டனிடம் தெரிவித்தேன். இதெல்லாம் உங்களைப் போன்ற புத்திஜீவிகளுக்கான விடயமென்று கூறி, சிரித்துக் கொண்டார்.

இலங்கை விடயத்தில் இந்தியாவின் நேரடியான தலையீடு தோல்வியடைந்தது. அன்றைய சூழலில், இது தொடர்பில் இந்தியா கடும் அதிருப்தியுற்றது. குறிப்பாக பிரேமதாச மீது அவர்களுக்கு கோபம் இருந்தாலும் கூட இந்தியபடைகளுடன் விடுதலைப் புலிகள் மோதியமை, இந்தியாவின் வெளியேற்றத்திற்காக பிரேமதாசவுடன் இணைந்து கொண்ட விடயங்களே, இந்தியாவை பொறுத்த வரையில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து, இலங்கையின் உள்நாட்டு அரசியல் பிரச்சினையில் தலையீடு செய்வதிலிருந்து இந்தியா விலகிக் கொண்டது. இந்தியா விலகியிருக்க வேண்டுமென்பதே விடுதலைப் புலிகள் அமைப்பின் விருப்பமாகவும் இருந்தது.

இந்தியா விலகிய பின்னரான 30 வருட காலப்பகுதியில் இலங்கையில் பல்வேறு விடயங்கள் இடம்பெற்று விட்டன. ஆனால் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை காணும் விடயத்தில், இந்திய–இலங்கை ஒப்பந்தத்தை தாண்டி இரண்டு தரப்புக்களாலுமே நகர முடியவில்லை. இது எங்களின் உள் விவகாரம், நாங்கள் இதனை பார்த்துக் கொள்கின்றோமென்று கூறித் தான், இந்திய படைகள் வெளியேற்றப்பட்டன. ஆனால் இந்தியா இல்லாமல் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியுமென்று கூறியவர்களால் ஒரு அடி கூட முன்



னோக்கி நகர முடியவில்லை. இந்தியா இல்லாமல், தனிநாடு ஒன்றை காண முடியுமென்று கூறித் தான், விடுதலைப் புலிகள் அமைப்பு, தனி வழியில் சென்றது. ஏராளமான உயிர் தியாகங்களையும் செய்தது. பெருந் தொகையான மக்கள் கொல்லப்பட்டனர்.

ஆனால் இப்போது, 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இந்தியாவின் தலையீட்டை தமிழ் கட்சிகள் கோருகின்றன. எங்களுடைய பிரச்சினையை நாங்களே பேசித் தீர்த்துக் கொள்வோமென்று கூறிய சிங்கள தரப்புக்களாலும், இனப் பிரச்சினைக்கான தீர்வை காண முடியவில்லை. இந்தியா எங்களுக்குத் தேவையில்லை, வெளியேறு என்று கூறிய தமிழர்களாலும் வெற்றி பெற முடியவில்லை. இப்போது தோல்வியடைந்திருப்பது யார்?

சந்தர்ப்பங்களை தவறி விட்டால், அது எவ்வாறான நிலைமையை ஏற்படுத்தும், ஒரு இனத்தை எந்த நிலைக்கு கொண்டு செல்லும் என்பதற்கு ஈழத் தமிழினம் ஒரு வாழும் சாட்சி. ஈழத் தமிழரின் இந்த நிலைக்கு யார் காரணமென்று கேட்டால், இந்தியாவை நோக்கி அமெரிக்காவை நோக்கி விரல் நீட்டுவதற்கு, நம் மத்தியில் இப்போதும் பலருண்டு. ஆனால் இந்தியாவும் அமெரிக்காவும் முன்னர் எவ்வாறு சிந்தித்தனரோ, அவ்வாறு தான் இப்போதும் சிந்திக்கின்றனர். அவர்கள் எப்போதும் அப்படித் தான் இருப்பார்கள்.

பலம் பொருந்திய நாடுகளை வழி நடத்துவது அவர்களின் நலன்கள் மட்டுமேயாகும். அவர்களது நலன்களுக்குள் நமது நலன்களை தேடுவதில் வெற்றிபெற முடிந்தால், அதுவே ஈழத் தமிழனத்தின் வெற்றியாக இருக்கும். ஆனால், அவ்வாறானதொரு வெற்றியை நம்மால் பெற முடியவில்லை. வெற்றிக்கான வாய்ப்புக்களை நாங்கள் தவற விட்டு விட்டோம். இப்போது இருப்பதை பாதுகாத்துக் கொண்டு, வாய்ப்புகளுக்காக காத்திருப்பதை மட்டுமே ஈழத் தமிழர் தலைமைகள் என்போர் செய்ய முடியும்.

இந்தியா தொடர்பில் ஈழத் தமிழ்ச் சூழலில் போதிய புரிதல் இருந்திருக்கவில்லை. இது சர்வதேச அரசியலை புரிந்து கொள்வதிலுள்ள பலவீனத்தின் விளைவு. இந்தியாவை எட்ட வைக்க வேண்டும், இந்தியா இல்லாமல் விடயங்களை கையாள முடியுமென்னும் சிந்தனையானது, இந்த அரசியல் புரிதலிலுள்ள, பலவீனத்தின் விளைவு தான். ஆரம்ப காலத்தில் இந்த விடயத்தில் போதிய புரிதல் இல்லாமலிருந்ததை மன்னிக்கலாம். ஆனால் ஒரு கட்டத்திற்கு பின்னர் அவ்வாறான புரிதல் ஏற்படாமல் போனதுதான் தவறானது.

இந்தியா எக்காலத்திலும் தவிர்க்க முடியாத ஒரு சக்தி. இது நமது விருப்பு வெறுப்புக்கள் தொடர்பான விடயமல்ல. சர்வதேச அரசியலை விருப்பு வெறுப்புக்களிலிருந்து நோக்கினால் நம்மால் ஒரு போதுமே விடயங்களை புரிந்து கொள்ள முடியாமல் போகும். இது தொடர்பில் எனது முன்னைய பத்திகளிலும் குறிப்பிட்டிருக்கின்றேன். அதே போன்று, நீதி, அநீதி, தர்மம் என்னும் சொற்கள் கொண்டும் சர்வதேச அரசியலை உற்று நோக்கக் கூடாது. அவ்வாறு நோக்கினாலும் நாம் விடயத்தை தவறவிட்டு விடுவோம்.

ஒரு காலத்தில், தமிழ் இயக்கங்களின் மத்தியில், உலகெங்கும் ஒடுக்கப்பட்ட சக்திகளோடு நாங்கள் தொடர்புகளை பேணிக் கொள்ள வேண்டும். அவர்களின் ஆதரவை திரட்டிக் கொள்ள வேண்டுமென்னும் பார்வை மேலோங்கியிருந்தது. தங்களை ஒரு புரட்சிகர சக்தியாக எண்ணிக் கொண்டதன் விளைவாகவே, இவ்வாறான பார்வையை பலரும் வரித்துக் கொண்டனர். ஆனால் இதற்கு மாறாக அரசுகளுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பில் சிந்தித்திருந்தால், அது, நமக்கான அங்கீகாரத்தை பெறுவதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும்.

இந்தியாவுடனான தொடர்பு, இயக்கங்களுக்கு அவ்வாறான அங்கீகாரத்தையே வழங்கியது. திம்பு பேச்சுவார்த்தையின் மூலம், இயக்கங்களின் அது வரையான ஆயுத நடவடிக்கைகள் அனைத்துக்கும் அரசியல் பெறுமதி கிடைத்தது. இந்தியாவின் தலையீட்டினால் தான் அந்த வாய்ப்பு கிடைத்தது. அதன் நீட்சி தான் இந்திய–இலங்கை ஒப்பந்தம். அந்த ஒப்பந்தத்தை பயன்படுத்துவதன் மூலம் மட்டும் தான், தமிழர் அரசியலை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த முடியுமென்னும் நிலைமையே அன்றிருந்தது.

ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கம் அதனை எதிர்ப்பதன் மூலம், அடுத்த கட்டத்தை நகர்த்த முடியுமென்று நம்பியது. இந்தியாவை விரோதித்துக் கொள்வதன் ஊடாக, அடுத்த கட்டத்திற்கு செல்ல முடியுமென்று நம்பியது. அதற்காக செயற்பட்டது. அதன் விளைவு, இப்போது தமிழர்களை ஒரு இடத்தில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றது. இந்த இடத்திலிருந்து எங்கு செல்வது செல்ல முடியுமா என்னும் கேள்வியுடன்தான், கடந்த 14 வருடங்களாக, மல்லுக்கட்டிக் கொண்டிருக்கின்றோம்.

விடயங்களை திரும்பிப் பார்த்தால் ஒரு படிப்பினை நமக்கு முன்னாலிருக்கின்றது. சில விடயங்களை ஏற்றுக் கொண்டு செல்ல மறுக்கின்ற சந்தர்ப்பங்களில், நாங்கள் மேலும் மோசமான பின்னடைவுகளை சந்தித்திருக்கின்றோம். 1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு, மாகாண சபையில் பங்கு கொள்ளும் முடிவை அனைவருமாக எடுத்திருந்தால், அதிலிருந்து முன்னோக்கி பயணித்திருக்கலாம்.

இங்கு விடயம் எவ்வளவு அதிகாரங்கள் கிடைக்கின்றன என்பதல்ல முக்கியம், முன்னோக்கி செல்வதற்கு நமக்கு எந்தளவு வாய்ப்புண்டு என்பதை மட்டுமே நோக்க வேண்டும். இந்த இடத்தில் இணங்கிச செல்ல மறுத்ததால், அரசியல் சூழ்நிலை முற்றிலும்

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –



மாற்றமடைந்தது. நண்பராக இருந்த ஒரு பிராந்திய சக்தி நம்மிலிருந்து விலகிச் சென்றது. இந்தியாவின் பார்வையில், ஈழத் தமிழர் நம்பிக்கைக்குரிய தரப்பல்ல என்னும் நிலைமை உருவாகியது. அவ்வாறு இந்தியா கருதினால், அது தவறான பார்வையல்ல. ஏனெனில் அவ்வாறான சம்பவங்களே நடந்திருக்கின்றன.

இரண்டாவது, சந்தர்ப்பம், ஒஸ்லோ பேச்சுவார்த்தை. அப்போதும் தனிநாட்டுக்கான மாற்றுத் தீர்வொன்றை சர்வதேச அரங்கில் முன் வைப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. அதனை விடுதலைப் புலிகள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இந்தக் காலத்தில், தென்னாபிரிக்க இராஜதந்திரி, தற்போது தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாக இருக்கும் சிறில் ரமபோசா, ஒரு தனிப்பட்ட கலந்துரையாடலில், இப்படிக் கூறினாராம். எங்களுடைய அனுபவத்தில் உங்களுக்கு ஒன்றை சொல்வேன். இப்போது கிடைத்திருக்கும் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு ஏதாவது, ஒரு தீர்வுக்கு நீங்கள் செல்லவில்லையென்றால், இந்த யுத்தத்தில் நீங்கள் தோற்கடிக்கப்படுவீர்கள். நீங்கள் 40 வருடத்திற்கு பின்நோக்கிச் செல்வீர்கள். இறுதியில் அது தான் நடந்திருக்கின்றது.

36 வருடங்களுக்கு முன்னரான இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற, 13வது திருத்தச்சட்டத்தை நோக்கி, அதனையாவது, பாதுகாக்க முடியுமா என்னும் கேள்வியுடன் எங்களுடைய அரசியல் நாட்கள் நகர்கின்றன. அதற்கும் இந்தியாவின் ஆதரவில்லாமல் சாத்தியமில்லையென்னும் நிலையில் தான் நாமிருக்கின்றோம்.

இன்றுள்ள, இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி. ஜெயசங்கர், இந்திய இலங்கை ஒப்பந்த காலத்தில், கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில், அரசியல் செயலராக கடையாற்றிக் கொண்டிருந்தார். விடுதலைப் புலிகளின் எதிர்ப்பை தொடர்ந்து, மாகாண சபை தேர்தலில் போட்டியிடுவதற்கு அனைவரும் தயங்கிய போது, அவர் நேரடியாகவே சிலரிடம் பேசியதாகக் கூட தகவலுண்டு.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்துங்கள். தவற விடாதீர்களென்று அவர் கூறியிருக்கின்றார். இன்று காலம் எவ்வாறு நகர்ந்திருக்கின்றது? இன்று அவரிடம் சென்று, 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு உதவுங்கள், மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்துவதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று நாம் கோருகின்றோம். இது எதனை உணர்த்துகின்றது?

(21ம் பக்கம் பார்க்க)

# டிஜிட்டல் படையெடுப்பா?

இலங்கை மீது இந்தியா டிஜிட்டல் படையெடுப்பை மேற்கொள்கிறதா என்ற சந்தேகத்தை எழுப்பியிருக்கிறது முன்னிலை சோஷலிசக் கட்சி. அந்தக் கட்சியின் கல்விச் செயலாளர் புதுது ஜாகொட கண்டியில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இது குறித்த சில அடிப்படைச் சந்தேகங்களை எழுப்பியிருந்தார்.

இலங்கைக் குடிமக்கள் அனைவருக்கும் வழங்கப்படவுள்ள இலத்திரனியல் அடையாள அட்டையை தயாரிக்கும் ஒப்பந்தம், இந்திய நிறுவனத்துக்கு வழங்கப்படுவதை ஒட்டியே, இந்தக் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டிருக்கிறது.

2013இல் இலத்திரனியல் அடையாள அட்டை வழங்கும் பணிகளை மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் முன்னெடுத்திருந்தது. அப்போது அந்த ஒப்பந்தம் பாகிஸ்தானின் தேசிய தரவு மற்றும் பதிவு அதிகாரசபைக்கு வழங்கப்பட்டது.

அதன் பின்னர் தரவுகளை ஒழுங்கமைத்து இலத்திரனியல் அடையாள அட்டை வழங்கும் பணிகள் தொடங்கப்படவுள்ளதாகவும் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. ஆனால், அந்த திட்டம் பின்னர் கை விடப்பட்டது. அப்போது, பாகிஸ்தான் நிறுவனத்திடம் இலங்கையர்களின் தனிப்பட்ட தரவுகள் சிக்கப் போகிறது என்றோ, இதனால் தேசிய பாதுகாப்பு ஆபத்துக்கு உள்ளாகும் என்றோ எந்தக் கட்சியும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

இப்போது இந்தியாவின் மெட்ராஸ் செக்யூரிட்டி பிரின்டேர்ஸ் நிறுவனத்துக்கு இந்த ஒப்பந்தம் வழங்கப்படவுள்ளது என்ற நிலையில் தான், இந்தியாவின் டிஜிட்டல் கொலனியாக இலங்கை மாறப் போகிறது என்றும், இந்தியாவின் டிஜிட்டல் படையெடுப்பு என்றும் சில கட்சிகள் எதிர்க்கத் தொடங்கி விட்டன.

ஒரு நாட்டின் தரவுகள் இன்னொரு நாட்டின் கையில் கிடைக்கும் போது பாதுகாப்பு குறைபாடுகள் ஏற்படுவது வழக்கம் தான். இலங்கையர்களின் தரவுகளை ஒருங்கிணைக்கும் போது, அமெரிக்க நிறுவனமாக இருந்தாலும் சரி, சீன நிறுவனமாக இருந்தாலும் சரி, இந்திய நிறுவனமாக இருந்தாலும் சரி– பாதுகாப்பு மீறல் இருக்கத் தான் செய்யும்.

தனிப்பட்ட தரவுகளைத் திரட்டும், எந்தவொரு புலனாய்வு அமைப்பும், கிடைக்கின்ற எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்தி தரவுகளைத் திரட்டிக் கொள்ளும். எதையும் விட்டு வைக்காது. எனவே, இந்திய நிறுவனம் இலத்திரனியல் அடையாள அட்டைக்குரிய தரவுகளைச் சேகரிக்கும் போது அவை இந்திய புலனாய்வு அமைப்புகளால் பயன்படுத்தப்படாது என்று உறுதி கூற முடியாது. அவ்வாறு நம்பிக்கை கொடுக்கப்பட்டால் அது பொய்யானது.

இலத்திரனியல் அடையாள அட்டை தனிநபர்களின் முக அமைப்பு, கைவிரல்களின் ரேகை அமைப்பு, கண்விழி அமைப்பு உள்ளிட்ட உயிரியல் தரவுகளையும் கொண்டதாக இருக்கும். இந்தியாவில் இத்தகைய தரவு திரட்டல் பெரும்பாலும் நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது.

ஆதார் அட்டை திட்டத்தின் மூலம், இந்தத்தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. படிப்படியாக ஆதார் அட்டை எல்லா செயல்முறைகளுக்குமான அத்தியாவசிய தேவையாக மாற்றப்பட்டிருக்கிறது.

வங்கிக் கணக்குகள் தொடக்கம், அரச அலுவலகங்களுக்கு மாத்திரமன்றி, நகைகள், காணிகள், வீடுகளின் கொள்வனவு விற்பனைகளுக்கும் கூட ஆதார் அட்டை அவசியமாக்கப்பட்டுள்ளது.

எந்தக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் அது பயன்படுத்தப்படுவதும், தனிநபர்களின் ஆதார் இலக்கம் எல்லா வங்கிக் கணக்குகளுக்கும், பயன்படுத்தப்படுவதும், அரசாங்கத்தினால் குடிமக்களின் வருமானம், செலவினம், சேமிப்புகள் போன்ற தரவுகளை திரட்டவும், வருமான வரி அறவீட்டை சுலபப்படுத்தவும், உதவுகிறது. வரி ஏய்ப்பாளர்களை அடையாளம் காணவும், சொத்து முறைகேடுகளை தடுக்கவும் இந்த ஆதார் அட்டை முறை பெருமளவில் உதவியிருக்கிறது. இந்தியாவில் ஆதார் அட்டை நடைமுறை கொண்டு வரப்பட்ட பின்னர் தான், வாக்காளர் அட்டைகள் முறைப்படுத்தப்பட்டன. கடவுச்சீட்டுகள் வழங்கலிலும் ஒழுக்க மீறல்கள் தடுக்கப்பட்டன. அதற்கு முன்னர் இந்தியாவில் தேசிய அளவில் எந்த அடையாள அட்டையும் இருந்ததில்லை.



இலங்கையில் 1970ஆம் ஆண்டில் இருந்து தேசிய அடையாள அட்டை வழங்கப்படுகிறது. ஆனாலும், அதனை தனியே தமிழர்களைப் பிரித்தறிந்து அடையாளம் காணுவதற்கான பாதுகாப்பு நோக்கங்களுக்காகவே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டது.

இப்போது தான் அரசாங்கம் டிஜிட்டல் அடையாள அட்டைகள் மூலம், தரவுகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்த முற்படுகிறது. அரசாங்கம் இந்த திட்டத்தை 10 ஆண்டுகளுக்கு முன்னரே நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும்.

ஆனால், நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அந்த திட்டம் செயற்படுத்தப்படவில்லை. இப்போது இந்திய நிறுவனத்தின் ஊடாக அனைத்து குடிமக்களின் தரவுகளையும் ஒருங்கிணைக்கவும், இலத்திரனியல் அடையாள அட்டைகளை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இது இலங்கையர்களின் தனிப்பட்ட தரவுகளை இந்தியாவிடம் ஒப்படைப்பதற்குச் சமமானது தான். விமான நிலையங்களில் உயிரியல் தரவு சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்த அண்மையில் அமெரிக்கா உதவ முன் வந்த போது அதற்கு எதிர்ப்புக் கிளம்பியது நினைவிருக்கலாம்.

இவ்வாறான எதிர்ப்புகளின் ஊடாக இந்த திட்டங்களை நிறுத்தி விட முடியாது. ஏனென்றால், இலங்கையைப் பொறுத்தவரையில் பல்வேறு முன்னேற்றங்களை எட்ட வேண்டுமாயின், இலத்திரனியல் அடையாள அட்டை முறை அவசியம்.

குறிப்பாக, வருமான வரி அறவீடு, சொத்துக்கள் விற்பனை– கொள்வனவு, வங்கிக் கணக்குப் பரிமாற்றங்கள் போன்ற, அரசாங்கத்தின் வருமானங்களில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை இந்த இலத்திரனியல் அட்டைகளின் ஊடாக ஏற்படுத்த முடியும்.

இலங்கையர்கள் வருமான வரி செலுத்துவது மிகமிக குறைவு என்பது அண்மையில் வெளியான தரவுகளின் மூலம் தெரியவந்திருக்கிறது. பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண உதவ முன்வந்த சர்வதேச நாணய நிதியம், இந்த ஆண்டின் முதல் அரையாண்டில் 1300 பில்லியன் ரூபா வரி வருமானத்தை திரட்ட வேண்டும் என்று அரசாங்கத்துக்கு நிபந்தனை விதித்திருந்தது. ஆனால், அரசாங்கம் முதல் அரையாண்டில் 1317.05 பில்லியன் ரூபா (92 வீதம்) வரி வருமானத்தையே அடைந்திருக்கிறது. வருமான வரி அறவீட்டுக் குறைபாடுகளால் தான் இந்த நிலை காணப்படுகிறது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் 5 இலட்சம் பேரின் கோவைகள் பதிவு செய்யப்படுள்ள போதும், 31 ஆயிரம் பேரே வருமான வரியைச் செலுத்துகின்றனர். நாட்டில் 1 இலட்சத்து 5 ஆயிரம் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் உள்ள போதும், 328 நிறுவனங்கள் மட்டுமே, மொத்த வருமான வரியில் 82 வீதத்தை செலுத்துகின்றன.

எஞ்சியவை வரி செலுத்தவில்லை. அல்லது வரி ஏய்ப்பில் ஈடுபடுகின்றன. இவ்வாறான மோசடிகளுக்குத் தீர்வு காண்பதும், வங்கி சொத்து மோசடிகளை தடுப்பதற்கும், அரசாங்கத்துக்கு கிடைக்க வேண்டிய வருமானங்களை முறையாக அறவிடுவதற்கும், ஏனைய நிர்வாக தேவைகளுக்கும் இந்த இலத்திரனியல் அடையாள அட்டைகள் கைகொடுக்கும். இலத்திரனியல் அட்டையை அறிமுகம் செய்வது பல்வேறு வழிகளில் அரசாங்கத்துக்கு நன்மையை ஏற்படுத்தும். விரைவாக இதனை நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் வெளிநாட்டு நிறுவனங்களை அழைக்கத் தான் வேண்டும்.

ஏனென்றால், உள்நாட்டில் அத்தகைய பாரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் இல்லை. டிஜிட்டல் கட்டமைப்பை இலங்கை உருவாக்கத் தவறி விட்டது.

**கட்டுரையாளர்**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**



உள்நாட்டில் இலத்திரனியல் தொழில்நுட்ப நிறுவனங்களை பெரியளவில் உருவாக்கத் தவறியது இலங்கையின் பெருங் குறைபாடு.


அதேவேளை வெளிநாட்டு நிறுவனங்களின் வருகையினால் தீமைகளும் இருக்கின்றன. குறிப்பாக இலங்கையர்கள் ஒவ்வொருவரின் தனிப்பட்ட தரவுகள், அந்த நிறுவனங்களிடம் சிக்கி விடும். இலங்கையர்கள் பலருக்கும் தெரியாத சொந்த தகவல்களைக் கூட, அவர்களால் உயிரியல் தொழில்நுட்பங்களின் மூலம் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இது ஒரு வகையில் தேசிய பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் தான். இது இலங்கையை இந்தியாவின் டிஜிட்டல் கொலனியாக்கி விடும் என்ற புபுது ஜாகொடவின் கருத்து முற்றிலுமாக நிராகரிக்க கூடியதல்ல.

ஆனால், சின்னஞ்சிறிய நாடான இலங்கை, போதுமான டிஜிட்டல் கட்டமைப்புகளை வளர்த்தெடுக்கத் தவறியதற்காக அவ்வாறான இழப்புகளை சந்தித்தே ஆக வேண்டும்.

இல்லையேல், பொருளாதார ரீதியாக இடம் பெறும் குற்றங்களையோ, ஏய்ப்புகளையோ தடுக்கவோ தவிர்க்கவோ முடியாது.

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# புதிய அரசியல் அணி சேருகைகள்!



கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
மூத்த பத்திரிகையாளர்
– வீ.தனபாலசிங்கம் –



கடந்த வருடத்தைய பொருளாதார நெருக்கடியும் மக்கள் கிளர்ச்சியும் நவீன இலங்கை அதன் வரலாற்றில் முன்னென்றும் கண்டிராதவை. அதே போன்றே அவற்றுக்கு பின்னரான அரசியல் நிகழ்வுப் போக்குகளும் கட்சிகளின் புதிய அணிசேருகைகளும் கூட முன்னர் எவரும் நினைத்துப் பார்த்திராதவை.

அண்மைய நாட்களாக அரசியல் கட்சிகள் புதிய கூட்டணிகளை அமைக்கும் முயற்சிகளில் தீவிர அக்கறை காட்டத் தொடங்கியிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

ஜனாதிபதி தேர்தலை தவிர வேறு எந்த தேர்தலையும் அண்மைய எதிர்காலத்தில் எதிர்பார்க்க முடியாது என்பதே யதார்த்த நிலையாக இருக்கும் போது சில முக்கிய எதிரணி கட்சிகளின் கூட்டணி அமைக்கும் முயற்சிகளை நோக்கும் போது அவை ஜனாதிபதி தேர்தலுக்கு மாத்திரமல்ல, பாராளுமன்ற தேர்தலுக்கும் கூட தங்களை தயார்படுத்தத் தொடங்கி விட்டன போன்று தெரிகிறது.

ஜனாதிபதி தேர்தலை தவிர வேறு எந்த தேர்தலிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அக்கறை இல்லை. வேறு தேர்தல்களைப் பற்றி அவர் முன்னிலையில் எவராவது பேசினால் அவருக்கு ஆத்திரமும் கூட வருகிறது. வேறு எந்த தேர்தலையும் தற்போதைக்கு நடத்துவதற்கு அவரும் அரசாங்கமும் அனுமதிக்கப் போவதுமில்லை என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சி தேர்தல்களையோ அல்லது அண்மைய வாரங்களாக வலியுறுத்தும் மாகாண சபை தேர்தல்களையோ நடத்த இறங்கி வரக்கூடியதாக அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுக்க மக்களை அணிதிரட்டி வீதிகளில் இறக்கக்கூடிய வல்லமையும் எதிரணிக் கட்சிகளிடம் இல்லை.

இரு மாதங்களுக்கு முன்னர் நுவரேலியாவில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தேசிய சட்ட மகாநாட்டில் உரையாற்றிய விக்கிரமசிங்க இளைஞர்கள் உட்பட நாட்டு மக்களில் அதிகப் பெரும்பான்மையானவர்களுக்கு தேர்தல்களில் மாத்திரமல்ல, அரசியல் கட்சி முறையிலும் நம்பிக்கை இல்லாமற் போய் விட்டது என்றும் தேர்தல் ஒன்று நடைபெறும் பட்சத்தில் சகல கட்சிகளும் சேர்ந்து பெறக்கூடிய வாக்குகளும் கூட ஐம்பது சதவீதத்தை தாண்டப் போவதில்லை என்றும் கூறியது எல்லோருக்கும் நினைவிருக்கும்.

தேர்தல்களுக்கு முகங் கொடுக்கத் தயங்கும் ஒரு ஜனாதிபதி அவ்வாறு கூறுவதில் உள்ள பொருத்தப்பாடு குறித்து கேள்விகள் உண்டு. ஆனால், இன்றைய நிலையில் எந்த அரசியல் கட்சியுமோ அல்லது அரசியல் அணியுமோ மக்களின் அமோக செல்வாக்குடன் இல்லை என்பது உண்மையே.

ஜனாதிபதி தேர்தல் நடை பெற்றால் பிரதான வேட்பாளர்களில் எவருமே ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை முதல் சுற்று எண்ணிக்கையில் பெறக்கூடிய சாத்தியம் குறித்தும் பாராளுமன்ற தேர்தலில் எந்தவொரு அணியுமே அறுதிப் பெரும்பான்மையைப் பெறும் சாத்தியம் குறித்தும் வலுவான சந்தேகங்களை அரசியல் அவதானிகள் எழுப்புகிறார்கள்.

சில மாதங்களுக்கு முன்னர் சில சிவில் சமூக அமைப்புக்களினால் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்புகளும் இதையே உணர்த்தி நின்றன. இத்தகைய பின்புலத்திலேயே தற்போது அரசியல் கட்சிகள் முன்னெடுக்கும் கூட்டணி முயற்சிகளை நோக்கவேண்டியிருக்கிறது.

உள்ளூராட்சி தேர்தல்களுக்கு நியமனப் பத்திரங்கள் கோரப்பட்ட போது கூட்டணி அமைப்பது குறித்து அக்கறை காட்டாத எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தி தலைவருமான சஜித் பிரேமதாச தற்போது எந்த தேர்தல் பற்றியும் உறுதியான அறிவிப்பு வெளிவராத நிலையில் கூட கூட்டணி அமைக்கும் முயற்சிகளில் இறங்கியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. ராஜபக்சாக்களின் பொதுஜன பெரமுனவில் இருந்து வெளியேறி பாராளுமன்றத்தில் சுயாதீனமான அணிகளாக செயற்படுபவற்றில் ஒன்றான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், டலஸ் அழகப்பெரும தலைமையிலான அணியுடன் முக்கியமான பேச்சுவார்த்தைகளை பிரேமதாச அண்மையில் நடத்தியிருந்தார். 13 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அந்த அணியுடன் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி அமைக்கும் தறுவாயில் இருக்கிறது என்றும் ஜனாதிபதி தேர்தலில் அந்த அணி பிரேமதாசவை ஆதரிக்கும் என்றும் கூறப்படுகிறது.

அதேவேளை அந்த அணி பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சின்னத்தில் போட்டியிடக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் அழகப்பெருமவை பிரதமர் பதவிக்கு நியமிக்க வேண்டும் என்று அவர்கள் விருப்பத்தை வெளியிட்டிருப்பதாகவும் கடந்த வாரம் செய்திகள் வெளியாகியிருந்தன.

கடந்த வருடம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் அழகப்பெருமவுக்கு ஆதரவாக தனது வேட்பு மனுவை பிரேமதாச வாபஸ் பெற்றுக் கொண்டதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இரு தரப்பினரும் ராஜபக்சாக்களுக்கும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கும் எதிராக எதிர்காலத்திலும் ஒத்துழைத்துச் செயற்படக்கூடிய வாய்ப்புக்கள் தாராளமாக இருக்கின்றன என்று நம்பலாம்.

அதேவேளை ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரோ பலரோ தங்கள் பழைய தலைவரான விக்கிரமசிங்கவிடம் சென்று விடக் கூடிய சாத்தியத்தையும் நிராகரிப்பதற்கில்லை. பிரேமதாச தனது கட்சியை முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும் தெரியவில்லை. அதனால் பலமான கூட்டணியொன்றை அமைத்து தன்னை வலுப்படுத்த வேண்டிய அவசியமும் அவருக்கு இருக்கிறது.

இது இவ்வாறிருக்க, உள்ளூராட்சி தேர்தல் களுக்காக பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைத்து நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்த ஜனாதிபதியின் ஐக்கிய தேசிய கட்சி தற்போது பெரமுனவில் இருந்து உறுப்பினர்களை இழுத்தெடுத்து தன்னுடன் ஒத்துப் போகக் கூடிய வேறு கட்சிகளையும் சேர்த்துக் கொண்டு பரந்த கூட்டணியொன்றை அமைக்கும் முயற்சிகளில் இறங்கியிருக்கிறது.

அடுத்து வரக்கூடிய ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்சாக்களின் ஆதரவுடன் விக்கிரமசிங்க களமிறங்கக் கூடிய சாத்தியம் குறித்து பேசப்பட்ட காலம் ஒன்று இருந்தது. அந்த நிலைமை இப்போது இல்லை. எந்த தேர்தலிலும் ராஜபக்சாக்களை முன்னிலைப்படுத்தி களமிறங்குவது குறித்தே பொதுஜன பெரமுனவின் முக்கிய அரசியல்வாதிகள் பேசி வருகிறார்கள். இலங்கை வரலாறு முன்னென்றும் காணாத மக்கள் கிளர்ச்சி தங்களை ஆட்சியதிகாரத்தில் இருந்து விரட்டியதை மறந்தவர்களாக மக்களின் ஆதரவுடன் ' மீண்டெழுவது ' பற்றி கனவு கண்டு கொண்டிருக்கும் ராஜபக்சாக்களைப் பொறுத்தவரை கடந்த கால தவறுகளுக்கு பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாட்டில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கு விக்கிரமசிங்கவை விடவும் பொருத்தமான அரசியல்வாதி கிடையாது என்றாலும், அவருடன் அவர்கள் பெருமளவுக்கு முரண்படக்கூடிய திசையிலேயே அரசியல் நிகழ்வுப்போக்குகள் அமைகின்றன.

பொதுஜன பெரமுனவின் சில முக்கிய உறுப்பினர்கள் குறிப்பாக அமைச்சர்கள் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கான தங்கள் விருப்பத்தை ஏற்கெனவே வெளியிட்டிருந்த நிலையில், தற்போது கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமால் லான்சு முதன்மையான கூட்டணி (Alliance Number One) என்று தனது அணிக்கு பெயரிட்டு அலுவலகமொன்றையும் திறந்து பொதுஜன பெரமுனவில் இருந்து உறுப்பினர்களை ஜனாதிபதி பக்கம் இழுக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்.

தனது முயற்சிக்கு பொதுஜன பெரமுனவின் 40 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாகவும் மேலும் பலர் இணையவிருக்கிறார்கள் என்று உரிமை கோரும் நிமால் லான்ச ஐக்கிய தேசிய கட்சியுடனும் வேறு பல கட்சிகளுடனும் சேர்ந்து பரந்த கூட்டணியொன்றை அமைப்பதே நோக்கம் என்பதை வெளிப்படையாகவே கூறுகிறார். இவரது செயற்பாடுகளுக்கு உடந்தையாக இருக்க வேண்டாம் என்று பொதுஜன பெரமுனவின் உண்மையான தலைவரான பசில் ராஜபக்ச ஏற்கெனவே ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டதாகவும் செய்திகள் வெளியாகின.

அவர் இவ்வாறு தன்னிடம் வேண்டுகோள் விடுத்த போது ராஜபக்சாக்கள் தங்களது ஆட்சிக் காலத்தில் தனது கட்சியை எவ்வாறாக எல்லாம் சீர்குலைத்தார்கள் என்பதை விக்கிரமசிங்க நினைத்துப் பார்க்காமலா இருந்திருப்பார்?

தற்போது முன்னெடுக்கப்படும் முயற்சிகளை அடுத்து பரந்தளவிலான கூட்டணிகள் அமைக்கப்படும் பட்சத்தில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியும் ஐக்கிய தேசிய கட்சியுடனான நிமால் லான்ச அணியின் கூட்டணியுமே எதிர்காலத் தேர்தல்களில் பலம்பொருந்திய அரசியல் அணிகளாக விளங்கக்கூடும் என்று சில அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கிறார்கள்.

ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பேரணிகளுக்கும் வீதிப் போராட்டங்களுக்கும் மக்களை அணிதிரட்டுவதில் வியக்கத்தக்க ஆற்றல் கொண்ட சக்தியாக இருக்கின்ற போதிலும் மக்கள் கிளர்ச்சிக்கு பின்னரான சூழ்நிலைகளில் அதற்கு அதிகரித்திருப்பதாக நம்பப்படும் மக்கள் செல்வாக்கை பரீட்சித்துப் பார்ப்பதற்கு தேர்தல் வாய்ப்பொன்று கிடைக்கவில்லை. ஜே.வி.பி.யின் கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும் மக்கள் பெருமளவில் கலந்து கொள்கின்ற போதிலும் தேர்தல்களில் அந்த ஆதரவு வாக்குகளாக மாறுவதில்லை என்ற வழமையான வாய்ப்பாட்டை தற்போது அந்த கட்சிக்கு அதிகரித்திருக்கும் மக்கள் ஆதரவுக்கு பிரயோகிப்பது பொருத்தமானது அல்ல என்று பரவலாக நம்பப்படுகிறது. அதை ஒரு தேர்தலில் தான் பரீட்சித்துப் பார்க்கமுடியும்.

உள்ளூராட்சி தேர்தல்கள் அதற்கு சிறந்த களமாக அமையும் என்று ஜே.வி.பி. தலைவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அது சாத்தியமாகவில்லை. தேர்தல்களை நடத்தாமல் காலத்தைக் கடத்திக் கொண்டு போனால் நாளடைவில் ஐக்கிய மக்கள் சக்தியின் மக்கள் செல்வாக்கு அருகி விடும் என்று ஜனாதிபதியும் அரசாங்கமும் நினைக்கவும் கூடும். ஆனால் அந்த கட்சியின் பேரணிகளில் மக்கள் தொடர்ந்தும் பெருமளவில் கலந்து கொள்கிறார்கள்.

பொதுஜன பெரமுன கூட்டணியில் இருந்து வெளியேறி தனியான அணியாக செயற்படும் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, உதய கம்மன்பிலவின் பிவிதுரு ஹெல உறுமய, கெவிந்து குமாரதுங்கவின் யுத்துகம தேசிய இயக்கம், அத்துரலியே ரதன தேரரின் கட்சி போன்ற கடும்போக்கு இனவாத அரசியல் கட்சிகளும் ' உத்தர லங்கா சபாகய' (Supreme Lanka Coalition) என்ற கூட்டணியை அமைத்திருக்கின்றன. அதில் ஸ்ரீலங்கா கம்யுனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜ கட்சி, வாசுதேவ நாணயக்காரவின் ஜனநாயக இடதுசாரி முன்னணி போன்ற இடதுசாரிக்கட்சிகளும் அங்கம் வகிப்பது இலங்கை அரசியலின் மிகப்பெரிய நகைச்சுவை.

இந்த இடதுசாரிக் கட்சிகளுக்கு அவை அங்கம் வகிக்கும் கூட்டணியின் திசைமார்க்கத்தை தீர்மானிப்பதில் உருப்படியான எந்தப் பங்கும் இல்லை என்பது வெளிப்படையானது.

வீரவன்ச, கம்மன்பில போன்ற இனவாத அரசியல்வாதிகளுக்கு ராஜபக்சாக்களிடம் இருந்து பிரிந்த பிறகு குறிப்பாக கடந்த வருடத்தைய பொருளாதார நெருக்கடிக்கு பின்னரான சூழ்நிலையில், அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க சிங்கள மக்கள் மத்தியில் முன்வைப்பதற்கு உருப்படியான கொள்கைகளோ செயற்திட்டங்களோ இருக்கவில்லை.

ஆனால், திடீரென்று அரசியலமைப்புக்கான 13 திருத்தம் தொடர்பில் மூண்டிருக்கும் சர்ச்சையும் வடக்கு கிழக்கில் பௌத்த விகாரைகளை அமைப்பது தொடர்பிலான தகராறுகளும் அவர்களுக்கு கை கொடுத்திருக்கிறது. அவற்றை தங்களால் இயன்றவரை பயன்படுத்தி அவர்கள் தென்னிலங்கையில் மீண்டும் பேரினவாத அரசியல் அணிதிரட்டலை தீவிரமாக முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தெரிந்த அரசியலும் அது தான்.

அவ்வாறான அணிதிரட்டல் அடுத்து வரக்கூடிய எந்தவொரு தேசிய தேர்தலிலும் பிரசாரக் களத்தில் பேரினவாத உணர்வுகளை மேலோங்கச்செய்யும் என்பதில் சந்தேகமில்லை. இது அடிப்படையில் ராஜபக்சாக்களின் அரசியலுக்கு (8ம் பக்கம் பார்க்க)

# சந்திரயான் 3:- நிலவில் மோடி சூட்டிய "சிவசக்தி" பெயர் நிலைக்குமா? சர்வதேச சமூகம் ஏற்குமா?

சந்திரயான்-3 விண்கலம் ஆகஸ்ட் 23ஆம் தேதியன்று நிலாவில் வெற்றிகரமாக தரையிறங்கியது. அதற்கு வாழ்த்து தெரிவிக்கும் விதமாக ஆகஸ்ட்



26ஆம் தேதி இஸ்ரோ விஞ்ஞானிகளை பிரதமர் நரேந்திர மோதி நேரில் சந்தித்தார். அப்போது நிலாவில் சந்திரயான்-3 தரையிறங்கிய இடத்திற்கு பிரதமர் நரேந்திர மோதி 'சிவசக்தி' எனப் பெயரிட்டார். தற்போது இது குறித்து சர்ச்சை எழுந்துள்ளது.

பிரதமர் ஒரு குறிப்பிட்ட மத நம்பிக்கை சார்ந்த பெயரை வைத்தது கேள்விக்கு உள்ளாக்கப்படுவது ஒரு புறம் இருந்தாலும், இது போன்ற பெயரை சர்வதேச வானியல் கழகத்தின் விதிகள்படி வைக்கவே முடியாது என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இது குறித்துப் பேசிய பூனேவை சேர்ந்த விஞ்ஞானி ஒருவர், "சந்திரயான்-3இன் வெற்றி ஒட்டுமொத்த மனித குலத்தின் வெற்றி என அறிவித்து விட்டு, விக்ரம் லேண்டர் தரையிறங்கிய பகுதிக்கு தன்னிச்சையாக 'சிவசக்தி' என பிரதமர் பெயரிட்டிருப்பது துரதிர்ஷ்டவசமானது என்று குறிப்பிடுகிறார்.

தனது பெயரை வெளிப்படுத்திக் கொள்ளாத அந்த விஞ்ஞானி, "இது குறித்துக் கேள்வியெழுப்பும் அறிவியலாளர்கள் இந்தியர்களுக்கும் இந்து மதத்திற்கும் விரோதமானவர்கள் எனப் போலியாகக் கட்டமைக்கப்படுவதாகவும் வருத்தம் தெரிவித்தார்.

அதேவேளையில் கோள்களில் உள்ள பகுதிகளுக்கோ சிறுகோள்களுக்கோ இந்திய கலாசாரத்தின் அங்கமாக இருக்கும் இந்து கடவுள்களின் பெயர்களை வைப்பது இதுவே முதல்முறை என்றும் அல்ல. முன்பே லக்ஷ்மி, ஹனுமான், கணேஷ் போன்ற பெயர்கள் சிறுகோள்களுக்கும் கோள்களின் பகுதிகளுக்கும் சூட்டப்பட்டுள்ளன.

ஆனால் இப்போது பிரதமர் சூட்டியுள்ள 'சிவசக்தி' என்னும் பெயர் சர்வதேச வானியல் கழகத்தின் விதிகளுக்கு உட்பட்டது இல்லை என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதேபோல சந்திரயான்-1 தூக்கி வீசப்பட்டு அது போய் விழுந்த நிலாவின் பகுதியை ஜவஹர் புள்ளி எனப் பெயரிட வேண்டும் என்று அப்துல் கலாம் பரிந்துரைத்தார். அதை ஏற்றுக்கொண்ட போது இப்போது சிவசக்தி என்ற பெயருக்கு மட்டும் ஏன் கேள்வியெழுப்பப்படுகிறது என்று இந்தப் பெயரை ஆதரிக்கும் தரப்பால் கேட்கப்படுகிறது.

ஆனால், 'ஜவஹர் புள்ளி என்பதும் நிலாவில் உள்ள பகுதிகளுக்குப் பெயர் வைப்பதற்கான சர்வதேச விதிமுறைகளின்படி இல்லை என்பதால் அதுவும் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.' என்று புனேவை சேர்ந்த பெயர் வெளியிட விரும்பாத விஞ்ஞானி தெரிவித்தார்.

### வான் பொருட்களுக்குப் பெயர் வைக்க இருக்கும் விதிகள் என்ன?

பிரதமர் சூட்டிய பெயர் அங்கீகரிக்கப்படுமா இல்லையா என்பதைப் பார்ப்பதற்கு முன்பாக, கோள்களுக்கும் அவற்றில் உள்ள பகுதிகளுக்கும் பெயர் வைக்க சர்வதேச வானியல் கழகம் விதிமுறைகளை வகுத்துள்ளது.

முன்பு ஐரோப்பிய வானியலாளர்கள் வைத்ததே பெயர் என்ற நிலைமை இருந்தது. ஆனால், 1919ஆம் ஆண்டு சர்வதேச வானியல் கழகம் உருவாக்கப்பட்ட பிறகு அந்த நிலை மாறியது. உலகின் பல்வேறு பண்பாடுகளையும் மதிக்கும் வகையில் வான் பொருள்களுக்குப் பெயர் சூட்ட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த சர்வதேச வானியல் கழகத்தின் தொடக்க கால உறுப்பினர்களில் இந்தியாவும் ஒன்று. இந்தியா 1964ஆம் ஆண்டு அதில் இணைந்தது. இந்தக் கழகம் வரையறுத்துள்ள விதிகளின் படி, வியாழன் கோளுக்கு அருகே சூரியனை சுற்றி வரும் குறுங்கோள்களுக்கு புராண இதிகாசங்களில் உள்ள பெயர்களை, கண்டுபிடிப்பாளர் பெயர்களை, புகழ் பெற்ற சிந்தனையாளர்களின் பெயர்களை வைக்கலாம்.

ஆனால், நூறு ஆண்டுகளுக்கும் குறைவான வரலாறு கொண்ட தனி நபர்கள் அல்லது நிகழ்வுகளின் பெயர்கள், வணிகப் பெயர்கள், செல்லப் பிராணிகளின் பெயர்களை வைக்க அனுமதிக்கப்படாது. அத்தகைய விதிமுறைகளின் அடிப்படையில் இந்திய புராணப் பெயர்கள் குறுங்கோள்களுக்கு சூட்டப்பட்டுள்ளன. அவை,

1951ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட குறுங்கோளின் பெயர் ஹனுமன் 1957ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட குறுங்கோளின் பெயர் கருடா 1978ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட குறுங்கோளின் பெயர் கணேசா இவற்றைப் போலவே, 1993ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்ட ஒரு குறுங்கோளுக்கு பாண்டிச்சேரி என்று கூடப் பெயர் வைக்கப்பட்டுள்ளது. அதே போல ராமானுஜம் என்ற பெயரும் வைக்கப்பட்டுள்ளது.

இப்படியாக எந்தெந்த வான் பொருட்களுக்கு என்ன மாதிரியான பெயர்களை வைக்கலாம் என்று வரையறுத்து சர்வதேச வானியல் கழகம் விதிமுறைகளை வகுத்துள்ளது.

### பெண் பெயர்களைக் கொண்ட வெள்ளிக் கோள்

அந்த சர்வதேச வானியல் கழக விதிகளின்படி, வெள்ளி கோளில் தரைப்பரப்பில் பெண் தெய்வங்கள் மற்றும் பெண் ஆய்வாளர்களின் பெயர்களை மட்டுமே சூட்ட வேண்டும். அதன் அடிப்படையில், வெள்ளி கோளில் உள்ள நேபாள பீடபூமியை போலத் தோற்றமளிக்கும் ஒரு பீடபூமிக்கு இந்து மத கடவுளாக அறியப்படும் லக்ஷ்மியின் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் புனேவில் உள்ள ஓர் ஆய்வு நிறுவனம் கேலக்ஸி பெரும் கொத்து ஒன்றைக் கண்டு பிடித்தது. சர்வதேச விதிமுறைகளுக்கு உட்பட்டு அதற்கு



சரஸ்வதி என்று பெயரிட்டுள்ளார்கள். ஏனென்றால், பெரும் நதிகளின் பெயர்களை கேலக்சி பெருங்கொத்துகளுக்கு வைக்க வேண்டும் என்பது விதி. ஆகவே, இந்து கடவுள்களின் பெயர்களோ இந்தியாவுடன் தொடர்புடைய பெயர்களோ வான்பொருட்களுக்கு வைக்கப்படுவது முற்றிலுமாக எதிர்க்கப்படும் ஒரு விஷயமல்ல என்பது புரிகிறது. ஆனால் விதிமுறைகளுக்கு உட்பட்டு வைக்கப்படும் பெயர்களும், தன்னிச்சையாக, சார்புடன் வைக்கப்படும் பெயர் ஒன்று ஆகாது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

### நிலாவில் பெயர் வைப்பதற்கான விதிமுறைகள் என்ன?

வெள்ளி கோள், கேலக்ஸி பெரும் கொத்துகள் போலவே நிலாவில் பெயர் வைக்க வேண்டுமென்றால் அதற்கும் சில விதிமுறைகளும் வரையறைகளும் உள்ளன. அவை, மறைந்து மூன்று ஆண்டுகளுக்கு மேலான பிரபல விஞ்ஞானிகள், வானியல், கோளியல், விண்வெளி அறிவியல் ஆகியவற்றுடன் தொடர்புடைய, அந்தத் துறையில் கணிசமான பங்களிப்பு செய்த விஞ்ஞானிகள், பொறியாளர்கள், கண்டுபிடிப்பாளர்களின் பெயர்களை வைக்கலாம்.

இறந்த விண்வெளி வீரர்களின் பெயர்களை வைக்கலாம். வானிலை அல்லது மனநிலை சார்ந்த பெயர்களை வைக்கலாம் சான்றாக, அமெரிக்காவின் அப்பல்லோ 11 தரையிறங்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதி 'அமைதிக் கடல்' (Sea of Tranquility) என்றும் தரையிறங்கிய புள்ளியை 'அமைதித் தளம்' என்றும் அழைக்கப்படுகிறது.

அதேபோல, விண்கற்கள் மோதி ஏற்படும் கிரேட்டர் எனப்படும் பெரும் பள்ளங்களுக்கு ஆரியபட்டா, ஹோமி பாபா, சி.வி.ராமன் ஆகியோரின் பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன. கல்பனா சாவ்லாவின் நினைவாகவும் ஒரு பெரும்பள்ளத்திற்கு சாவ்லா எனப் பெயரிப்பட்டுள்ளது. எனக் கூறுகிறார் புனேவை சேர்ந்த விஞ்ஞானி. சந்திரயான்-3 வெற்றியைப் பாராட்டும் வகையிலான பேரணியில் பங்கெடுத்திருந்த அறிவியலாளர் வெங்கடேசன், 'சிவசக்தி என்ற பெயர் நாட்டு மக்கள் அனைவரின் உணர்வுகளையும் பிரதிபலிக்க வில்லை,' என்று கூறினார்.

நிலாவில் உள்ள பகுதிகளுக்குப் பெயர் வைக்க நடைமுறை உள்ளதா இல்லையா என்பது இரண்டாம் பட்சம். ஒருவேளை இருக்கிறது என்றே வைத்துக் கொண்டாலும் இப்போது வைத்துள்ள பெயர் அனைத்து நாட்டு மக்களின் உணர்வுகளையும் பிரதிபலிக்கும் வகையில் இல்லை.' என்கிறார் ப்ரேக்த்ரூ சயின்ஸ் சொசைட்டியை சேர்ந்த அறிவியலாளர் வெங்கடேசன்.

இதுபோன்ற வான் பொருட்களுக்குப் பெயரிடும் போது இந்திய பண்பாட்டின் பழங்கால வானியல் அறிஞர்களே மற்ற அனைத்து கலாசாரங்களுக்கும் பொதுவாக இருந்த பெயர்களையே சூட்டினர் என்று கூறுகிறார் வெங்கடேசன்.

மேலும், கோள்களின் வான் பொருட்களின் தன்மையை அடிப்படையாக வைத்தே ஆரியபட்டா போன்ற வானியல் அறிஞர்கள் பெயர் சூட்டினார்கள் என்று தெரிவிக்கிறார் வெங்கடேசன். சந்திரயான்-3 வெற்றியைப் பாராட்டும் வகையிலான பேரணியில் பங்கேற்ற போது பிபிசி தமிழிடம் பேசிய அவர், 'சிவசக்தி என்ற பெயர் நாட்டு மக்கள் அனைவரின் உணர்வுகளையும் பிரதிபலிக்கவில்லை,' என்று கூறினார்.

அதோடு, இப்போது வைத்துள்ள பெயர் முற்றிலும் மதம் சார்ந்ததாகவே இருக்கிறது. இது அனைவருக்கும் பொதுவானதாக இல்லை, என்றும் அவர் குறிப்பிடுகிறார். சந்திரயான்-3இன் வெற்றியை சாதி, மத பேதமின்றி நாட்டு மக்கள் அனைவரும் கொண்டாடினார்கள். ஆனால், அனைத்து மக்களுடைய உணர்வுகளையும் பிரதிபலிக்கும் வகையிலான இந்திய பெயரை' பிரதமர் வைக்கவில்லை,'' என்று கூறுகிறார் அறிவியலாளர் வெங்கடேசன்.

### பிரதமர் வைத்த சிவசக்தி என்ற பெயர் நிராகரிக்கப்படுமா?

இதன் மூலம் வான் பொருட்களுக்குப் பெயரிடுவதில் லத்தீன், கிரேக்க புராணப் பெயர்கள் மட்டுமின்றி இந்தியப் பண்பாடும் இந்தியர்களின் பெயர்களும் பயன்படுத்தப்படுகின்றன என்பது புரிகிறது. ஆனால், சிவசக்தி என்ற பெயர் நிலாவில் பெயர் வைப்பதற்கான சர்வதேச விதிகளுக்கும் வரையறைகளுக்கும் முற்றிலும் விரோதமானது என்று பெயர் தெரிவிக்க விரும்பாத மற்றொரு விஞ்ஞானி குறிப்பிடுகிறார்.

(22ம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்களின் கோரிக்கை இன உறவைப் பாதிக்குமா?

- ஏ.எஸ்.நிப்றாஸ் -

முஸ்லிம் - தமிழ் அரசியல் தலைவர்கள் உதாரணமாக, சம்பந்தனும் ரவுப் ஹக்கீமும் ஒரு மேசையில் உட்கார்ந்து சாப்பிடுகின்றார்கள் அல்லது ஒற்றுமைப் பட்டுப் பேசுகின்றார்கள் என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் கிராமப் புறங்களில் உள்ள சாதாரண தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமைப்படுவதும் இல்லை. அரசியல்வாதிகள் முரண்பட்டுக் கொள்கின்றார்கள் என்பதற்காக, அருகருகே வாழ்கின்ற மூக்கையாவும் முகம்மதுவும் சண்டையிட்டுக் கொள்ளப் போவதுமில்லை.

வடக்கும் கிழக்கும் இணைந்தால் ஒற்றுமை அதிகரிக்கும் என்றுமில்லை. மாகாணங்களை இணைப்பதோ பிரதேச செயலகங்களைப் பிரிப்பதோ அல்லது ஒரு சில தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் எவ்வாறான உறவில் இருக்கின்றார்கள் என்பதை வைத்தோ, இரு இனங்களின் ஒற்றுமையும் உறவும் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் இல்லை.

உண்மையில், அதுவேறு, இதுவேறு! இரண்டையும் போட்டு ஒன்றுடன் ஒன்று குழப்பிக் கொள்ளக் கூடாது. இதனைக் கூறுவதற்கு ஒரு காரணம் இருக்கின்றது! அதாவது, இனப் பிரச்சினை தீர்வு என்று வரும்போது முஸ்லிம்கள் பங்கு கேட்பது, அவர்களது அபிலாஷைகளை உறுதிப்படுத்தக் கோருவதானது, 'இன உறவை கடுமையாக பாதிக்கும்' என்று சிலர் கருதுவதுண்டு. அது தவறான ஒரு புரிதலாகும். இரண்டையும் போட்டு குழப்பிக் கொள்ளக் கூடாது.

உண்மையிலேயே அரசியல்வாதிகள், குழப்பவாதிகள் சதித்திட்டங்களை தீட்டாத வரைக்கும் வேறு என்ன நடந்தாலும் சமூக மட்டத்திலான தமிழ், முஸ்லிம் உறவு மிதமாகவே காணப்படும். அற்ப காரணங்களுக்காக கள்ளம் கபடமற்ற சாதாரண மக்கள் முரண்பட்டுக் கொள்வதில்லை என்பதே நாம் கண்ட யதார்த்தமாகும்.

இப்போது மாகாண சபை தேர்தல் பற்றி பேசப்படுகின்றது. அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் உச்சத்தை தொட்டுள்ளன. இந்நிலையில் 13இன் அமுலாக்கம் பற்றிய பரிந்துரைகளை முன்வைக்குமாறு அரசாங்கம் கோரியிருந்த சூழலில், முஸ்லிம் சமூகம் தனக்குள் ஆக்கபூர்வமான எந்தக் கருத்தாடலையும் மேற்கொள்ளவில்லை. இந்த நிலை வழக்கமானதும் கூட.

இப்படியான சூழலில், இனப் பிரச்சினை தீர்வு பற்றி பேசப்படுகின்ற வேளையில், முஸ்லிம்களின் அபிலாஷைகளும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும், அவர்களுக்கும் ஒரு உப தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தால், எழுதினால், சிலர் அதனை தவறாக புரிந்து கொள்ள முற்படுவது மட்டுமன்றி, தவறான வியாக்கியாளங்களை கொடுக்க முனைவதாகவும் தோன்றுவதுண்டு.

அதாவது, தமிழர்கள் ஆயுத ரீதியாக போராடி பல இழப்புக்களைச் சந்தித்து, படாதபாடுபட்டு அதன் பயனாக ஒரு தீர்வு கிடைப்பதற்கான காலம் கனிந்து வரும்போது, முஸ்லிம்கள் தீடீரென வந்து 'எமக்கும் பங்கு வேண்டும்' என்று கேட்பதை ஒரு குறிப்பிட்ட தமிழ் அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் வேறு கோணத்திலேயே பார்க்கலாம்.

'நாம் இவ்வளவு முயற்சிகளையும் செய்து ஒரு தீர்வு கைகூடி வருகின்ற போது, இவர்கள் திடுதிடுப்பென நடுவில் வந்து எமது அபிலாஷைகளையும் நிவர்த்தி செய்ய வேண்டும் என்று சொல்வதானது, இது இனப் பிரச்சினை தீர்வை குழப்பும், தாமதப்படுத்தும் ஒரு நடவடிக்கை' என தமிழ் சமூகத்தில் சிலர் கருதலாம்.



சிலர் அதனை பொதுவெளியில் சொல்கின்றனர். சிலர் தமக்கிடையே பேசிக் கொள்கின்றனர். கடந்த காலத்தில் இது போன்ற தருணங்களில் 'தமிழர்களுக்கு ஒரு தீர்வோ, ஆறுதல் பரிசோ கிடைப்பதனை முஸ்லிம்கள் விரும்பவில்லையா' என்ற கேள்விகளும் முன் வைக்கப்பட்டமை இவ்விடத்தில் நினைவுக்கு வருகின்றது. .

இந்த எதிர்வினையின் உச்சக் கட்ட கற்பனையாக ஒரு கருத்து முன்வைக்கப்படுவதையும் குறிப்பிட்டாக வேண்டும். அதாவது முஸ்லிம் சமூகமானது தீர்வுத் திட்டத்தில் இவ்வாறான பங்கு கேட்பதானது, சில விடயங்களில் இழுத்துப் பிடிப்பதானது தமிழ் முஸ்லிம் உறவுக்கு பாதகமாக அமையும் என்றும், இதனால் இன நல்லிணக்கம் பாதிக்கப்படும் என்றும் கூறப்படுவதுண்டு.

ஆனால் அது தவறான ஒரு கருதுகோளாகும். ஏனெனில் தமிழ் - முஸ்லிம் உறவு என்பது மிகத் தொன்மையானது. இங்கு இன உறவு என்பது வேறு, தீர்வுத் திட்ட நகர்வுகள் என்பது வெவ்வேறானவை என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

இனப் பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கப்படக் கூடிய 13ஆவது திருத்தம், அதிகாரப் பரவலாக்கல், சமஷ்டி உள்ளிட்ட எந்தவொரு ஏற்பாட்டிலும் முஸ்லிம்கள் தங்களுடைய அபிலாஷைகளை உறுதிப்படுத்த வேண்டும் என்று கோரும் போது, அதனை இன உறவோடு போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

இரு சமூகங்களுக்கும் இடையிலான உறவு என்பது மிகவும் தொன்மையானது. இந்த உறவு பற்றிய இலட்சக் கணக்கான சம்பவங்கள் நமது மூத்த தலைமுறையினரின் மனக் குறிப்புக்களில் உள்ளன. மதம் என்ற அடையாளத்தை தவிர மற்றெல்லா வழிகளிலும் பல ஒற்றுமைகளைக் கொண்ட ஒரே மொழியைப் பேசும் இரு இனக் குழுமங்களின் நட்பு என்பது ஒருபோதும் இருட்டடிப்புச் செய்ய முடியாதது.

தமிழர்களின் போராட்டத்திற்கு முஸ்லிம்கள் எந்த எதிர்பார்ப்பும் இன்றி எவ்வாறு உதவிகளைச் செய்தார்கள் என்பதை மறந்து விடக் கூடாது.

அதேபோன்று, புலிகள் உள்ளிட்ட தமிழ் ஆயுதக் குழுக்கள் முன்கையெடுத்ததாலேயே இந்த உறவு கூரிய நகங்களால் கீறப்பட்டது என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். ஆயதக் குழுக்கள் செய்த படுகொலைகளுக்காக ஒட்டு மொத்த தமிழ் மக்களையும் குற்றவாளிக் கூண்டில் ஏற்ற முடியாது. மறு புறத்தில், ஆயுதங்கள் முன்கையெடுக்கத் தொடங்கிய பிறகு முஸ்லிம் ஊர்களில் இருந்த சண்டியர்களும், உணர்ச்சி மடையர்களும் குக்கிராம தமிழர்களை நோக்கி அங்குமிங்கும் செய்ததாகக் கூறப்படுகின்ற அட்டூழியங்களுக்காக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையும் நோக்கி விரல் நீட்டவும் விட முடியாது. இவர்கள் சாதாரண மக்கள் என்ற வகுதிக்குள் உள்ளடங்க மாட்டார்கள்.

சாதாரண தமிழர்களுக்கும் சாதாரண முஸ்லிம்களுக்கும் இடையிலான உறவில் சில ஏற்ற இறக்கங்கள் இருந்தாலும் இப்போது வரை அது மிதமான ஒரு அளவில் இருந்து வருகின்றது. ஏன், சிங்கள மக்களுடன் கூட இந்த உறவை சிறுபான்மைச் சமூகங்கள் பேணிக் கொண்டுதான் இருக்கின்றன என்பதை மறந்து விடக் கூடாது.

இரு இனங்களுக்கும் இடையிலான அடிமட்ட, பிரதேச வாரியான, சமூக மட்டத்திலான உறவு உண்மையிலேயே அரசியல்வாதிகளினாலோ முக்கியஸ்தர்களினாலோ தீர்மானிக்கப்படுவதில்லை. எங்கோ நடக்கின்ற ஒரு சம்பவத்திற்காக இஸ்மாயிலும் இளையராஜாவும் சண்டை பிடித்துக் கொள்வது கிடையாது. அதற்கான தேவையும் இல்லை.

ஆனால், ஆயுதம் தரித்தோரும் ஊர்ச் சண்டியர்களும் கடந்த காலத்தில் தமது சொந்த இலாபத்திற்காக அல்லது முன் -பின் சிந்திக்காது இன முறுகலை ஏற்படுத்தியது போல, இப்போது அரசியல்வாதிகளும், அமைப்புக்களும் வெளிச் சக்திகளும் குளிர்காய முற்படுகின்றன.

அரசியல் ரீதியான முரண்பாட்டை அல்லது இரு சிறு குழுக்களுக்கு இடையிலான சிறிய விவகாரத்தை பூதாகரமாக்கி விடுவதற்கு அண்மைக் காலமாக சமூக வலைத்தள முட்டாள் பதிவாளர்களும் முயற்சிப்பதைக் காண முடிகின்றது. இது விடயத்தில் சாதாரண மக்கள் விழிப்பாக இருந்தால் இந்த உறவைப் பேண முடியும்.

ஆகவே, இனப் பிரச்சினை தீர்வு என்ற அடிப்படையில் முன்வைக்கப்படுகின்ற முறையான ஏற்பாடுகளில் முஸ்லிம்கள் தமது பங்கைக் கேட்பதால், இன ஒற்றுமை பாதிக்கப்படும் என்றோ முஸ்லிம்கள் குழப்புகின்றார்கள், தடை போடுகின்றார்கள் என்றோ புது வியாக்கியானம் கூற யாரும் முற்படக் கூடாது.

இனப் பிரச்சினையுடன் முஸ்லிம்களுக்கும் தொடர்பிருந்ததை யாரும் மறுக்க முடியாது. இதில் மூடி மறைப்பதற்கு எதுவும் இல்லை. முஸ்லிம்கள் அரசியல் ரீதியான ஒருமித்த, பலமான நிலைப்பாட்டை எடுக்கவில்லை என்பது ஒரு புறமிருக்க மறுபுறத்தில், இனப் பிரச்சினை விவகாரத்தில் முஸ்லிம்களை ஓரம்கட்டும் நகர்வுகளும் இடம்பெற்றன.

சுமாதானப் பேச்சுவார்த்தைகள் உள்ளடங்கலாக பல தேசிய முக்கியத்துவமிக்க கலந்துரையாடல்களில் முஸ்லிம்கள் தனியொரு தரப்பாக பார்க்கப்படவில்லை. ஒரு முக்கியமான ஆவணத்தில் முஸ்லிம்களை ஒரு தனி தேசிய இனமாக குறிப்பிடாமல், 'குழு' என்ற அடிப்படையில் வரையறை செய்திருந்தமை இதற்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

முஸ்லிம் சமூகம் தொடர்ச்சியாக இனத் தீர்வு விடயத்தில் தமது நிலைப்பாட்டை காத்திரமான அடிப்படையில் முன்வைத்து வரவில்லை. இப்போது 13ஆவது திருத்தம் பற்றி பேசப்படுகின்ற போது கூட ஒரு கூட்டு நிலைப்பாட்டை முஸ்லிம் அரசியல்வாதிகள் எடுக்கவில்லை.

இப்போது கூட, தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவரான ஏ.எல்.எம். அதாவுல்லா மட்டுமே 13 தொடர்பான முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளதாக தெரிகின்றது. முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் உள்ளிட்ட ஏனைய முஸ்லிம் கட்சிகள் எந்த சிபாரிசுகளையும் சமர்ப்பித்ததாக இக்கட்டுரை எழுதப்படும் வரை செய்தி வெளியாகவில்லை.

இப்படி நிறையவே தவறுகளை முஸ்லிம் தரப்பு செய்துள்ள காரணத்தினாலேயே, திடுதிடுப்பென வந்து தமக்கும் பங்கு கேட்கின்றார்கள் என்ற தோற்றப்பாடு ஏற்படுகின்றது என்பதையும் நாமறிவோம். ஆயினும் கூட இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் அதில் முஸ்லிம் சமூகத்தின் நலன்களும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதை புத்தியுள்ள யாரும் மறு தலிக்க இயலாது. எனவே, இதிலுள்ள நியாயங்களை தமிழ் சமூகம் நேரிய மனதுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.


(17ம் பக்கத் தொடர்ச்சி) அன்று சந்தர்பம் நமது காலடியில் கவனிப்பாரற்று கிடந்தது. இன்றோ, பயன்படுத்தத் தவறியதை, மீண்டும் பயன்படுத்துவதற்கு வாய்பொன்றை தருமாறு இரந்து நிற்கின்றோம்? நாங்கள், எங்களை அரசியல் தெரிந்த சமூகமென்று கூறிக் கொள்ள முடியுமா? எங்கள் இது வரையான பெருமைகளுக்கு ஏதாவது அர்த்தமுண்டா?

1990இல் இறுதி துருப்புக் காவிக் கப்பலில் வெளியேறிதன் மூலம், இந்தியா எதனையும் இழக்கவில்லை. 36 வருடங்களுக்கு பின்னர், அன்றைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் திருகோணமலை மீதான அதன் செல்வாக்கை மீளவும் உறுதிப்படுத்துகின்றது. தென்னிந்தியாவிற்கும் திருகோணமலைக்கும் இடையில் எண்ணை குழாய்களை பொருத்துவது பற்றி ஆலோசிக்கப்படுகின்றது. இந்தியா மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை துமைுகத்தின் மீதான அதன் செல்வாக்கை இழக்கவில்லை. இழக்கவும் மாட்டாது.


இழந்ததெல்லாம் ஈழத் தமிழர்கள் மட்டும் தான். இந்திய இலங்கை ஒப்பந்த காலத்தில், திருகோணமலையின் பெரும்பாண்மை சமூகமாக தமிழர்கள் இருந்தனர். திருகோணமலை தலைமையாகக் கொண்டு வடக்கு கிழக்கு மாகாண சபையின் தலைமைக் காரியாலயம் இயங்கியது. அனைத்தும் தமிழரின் கட்டுப்பாட்டில் இருந்தது.

இப்போது எதுமில்லை. இப்போது யாருக்கு வெற்றி யாருக்கு தோல்வி?


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எதையும் யோசித்து செய்வது நன்மை தரும். கோபமாக பேசுவதை தவிர்த்து நிதானமாக பேசி செயல்படுவது காரிய வெற்றிக்கு உதவும். வீடு மனை வாகன பிராப்தி ஏற்படும். குடும்பத்தில் ஏதாவது ஒரு வகையில் திடீர் சச்சரவுகள் தோன்றலாம். அதற்கு இடம் கொடுக்காமல் நடந்து கொள்வது நன்மை தரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கருத்து வேற்றுமைகள் நீங்கும்.




ரிஷபராசி அன்பர்களே! சூரியன் புதனுடன் சேர்க்கை பெறுவதால் எதிலும் வெற்றியும் சந்தோஷத்தையும் தரும். எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்னைகளில் தீர்வு கிடைக்கும். வீடு மனை சார்ந்த விஷயங்கள் நன்மை தரும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பீர்கள்.





மிதுனராசி அன்பர்களே! சில முக்கிய முடிவுகள் எடுப்பதன் மூலம் நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்னைகள் தீரும். இனிமையான பேச்சின் மூலம் எதிலும் வெற்றி காண்பீர்கள். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். வீடு மனை ஆகியவற்றை வாங்குவதற்கு இருந்து வந்த தடைகள் நீங்கும். குடும்பத்தில் கணவன்-மனைவிக்கிடையே எதையும் மனம் விட்டு பேசி அதன் பிறகு செய்வது நன்மை தரும்.





கடகராசி அன்பர்களே! பொருள் சேர்க்கை உண்டாகும். செவ்வாய் சஞ்சாரம் இட மாற்றத்தை ஏற்படுத்தும். எடுத்த காரியம் தாமதப்படுகிறதே என்ற கவலை உண்டாகும். இரவில் நீண்ட நேரம் கண் விழிக்க வேண்டி வரலாம். குடும்பத்தில் இருந்து வந்த மன வருத்தம் நீங்கும். வாழ்க்கை துணையின் உடல் நிலையில் நீடித்து வந்த ஆரோக்கிய குறைபாடு பூர்த்தியாகும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள்.




சிம்மராசி அன்பர்களே! முயற்சிகள் சாதகமான பலன் தரும். சுதந்திர எண்ணம் உண்டாகும். சின்ன சின்ன விஷயங்களில் கூட மனநிறைவு ஏற்படும். வீடு மனை சார்ந்த விஷயங்களில் இருந்த பிரச்னைகள் அகலும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். வார்த்தைகளில் நிதானத்தை கடைபிடித்தால் கருத்து வேற்றுமை ஏற்படாமல் தடுக்கலாம்.




கன்னிராசி அன்பர்களே! திட்டமிட்டு செய்யும் காரியங்கள் வெற்றி பெறும். உணர்ச்சி வசப்படாமல் நிதானமாக எதையும் செய்வது நல்லது. எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.அனைத்து தடைகளும் அகலும். உடல்நிலையில் தகுந்த கவனம் அவசியம். குடும்பத்தில் மன நிறைவு ஏற்படும் வகையில் எல்லாம் நடக்கும். வாழ்க்கை துணையால் நன்மை உண்டாகும். விருந்தினர் வருகை இருக்கும்.





துலாம்ராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். ராசியை செவ்வாய் பார்ப்பதால் மற்றவர்களிடம் உங்கள் கருத்துக்களை கூறும் போது அவர்கள் தவறாக அதை புரிந்து கொள்ளலாம். உடல்நிலையில் இருந்து வந்த தேக்கநிலை மாறும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவு லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க நேரும். சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பர். கணவன், மனைவியிடையே மனஸ்தாபங்கள் அகலும்.





விருச்சிகராசி அன்பர்களே! எந்த ஒரு வேலையை செய்து முடிப்பதிலும் இருந்த தடை தாமதம் நீங்கும். வீண் விவகாரங்களில் தலையிடுவதையும் மற்றவர்களுக்காக வாதாடுவதையும் தவிர்ப்பது நல்லது. மன திருப்தி உண்டாகும். வீடு மனை சார்ந்த விஷயங்கள் வேகம் பிடிக்கும். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. வாழ்க்கை துணையின் உடல் நலத்தில் கவனம் தேவை. பிள்ளைகளுக்காக அலைய வேண்டி இருக்கும்.








தனுசுராசி அன்பர்களே! தன்னம்பிக்கை அதிகரிக்கும். தகராறு வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். நன்மை தீமைகளை பற்றி கவலைப்படாமல் எதையும் துணிச்சலாக செய்து முடிப்பீர்கள். வீடு மனை சார்ந்த விஷயங்கள் கைகொடுக்கும். குடும்பத்தில் இருந்த மன வருத்தங்கள் மாறி சுமூகமான நிலை உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும்.




மகரராசி அன்பர்களே! காரியங்கள் சாதகமாக நடைபெறும். எதையும் சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். எதிலும் இருந்த இழுபறியான நிலை மாறும். குடும்பத்தில் எதைப் பேசுவதாக இருந்தாலும் பேச்சில் நிதானம் தேவை. வாழ்க்கை துணையின் உடல் நலத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களால் திடீர் டென்ஷன் உண்டாகலாம். . உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வேலையில் டென்ஷன் வீண் அலைச்சலும் இருக்கும்.




கும்பராசி அன்பர்களே! குழப்பங்கள் நீங்கி மனதில் தெளிவு உண்டாகும். முயற்சிகளில் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். வீடு மனை சார்ந்த விஷயங்களில் நல்ல மாற்றம் ஏற்படும். உடல்நிலையில் மிக அதிக கவனம் அவசியம். குடும்பத்தினருடன் இருந்து வந்த மனக்கசப்புகள் அகலும். கணவன், மனைவிக்கிடையே பந்தபாசம் அதிகரிக்கும்.




மீனராசி அன்பர்களே! போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். மன நிறைவு உண்டாகும். மற்றவர்களால் அமைதியின்மை உண்டாகலாம். அடுத்தவர் பேச்சை கேட்பதை குறைப்பது நல்லது. எந்த செயலையும் திட்டமிட்டு செய்வது நன்மை தரும்.குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. கணவன்.மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து பேசுவது நல்லது. எதிர்பாராத செலவுகள் உண்டாகலாம்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# பறிக்கப்படும் மேய்ச்சல் தரைகள்

(15ம் பக்கத் தொடர்ச்சி)ஆனால் இங்கே பிரச்சனை என்னவென்றால் ஒரு செந்தில் தொண்டமான மட்டும் வைத்து இந்த விவகாரத்தை மதிப்பிட முடியாது.

கடந்த மாதம் நடந்த மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் செந்தில் தொண்டமான மேய்ச்சல் தரை விவகாரமும் உட்பட மூன்று விடையங்களில் சட்டத்தை அமுல்படுத்துமாறு ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அதற்கமைய மாவட்ட அரச அதிபர் மூன்று விடையங்களில் சட்டத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுக்குமாறு போலீசாருக்கு உத்தரவிட்டார். அதன்படி நாவலடி என்ற பகுதியில் சட்டவிரோதமாக நிலத்தைப் பிடித்து வைத்திருந்த முஸ்லிம்களை போலீசார் அகற்றியிருக்கிறார்கள்.

அது தமிழர்களுக்கு முஸ்லிம்களுக்கும் இடையிலான முறுகலை அதிகப்படுத்தியுள்ளது. அதே சமயம் அரச அதிபர் குறிப்பிட்டிருக்கும் மூன்று விடயங்களில் ஒன்றாகக் காணப்படும் மேய்ச்சல் தரை விடயத்தில் இட்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, இக்காலப் பகுதியில் தான் பிக்குவின் தலைமையிலான சிங்கள விவசாயிகள் பல்சமய ஒன்றியப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவை சுற்றி வளைத்திருக்கிறார்கள். அதாவது ஆளுநர் செந்தில் தொண்டமான் தமிழ் மக்களுக்கு ஆதரவாக முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளில் முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு நடவடிக்கைதான் ஒப்பேற்றப்பட்டிருக்கிறது. சிங்கள நிலப் பறிப்பாளர்களுக்கு எதிரான நடவடிக்கையில் அவர் இன்றுவரை வெற்றி பெறவில்லை.

செந்தில் தொண்டமான நியமித்த அதே அரசாங்கத்துக்குள் தான் வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராகப் பேசும் நசீர் முகமட் காணப்படுகிறார். அதே அரசாங்கத்துக்குள் தான் முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகளைத் தூண்டும் பிள்ளையானும் வியாளேந்திரனும் காணப்படுகிறார்கள். இதில் ரணில் யாருக்கு உண்மையாக இருக்கிறார்?

சிங்கள பௌத்த நிலப்பறிப்பாளர்கள் மேய்ச்சல் தரை விடயத்தில் செந்தில் தொண்டமான எவ்வளவு காலத்துக்கு சகித்துக் கொள்வார்கள் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். ஏனெனில் மேய்ச்சல் தரை விவகாரம் எனப்படுவது இக்கட்டுரையில் முன்பு கூறப்பட்டது போல தமிழ் மக்களின் மரபு வழித் தாயகத்தைச் சிதைக்கும் பரந்தகன்ற நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதிதான்.அதை ஒரு தமிழ் ஆளுநர் எந்தளவுக்கு மாற்றியமைக்கலாம்?

# சத்திரயான் 3:- நிலவில் மோடி சூட்டிய “சிவசக்தி”

(20ம் பக்கத் தொடர்ச்சி) வேறு கோள்களில் அந்தப் பெயர்களை வைக்க அதன் விதிகள் அனுமதிக்கின்றன. நாம் மேலே பார்த்தது போல் இந்திய பண்பாட்டைக் குறிக்கும் அத்தகைய பெயர்களும் வைக்கப்பட்டுள்ளன. இதுவே, குறுங்கோள் ஒன்றுக்கு சிவ சக்தி எனப் பெயரிட்டிருந்தால் அது அங்கீகரிக்கப்பட்டிருக்கும். ஆனால், நிலாவில் இத்தகைய பெயரை வைப்பது சர்வதேச வானியல் கழகத்தின் விதிகளுக்குப் புறம்பானது.

சர்வதேச வானியல் கழகத்தின் விதிப்படி நிலாவில் இதிகாசம், புராணம், நம்பிக்கை ஆகியவற்றின் பெயர்களை நிலாவில் வைக்கக் கூடாது. ஆகவே, ''பிரதமர் வைத்த அந்தப் பெயர் விதிமுறைகளை மீறியது என்பதால், அந்தப் பெயர் நிராகரிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அது மட்டுமின்றி, தற்போது இந்தியா தரையிறங்கியுள்ள பகுதிக்கு சந்திரயான் போன்ற ஆய்வுகளை இஸ்ரோ மேற்கொள்ளத் தூண்டுதலாக இருந்த அப்துல் கலாம் அல்லது இஸ்ரோ வளர்ச்சியடையக் காரணமான சதீஷ் தவான், யு.ஆர்.ராவ் போன்றோரின் பெயர்கள் வைக்கப்படுவதே மிகப் பொருத்தமாக இருக்கும் எனக் கூறும் அறிவியலாளர் வெங்கடேசன் இந்தப் பெயர் மறுபரிசீலனைக்கு எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கிறார்.

மேலும் விண்வெளியில் மட்டுமின்றி நிலத்திலும் மக்கள் சந்திக்கும் பிரச்சனைகளைத் தீர்க்கும் அறிவியல் திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியம் என்றும் அதற்கு இத்தகைய அணுகுமுறையை வழிவகுக்கும் என்றும் அவர் கூறினார். இதனால் நிலவில் சந்திரயான்-3 விண்கலம் தரையிறங்கிய இடத்திற்கு மோதி வைத்த சிவசக்தி என்ற பெயர் நிலைக்குமா? அதனை சர்வதேச சமூகம் ஏற்குமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஆனால், இதுகுறித்துப் பேசிய பாஜக மாநில செயலாளர் பேராசிரியர் இராம ஸ்ரீவாசன், ''வீனஸ், ஜூபிட்டர் என்று கோள்களுக்கு கிரேக்க கடவுளின் பெயர் இருக்கும் போது நிலாவின் ஒரு பகுதிக்கு இந்து கடவுளின் பெயர் இருக்கக்கூடாதா? என்கிறார். அப்படி வைக்கப்பட்ட போது கேள்வி எழுப்பாத இந்து விரோதிகள், இந்து கடவுள் பெயரை வைத்தவுடன் மட்டும் கேள்வி கேட்கிறார்கள்.

சிவசக்தி என்ற பெயரை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் ஏற்றுக் கொள்ள வேண்டாம். நிலாவில் இதுவரை யாரும் போகாத பகுதிக்கு நாம் சென்றுள்ளோம் என்று கூறுகிறார். மேலும், நாட்டு மக்கள் அனைவரும் சாதி, மத பேதமின்றி இஸ்ரோவின் இந்த வெற்றியைக் கொண்டாடும் போது ஒரு குறிப்பிட்ட மத கடவுளின் பெயரை விக்ரம் லேண்டர் தரையிறங்கிய பகுதிக்கு சூட்டுவது ஏற்படையதல்ல என்று எழுந்து வரும் விமர்சனங்கள் குறித்து அவரிடம் கேட்டோம்.

அதற்கு இந்து மதத்தின் புராணப்படி சிவன் தலையில் நிலா இருப்பதாக ஒரு நம்பிக்கை நிலவுகிறது. சிவன் நிலாவை சுமந்து கொண்டிருப்பதாக நம்பப்படுகிறது. வேறு எந்த கடவுளுக்கும் நிலாவுக்கும் தொடர்பு இல்லை. ஆனால் சிவனுக்கு இருக்கிறது. என்கிறார் பேராசிரியர் இராம ஸ்ரீவாசன். ஆகையால் தான் சிவசக்தி என்று பெயரிடப்பட்டுள்ளது. நிலாவுடனான புராணத் தொடர்பை வைத்து பிரதமர் இந்தப் பெயரை வைத்துள்ளதாகக் கூறுகிறார் அவர். நன்றி:- பிபிசி

# திருமலையில் பௌத்த விகாரை..

(8ம் பக்கத் தொடர்ச்சி) கூறுவோருக்கு இந்தச் செய்திகள் சென்று சேராது. ஒன்று மட்டும் உறுதி 10 ஆண்டுகள் அல்ல, பத்தாயிரம் ஆண்டுகள் கடந்தாலும் இலங்கை முன்னேறப் போவதுமில்லை மக்கள் நிம்மதியாய் வாழப் போவதுமில்லை விகாரைகள் முளைக்கும் தேசமிது!

தமிழர்கள் இனி என்ன செய்ய முடியும். இனி இந்த நாட்டில் ஈழத்தமிழர்களின் தலைவிதியையும் தமிழர் நிலத்தையும் மீட்டெடுக்க நிச்சயம் ஒரு மீட்பர் வருவார். அதுவரை காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com








# பேராயர் மல்கம் ரஞ்சித்:- சரத்வீரசேகரா, விமல்வீரவன்ஸ உதயகம்பன்பல போன்று இனவாதியாக செயற்படுகின்றரா?

பேராயார் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மத ரீதியாக மக்களுக்கு சேவை செய்கின்றாரா ? அல்லது அரசியல் ரீதியாக ஒரு இனரீதியாக ஒரு இனவாதியாக செயற்படுகின்றாரா? அல்லது எந்த நிகழ்சி நிரலிலே இருக்கின்றார் என்பதை தெரியப்படுத்த வேண்மென பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.





பேராயர் வடக்கு, கிழக்கு தமிழருக்கும் இந்தியாவுக்கும் எதிரான நிலைப்பாட்டில் இருக்கின்றாரா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. எனவே மதரீதியாக சேவை செய்பவர் ஒரு சாராருக்காக வாயைத் திறப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என கோவிந்தன் கருணாகரன் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரனின் காரியாலயத்தில் 28 ஆகஸ்ட் 2023 திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளார் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டிலே தற்போது மீண்டும் ஒரு இனக்கலவரம் தோன்றி விடும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் உருவெடுத்திருந்தாலும் இந்திய உளவுப் பிரிவு தங்களது அறிக்கை மூலமாக இலங்கையில் ஒரு இனக்கலவரம் ஏற்படுவதற்கான சாத்திய கூறுகள் இருப்பதாக அறிவித்துள்ளனர்.

இது வழமையாக ஒவ்வொரு தேர்தல் வரும் போது இனவாதத்தை தூண்டி விட்டு அரசியல் செய்வது இந்த நாட்டிலே வழமையாகி விட்டது. 2019 ஜனாதிபதித் தேர்தலின் போதும் நாட்டில் தேவாலயங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களை சாதகமாக பயன்படுத்தி தேசிய பாதுகாப்புடன் சம்மந்தப்பட்ட ஒருவர் ஜனாதிபதியாக வர வேண்டும் என்ற ஒரு பிரளயத்தை கிளப்பி ஜனாதிபதி தேர்தலை வென்றார்கள். இதனை மையமாக வைத்து ஒரு சில சிங்கள இனவாதிகள் தமிழ் நா.உறுப்பினர்களின் வீடுகளை சுற்றி வழைக்க வேண்டும். வடக்கு கிழக்கில் பௌத்தத்திற்கு எதிராக தமிழர்கள் செயற்படுகின்றார்கள் என இன துவேசத்தை கிளப்பி விடுவது மாத்திரமல்லாது கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டிற்கு முன்பு இரு நாட்கள் உதயகம்பன்பிலவும் புத்தபிக்குகளும் ஆர்ப்பாட்டம் செய்தனர் இதனை வன்மையாக கண்டிக்கின்றோம்.

அரசியல் அமைப்பின்படி அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடந்தே ஆக வேண்டும் என்பதுடன் மாகாணசபை தேர்தல் நடக்கக் கூடும். எனவே அடுத்த வருடம் ஒரு தேர்தல் ஆண்டாக இருக்கப் போகின்றது.

இந்த நிலையில் வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகம் என்றால் கொழும்பில் சிங்களவரின் தலைநகரில் தமிழருக்கு என வேலை என உதயகம்மன்பில கேட்கின்றார்? அவர் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும் வடக்கு கிழக்கிலே சிங்களவர்கள் அடாத்தாக வந்து குடியேறியவர்கள் நாங்கள் தமிழர்கள் கொழும்பிலும் ஏனைய தென்பகுதியில் அடாத்தாக வந்து குடியேறவில்லை. கொழும்பு சிங்கள தலைநகரம் வடக்கு கிழக்கு தமிழர்கள் தாயகம் என்று தெரிவிக்கும் நீங்கள், நாடாளுமன்றத்தில் ஒரு பிரேரணையை கொண்டு வந்து வடக்கு, கிழக்கை பிரித்து எங்களை ஒரு தனிநாடாக பிரகடனப்படுத்தவும்.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் இலங்கை வரவுள்ளார். அதேவேளை சீன ஆய்வு கப்பல் வரவுள்ளது. இவ்வாறு மாறிமாறி பூகோள ரீதியாகவும் உள்ளூர் அரசியல் ரீதியாகவும் இலங்கை சிக்கித் தவிக்கின்றது. ஏன் என்றால் இலங்கைக்கு ஒரு உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கையும் இல்லாத அரசாங்கம் ஜனாதிபதியும் செயற்படுகின்றனரா? நடைபெற்றுவரும் இனரீதியான முறுகலை ஜனாதிபதி மௌனமாக பார்த்துக் கொண்டிருப்பது இந்த நாட்டிற்கு சுபீட்சமாக இருக்காது.

பேராயர் மல்கம் ரஞ்சித் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பாலம் அமைக்க இருப்பதாகவும் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடாத்த வேண்டும் என்கின்ற இந்த ஆண்டகை அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு 99 வருட குத்தகைக்கு கொடுக்கும் போதும் இலங்கை வரைபடத்தையே மாற்றி கோல் சிற்றி அமைக்க கடலை மண்போட்டு நிரப்பி சீனாவுக்கு தாரைவார்க்கும் போது வாய் திறக்கவில்லை

அதே போன்று கடந்த காலங்களில் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு நவாலி தேவாலயம் உட்பட தேவாலயங்கள் மீது குண்டுத் தாக்குதல் மற்றும் 2009 முள்ளிவாய்க்காலில் ஒரு இலட்த்து 50 ஆயரம் மக்கள் படுகொலை செய்யப்பட்டபோது மற்றும் வடக்கு கிழக்கில் பல கிறிஸ்தவ வணபிதாக்கள் படுகொலை செய்யப்பட்டபோது பேராயர் வாய் திறக்கவில்லை.

ஆனால் 2019இல் தேவாலய குண்டுதாக்குலுக்கு நீதி கோருகின்றார். அதற்கு நாங்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும். ஆனால் வடக்கு கிழக்கில் இருக்கின்ற ஆயர்களான மன்னார் ஆண்டகையாக இருந்த இராயப்புஜோசப் முள்ளிவாய்க்காலில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டதாக சாட்சியளித்தார். அவ்வாறே மட்டு திருகோணமலை ஆண்டகையாக இருந்த கிங்ஸ்லி சுவாம்பிள்ளை 1990 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிராக இடம் பெற்ற சம்பவங்களுக்கு குரல் கொடுத்தவர். அதேபோன்று தற்போதுள்ள மட்டு ஆயர் பொன்னையா ஆண்டகை அநியாயங்களுக்கு எதிராக குரல் கொடுத்து வருகின்றார். ஆனால் இவர்களுக்கு மேலாக இருக்கின்ற பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சரத்வீரசேகர, உதயகம்பன்பல, விமல் வீரவன்ச போன்று ஒரு குறிப்பிட்ட சாராருக்கு சார்பாகவா அல்லது எந்த நிகழ்சி நிரலிலே இருக்கின்றார் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றார்.